# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2017
இரண்டாம் பதிப்பு - 2018
மூன்றாம் பதிப்பு - 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0151-7

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல. 35/3, கேரகல வீதி, ஹெலும்மஹர, தெல்கொடையில்
அமைந்துள்ள சென்வின் தனியார் நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக்கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
*2019.04.10*

**கண்காணிப்பும் மேற்பார்வையும்** :- **டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்** :- **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்** :- **லெனின் மதிவானம்**
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

:- **யூ.எல். உவைஸ்**
உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**பதிப்பாசிரியர் குழு** :- **கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

:- **கலாநிதி என். இரவீந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் {ஓய்வு}

:- **லெனின் மதிவானம்**
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

:- **முருகு தயாநிதி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம.

**நூலாக்கக் குழு** :- **எஸ். கேசவன்**
ஆசிரியர்,
இரத்மலானை இந்துக் கல்லூரி,
இரத்மலானை.

:- **சி. ரமேஷ்**
ஆசிரியர்,
தெல்லிப்பளை மகஜன கல்லூரி,
யாழ்ப்பாணம்.

:- **ஆர். சதாத்**
ஆசிரியர்,
தி/தாருல் உலூம் மகா வித்யாலயம்,
கிண்ணியா.

:- **டீ. கணேசன்**
ஆசிரியர்,
நோவூட் தமிழ் மகா வித்யாலயம்,
நோவூட்.

**பதிப்பாசிரியர் - மொழி** :- **து. இராஜேந்திரம்**
சிரேஷ்ட விரிவுரையாளர் {ஓய்வு}
திறந்த பல்கலைக்கழகம்.

**சரவை நோக்கு** :- **எம். எஸ்.எம். ஹிஷாம்**
ஆசிரிய ஆலோசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
காலி.

**கணினி வடிவமைப்பு** :- **ஆர். கவியாழினி**
கணினி வடிவமைப்பாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**ஓவியங்கள்** :- **எம். ஜே. எம். மன்சூர்**
பிரதி அதிபர்,
வித்யாலோக மகா வித்யாலயம்,
பலாங்கொட.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**– சுப்பிரமணிய பாரதியார் –**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள் | 1 |
| 2 | உண்மைக்குப் பரிசு | 8 |
| 3 | ஒரு சின்னஞ்சிறு பூச்சி | 17 |
| 4 | இதயம் அழுகிறது | 25 |
| 5 | மருமகனுக்கு விருந்து | 32 |
| 6 | யார் சிறந்தவர்? | 39 |
| 7 | மலைநாட்டுப் பிரயாணம் | 48 |
| 8 | இனியவை கூறல் | 59 |
| 9 | வியக்கும் மனம் வேண்டும் | 67 |
| 10 | செய்யும் தொழிலே தெய்வம் | 75 |

| | | |
|---|---|---|
| 11 | செய்யுளை மனனஞ் செய்யும் வழி | 80 |
| 12 | எறும்புக் குடும்பம் | 86 |
| 13 | தந்தை மகளுக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதம் | 92 |
| 14 | வான் குருவியின் கூடு | 98 |
| 15 | நளவெண்பா | 105 |
| 16 | சகுந்தலை நாடகம் I | 119 |
| 17 | தோற்றுப்பார் | 133 |
| 18 | நகரத்தின் நிழல் | 143 |
| 19 | காட்டு வழி | 157 |
| 20 | சகுந்தலை நாடகம் II | 164 |
| 21 | பிசிராந்தையார் கண்ட சமுதாயக் காட்சி | 177 |

# 1 நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள்

பழக்கடையில் பழங்களை அழகாக அடுக்கி வைத்திருக்கிறார்கள். நாம் நமக்குப் பிடித்த பழங்களை வாங்கிக் கொள்கிறோம். பூக்கடையில் விதவிதமான பூக்களைக் கொட்டி வைத்திருக்கின்றனர். நாம் நமக்குப் பிடித்தமான பூக்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். பெரிய ஓட்டல்களில் விதவிதமான உணவுகளைச் சமைத்து அடுக்கி வைத்திருக்கின்றனர். நமக்குப் பிடித்த உணவைத் தட்டிலேற்றிக் கொள்கிறோம்.

அதேபோல உலகில் பலவகையான எண்ணங்கள் நிறைத்து வைக்கப் பட்டிருக்கின்றன. சுக நினைவுகளை எழுப்பும் எண்ணங்கள், துக்கத்தை மூட்டிவிடும் எண்ணங்கள், சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் தரும் எண்ணங்கள், சோகத்தையும் சோர்வையும் உண்டு பண்ணும் எண்ணங்கள், என்று உலகில் நம் கண்முன் பலவற்றை அடுக்கி வைத்திருக்கின்றனர். காற்றில் மிதக்கவிட்டிருக்கின்றனர். நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம்?

நமக்குப் பிடித்தமானது எது?

கோபக்காரன் என்று பெயர் பெற்றவனையும் தன்னம்பிக்கை இல்லாதவன், கையாலாகாதவன், கவலைப்படுபவன் என்று அழைக்கப்படுபவனையும் பார்த்தால் அவன் உள்ளம் எந்த வகை எண்ணங்களால் நிறைக்கப் பட்டிருக்கிறது என்பது தெரியவரும். சிலரது முகத்தைப் பார்த்தாலே சொல்லிவிடலாம், துக்கம் கோடுகளைப் போட்டிருக்கிறதா, உற்சாகம் தன்னம்பிக்கையை நிலவவிடுகிறதா, என்று; அவர்கள் அழுகிய பழத்தை வாங்குபவர்கள், விலை குறைவாக, வாடிய பூவைத் தெருவிலிருந்து பொறுக்குபவர்கள், ஊசிப்போன உணவை மென்று விழுங்குபவர்கள்.

அவர்கள் எதைத்தேர்ந்தெடுத்தார்கள்? துக்கத்தை, துயரத்தை, பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத அவலத்தை.

இந்தக் கீழ்மட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதில் ஆழ்ந்து போகிறார்கள். மாறாக மேம்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் வாழ்க்கையின் வெற்றிப் பட்டியலில் இடம்பெறுகின்றனர்.

''எனக்கேற்பட்ட நிலை அப்படி. நான் வருத்தப்படாமல் என்ன செய்ய முடியும்?'' என்று சிலர் கேட்பது காதில் விழுகிறது. வருத்தப்படுவது பிரச்சினைகளுக்கு வழி காட்டுவதில்லை. வருத்தத்தை விட்டுவிட்டு, ''இது நிலைமை. இதிலிருந்து மீள நான் என்ன செய்யலாம்'' என்று சிந்திக்கும்போது தான் வழி பிறக்கிறது.

வருத்தப்படுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை அளித்துக் கொள்கிறோம். அப்படி தண்டனை அளித்துக் கொள்வதில் ஒருசிறு சந்தோஷம். வருத்தப்படுவதன் மூலம் பிறர் அனுதாபத்தைப் பெற முயல்கிறோம். அதில் சிறு சந்தோஷம். இவை இரண்டும் வழி தெரியாதவன் நடக்கும் தடுமாற்றப் பாதைகளே.

பயம், கோபம், பொறாமை, குற்றஉணர்வு, கவலை இவற்றைத் தாழ்த்தும் உணர்ச்சிகள் (Negative Emotion) என்று கூறுகிறார்கள். இந்தக் கீழ் உணர்வுகள் மனிதனது சிந்திக்கும் திறனை, சிந்திக்கும் அமைப்பை முடக்கிவிடுகிறது என்று கூறுகிறார்கள் மன சிகிச்சை மருத்துவர்கள். முடக்கப்பட்ட மனம் செயலற்றுப் போகிறது. முடக்கப்படுவது மட்டுமல்ல; நமக்கு நல்ல யோசனைகளையும் நம்பிக்கையையும் கொண்டு தந்து உதவக்கூடிய நமது மனத்தின் வாயிற் கதவை இவை சாத்தி விடுகின்றன.

நேற்று என் நண்பர் கூறினார். ''நல்ல விஷயத்தைச் சொல்லுவோமே. அல்லாததை ஏன் சொல்ல வேண்டும்?'' என்றார்.

'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்று வள்ளுவர் கூறுகிறார். உண்மைதானே? கனியிருக்க, புளிக்கும் காயைக் கடிப்பானேன்? மனத்திற்குள்ளே விடும் சரியான எண்ணங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நம் கையில் இருக்கிறது. பரீட்சையில் பெயிலாகிவிட்ட மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான். பெயிலான மற்றொரு மாணவனோ, 'கணித மேதை ராமானுஜத்தைக்கூட ஆங்கிலத்தில் கும்பகோணம் கல்லூரியில் பெயிலாக்கவில்லையா? என்ன யோக்கியதை இருக்கிறது இந்தப் பரீட்சை முறைக்கு?' என்று எடுத்துக்கொள்கிறான். எது நல்லது என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

'என் மனைவியுடன் வாழ முடியவில்லை. ஓடிவந்து விட்டேன்' என்று சொன்னான் ஒருவன்.

தத்துவஞானி சாக்ரடீஸ் தன் நண்பருடன் நின்றுகொண்டு உரையாடிக் கொண்டிருந்த போது சாக்ரடீஸின் மனைவி முதலில் குப்பையைக் கூட்டி

மேல்மாடியிலிருந்து அவர் தலையில் கொட்டினாள். சற்றுநேரம் கழித்து ஒருவாளி தண்ணீரைக் கொண்டுவந்து உயரே இருந்து அவர் தலையில் ஊற்றினாள். சாக்ரடீஸ் சமாதானமாகக் கூறினார், ''முன்பு இடி இடித்தது, இப்போது மழை பெய்கிறது'' என்று.

இந்த வெளி விஷயம் சாக்ரடீஸின் உள்ளத்தைப் பாதிக்கவில்லை. விஷயங்களில், அதற்குள்ளாக, நன்மை தீமை ஏதும் இல்லை. நாம் அதை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நம் உணர்ச்சிகள் புறப்படுகின்றன.

ஒருவர் வீட்டுக்குப் போகிறீர்கள். அவர் உங்களை மதிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நமது கௌரவம் பாழ்பட்டதாகப் புழுங்குகிறோம். கோபமடைகிறோம். அந்த மனிதரைத் திட்டுகிறோம். பழி வாங்கத் துடிக்கிறோம். அதாவது அந்த மனிதர் உரிய கௌரவத்தை உங்களுக்குத் தரவில்லை. அதனால் உங்கள் கௌரவம் திடீரென்று இறங்கிவிட்டதா? இல்லை, நீங்கள் நேற்று இருந்த அதே மனிதர்தான். அவர் கொடுப்பதனால், வருவதில்லை கௌரவம். நம்மை நாமே மதிப்பதால், புரிந்து கொண்டிருப்பதால் வருவதுதான் அது. அது ஒரு சிறு சம்பவம்; நிகழ்ச்சி. அது நம்மைப் பாதிக்க நாம் அனுமதிக்கலாம். அல்லது ஏதோ தூசு காற்றில் பறப்பதைப் போல நாம் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஏற்பட்ட மனவேதனை நிகழ்ந்த சம்பவத்தால் ஏற்பட்டதல்ல. அதை நாம் எப்படி எடுத்துக் கொண்டோம் என்பதைப் பொறுத்தே வருகிறது.

துறவி ஒருவர் வீட்டுக்குப் பிச்சை கேட்கப் போனார். அந்த வீட்டுக்காரன் அவரைத் திட்டினான். துறவி கூறினார்: ''ஐயா, சற்று நில்லுங்கள். பிச்சை போட்டிருந்தீர் களேயானால் அந்த அரிசி யாருக்குச் சொந்தம்? எனக்குத்தானே! அதேபோல நீங்கள் போட்ட பிச்சையை வாங்க மறுத்திருந்தால் அந்த அரிசி யாருக்குச் சொந்தம்? உங்களுக்குத்தானே! அதுபோல நீங்கள் போட்ட திட்டுக்களை ஏற்க மறுக்கிறேன். அவை உங்களுக்கு சொந்தம். எடுத்துச் செல்லுங்கள். நான் உங்களை - ஒரு நண்பனை - இழந்தேன்'' என்று சொல்லிவிட்டு நடக்கிறார்.

துறவி அவமானப்பட்டவரா என்பதை யோசித்துப் பாருங்கள். எல்லாம் ஒரு சொல்லை, ஒரு சம்பவத்தை, ஒரு பிரச்சினையை எப்படி எடுத்துக் கொள்கிறோம் என்பதையே பொறுத்து இருக்கிறது.



**டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி**
**- நெஞ்சே அஞ்சாதே நீ -**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| ஊசிப்போன | - | பழுதடைந்த, கெட்டுப்போன |
| திட்டுக்கள் | - | ஏச்சுக்கள் |
| சம்பவம் | - | நிகழ்வு |
| கையாலாகாதவன் | - | ஒன்றும் செய்ய இயலாதவன் |
| குற்றவுணர்வு | - | தவறு செய்துவிட்டோம் எனும் எண்ணம் |
| யோக்கியதை | - | அருகதை |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எண்ணங்களின் வகைகள் யாவை?
2. துக்கத்துடன் உற்சாகமின்றியும் தன்னம்பிக்கையற்றும் உள்ள ஒருவர் எத்தகைய எண்ணங்களைத் தேர்ந்தெடுத்திருப்பார்?
3. வெற்றிப் பட்டியலில் ஒருவர் இடம்பெறுவதற்கு செய்யவேண்டியன யாவை?
4. வழி தெரியாது தடுமாறுகிறவர் எவ்வகையில் சந்தோசங்களைப் பெறுகின்றார்?
5. சாக்கிரடீஸ் வாழ்க்கைச் சம்பவத்தின் மூலம், கட்டுரையாசிரியர் உணர்த்த விழைவது யாது?

## செயற்பாடு

மேம்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வெற்றி பெற்ற முக்கிய ஆளுமைகள் பற்றிய விவரங்களைத் தொகுத்து கலந்துரையாடுங்கள்.

# பெயர்ச்சொல் I

## ஆகுபெயர்

ஆத்தி சூடிய ஐயனைப் பணிவோம்.
ஊர் உறங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட வாக்கியங்களில் **ஆத்தி, ஊர்** என்பன ஆத்திமரத்தையும் ஊரையும் உணர்த்தாது அவற்றோடு தொடர்புடைய **பூவையும் மக்களையும்** முறையே உணர்த்தி நின்றன. இவ்வாறு ஒரு பொருளுக்கு இயல்பாய் உள்ள பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு தொன்று தொட்டு ஆகி வருமாயின் அது ஆகுபெயர் எனப்படும்.

### ✸ பொருளாகுபெயர்

மல்லிகை சூடினாள்.

இங்கு முதற்பொருளின் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வருகிறது. அதனால் இதனைப் பொருளாகு பெயர் எனக் கூறுவர்.

### ✸ சினையாகுபெயர்

வெற்றிலை நட்டான்.

வெற்றிலை என்னும் சினையின் பெயர் அதன் முதலாகிய கொடியைக் குறிக்கின்றது. இதனைச் சினையாகு பெயர் எனக் கூறுவர்.

### ✸ இடவாகுபெயர்

இலங்கை வென்றது.

இங்கு இலங்கை என்னும் இடப்பெயர் விளையாடிய வீரர்களுக்கு ஆகி வருதலால் இதனை இடவாகுபெயர் எனக் கூறுவர்.

### ✸ காலவாகுபெயர்

கார்த்திகை பூத்தது.

இங்கு கார்த்திகை என்னும் காலத்தின் பெயர் அக்காலத்தே பூக்கும் கொடிக்கு ஆகி வந்தமையால் இதனைக் காலவாகுபெயர் எனக் கூறுவர்.

### ✸ குணவாகுபெயர்

வெள்ளை பூட்டி உழுதான்.

இங்கு வெள்ளை என்னும் குணத்தின் பெயர் அந்நிறத்தை உடைய எருதைக் குறித்து வந்தமையால் இதனைக் குணவாகுபெயர் எனக் கூறுவர்.

★ **தொழிலாகுபெயர்**

பொரியல் உண்டேன்.

பொரியல் என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலை அடைந்த உணவைக் குறித்து வந்தமையால் இதனைத் தொழிலாகுபெயர் எனக் கூறுவர்.

## ஒரு பொருள் குறித்த பல சொல்

அரசன் வந்தான்.
கொற்றவன் வந்தான்.
மன்னன் வந்தான்.
கோ வந்தான்.
காவலன் வந்தான்.
வேந்தன் வந்தான்.

மேலே உள்ள வாக்கியங்களில் அரசன் என்னும் சொல் சுட்டும் ஒரு பொருளைக் குறிக்க கொற்றவன், மன்னன், கோ, காவலன், வேந்தன் முதலான பல சொற்கள் வந்துள்ளன. இவ்வாறு தமிழ் மொழியில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் உள. இத்தகைய சொற்களைத் தெரிந்து கொள்வோம்.

| | | |
|---|---|---|
| அருள் | : | இரக்கம், கருணை, தயவு, கிருபை |
| அடவி | : | காடு, கானகம், ஆரணியம், சுரம், கான் |
| அழல் | : | அக்கினி, கனல், தழல், தேயு, தீ, நெருப்பு |
| ஆபரணம் | : | ஆரம், இழை, கலன், நகை, பூண் |
| ஆற்றல் | : | உரம், வல்லமை, வலிமை, சக்தி |
| இரத்தம் | : | குருதி, சோரி, உதிரம், செந்நீர், கறை |
| குற்றம் | : | ஆசு, கசடு, களங்கம், தவறு, பிழை |
| கூந்தல் | : | குழல், கேசம், அளகம் |
| சுத்தம் | : | புனிதம், தூய்மை, பரிசுத்தம், மாசின்மை |
| சினேகிதர் | : | நண்பர், தோழர், கேள்வர் |
| துன்பம் | : | அல்லல், இன்னல், இடர், துயர், இடும்பை |
| நித்திரை | : | துயில், உறக்கம், அனந்தல், தூக்கம் |
| நீர் | : | அப்பு, சலம், புனல், சிந்து, தீர்த்தம் |
| மலை | : | அசலம், கிரி, பருவதம், குன்று, விலங்கல், சிகரம் |

## பயிற்சி

1. பின்வரும் பொருள்களைக் குறிக்க வழங்கும் வேறு மூன்று சொற்கள் தருக.

1. ஒளி
2. இகழ்தல்
3. சொல்
4. சாதல்
5. சிங்கம்
6. சோலை
7. ஞானம்
8. தடாகம்
9. பெண்
10. வாசனை

2. பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லினைத் தெரிவு செய்து கோடிடுக.

1. பகைவர், ஏதிலார், எதிரிகள், தெவ்வர், தீயவர்
2. பூ, மலர், படம், புஷ்பம், வீ
3. அந்திப்பொழுது, மாலை, வைகறை, சாயங்காலம், முன்னிரவு
4. போர், யுத்தம், சரம், சண்டை, அமர்
5. உவரி, கடல், சாகரம், ஆர்ப்பு, புணரி
6. மேகம், சுரும்பு, கொண்டல், கார், முகில்
7. கயவர், கீழோர், பாமரர், தீயோர், சிறியோர்
8. வயல், பழனம், செறு, தழை, கழனி

# 2 உண்மைக்குப் பரிசு

இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்கள் நேர்மையாக ஆட்சி செலுத்தியவர். அவர் மக்கள் குறைகளை நேரில் அறிந்துகொள்ளுவார். தேவைப்படும் உதவிகளைத் தாமே செய்து கொடுப்பார். தமது தலைமையை ஏற்று வாழும் மக்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்பது அவரது எண்ணம். ''மக்கள் பணி செய்பவன் தான் மக்கள் தலைவன்'' என்று அவர் அடிக்கடி கூறிக்கொள்வார்; மக்கள் அறிந்துகொள்ளாத விதத்தில் இரவு நேரங்களில் மாறுவேடம் பூண்டு நகரைச் சுற்றி வருவார்.

ஒருநாள் உமர் (றழி) அவர்கள் வழக்கம்போல் நகரசோதனை செய்யப் புறப்பட்டுச் சென்றார். ஒரு வீட்டிலிருந்து பேச்சுக் குரல்கள் கேட்டன. இவ்வேளையில் என்ன பேசிக்கொள்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளக் கலீபா விரும்பினார். வீட்டிற்குச் சமீபமாகச் சென்றார். பேச்சுகள் தெளிவாகக் கேட்டன. வீட்டினுள்ளே ஒரு தாயும் மகளும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

**தாய்:** மகளே, இன்று நாம் கறந்த பால் போதாது; மிகவும் குறைவாக இருக்கின்றது; கொஞ்சம் தண்ணீரைக் கொண்டுவந்து பாலிலே விடு. கூடுதலாகப் பாலை விற்றால், பணமும் அதிகமாகக் கிடைக்கும்.

**மகள்:** தாயே, பாலிலே தண்ணீரைக் கலப்பது குற்றமல்லவா? பாலில் நீர் கலக்கக் கூடாதென்று கலீபா அவர்கள் கண்டிப்பான கட்டளை இட்டிருக்கிறாரல்லவா? குற்றமான ஒரு காரியத்தை நாம் செய்யலாமா?




**தாய்:** மகளே, நீ உலகம் தெரியாதவள். கலீபா என்ன பார்த்துக்கொண்டா இருக்கிறார்? வீட்டில் நாம் இருவர் மட்டுந்தானே இருக்கிறோம்? நாம் தண்ணீர் கலப்பது யாருக்குத் தெரியும்?

**மகள்:** அம்மா, கலீபா பார்க்கவில்லை என்பதற்காக நாம் தவறு செய்யலாமா? கலீபா பார்க்காவிட்டாலும் நம்மைப் படைத்த அல்லாஹ் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறான்? அல்லாஹ்வுக்கு மாறான செயலை நான் செய்யமாட்டேன். ''நமது செயல்களுக்கு அல்லாஹ் நிச்சயங் கூலி தருவான்'' என்று நீங்கள் தானே கூறுவீர்கள்!

வீட்டினுள்ளே நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடலைக் கலீபா கேட்டார். அந்த மகளின் பதில் அவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சத்தமில்லாது அந்த வீட்டின் கதவில்ஓர்அடையாளம் இட்டார். பின் அங்கிருந்து திரும்பித் தம் இல்லம் வந்து சேர்ந்தார்.

மறுநாள், பொழுது புலர்ந்தது. அதிகாலையிலே கலீபா எழுந்தார்; அல்லாஹ்வைத் தொழுதார்; தமது காலைக் கடமைகளை முடித்துக்கொண்டார்; மக்கள் பணிக்காக அலுவலகத்தில் அமர்ந்தார்; ஒரு பணியாளனை அழைத்தார்; தாம் இரவு அடையாளமிட்ட வீட்டின் குறிப்புகளை அவனிடம் கூறினார். ''அங்கு ஒரு தாயும் மகளும் இருப்பார்கள். அவ்விருவரையும் அழைத்து வா'' என்று ஆணையிட்டார்.



கலீபாவின் உத்தரவுப்படி பணியாளன் அந்த வீட்டை அடையாளங் கண்டு கொண்டான். வீட்டிற்குச் சென்று தாயையும் மகளையும் வரும்படி கலீபா உத்தரவிட்டிருக்கிறார் என்று கூறினான்.

பணியாளனின் சொல்லைக் கேட்ட தாய் பதறினாள். ''என்ன நடந்தது? இதற் கிடையில் கலீபாவிடம் முறையிட்டவர்கள் யார்? நான் எப்படிப் பொய் சொல்வேன்?'' என்று தன் மகளிடம் கேட்டாள்.

''நான் தானே சொன்னேன், பாலிலே தண்ணீர் கலப்பது பாவம் என்று! இப்போது கலீபாவிடஞ் செல்வோம், அவர் தருந் தண்டனையைப் பெறுவோம்,'' என்று மகள் கூறினாள்.

தாயும் மகளுங் கலீபாவின் சமூகத்திற்கு வந்தனர்; குனிந்த தலை நிமிராது நின்றனர். ''என்ன நடந்தது?'' எனக் கலீபா விசாரித்தார். நடந்தவைகளை மறைக்க அந்தத் தாயினால் முடியவில்லை. மறைத்தால் கூடுதலான தண்டனை கிடைக்குமோ என்று பயந்தாள்; நடந்ததை அப்படியே கூறிவிடுவது என்ற முடிவுக்கு வந்தாள்; தன் மகளையே சொல்லும்படி கூறினாள்.

இவர்களின் தயக்கத்தைக் கலீபா அறிந்தார். தாம் எல்லாவற்றையும் அவதானித்ததாகக் கூறினார். தாய்க்கும் மகளுக்கும் இடையே நடந்த உரையாடலை எடுத்துச் சொன்னார். மகளின் பண்புகளைப் புகழ்ந்தார். ''தவறு செய்வதை அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருக்கிறான்'' என்று கூறியதைப் பாராட்டினார். ''தவறு செய்ய வசதி இருந்தும் அதைச் செய்யாமல் விடுவதே நன்று'' என்றுங் கூறினார். அல்லாஹ் மீது அப்பெண் வைத்திருந்த பக்தியை வியந்தார்; உண்மை பேசியதற்காகச் சன்மானம் ஒன்றைக் கொடுப்பதற்கு முடிவு செய்தார்.

தம் அருமை மைந்தனை அழைத்தார். ''மகனே இந்தப் பெண் சிறந்த பண்பும் ஒழுக்கமும் உள்ளவள்; அல்லாஹ்வின் மீது அதிக பக்தி உள்ளவள்; பொய் சொல்லமாட்டாள்; ஆனால், ஏழை. இப்பெண்ணை நீ மனைவி ஆக்கிக்கொள்ள விரும்புகிறாயா?'' என்று கேட்டார். மகனும் சம்மதித்தார்.

கலீபா அந்தத் தாயைப் பார்த்து ''பெண்ணே, உன் மகளை எனது மருமகள் ஆக்கிக்கொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதந்தானா?'' என்றுகேட்டார். தாய் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினாள். தனக்கு இப்படி ஒரு சம்பந்தம் கிடைக்கும் என அவள் எதிர்பார்க்கவில்லை. தன் மகளின் முகத்தைப் பார்த்தாள். நாணத்தால் அவள் தலை குனிந்தாள். உண்மை பேசியதற்குச் சன்மானமாக அவளுக்குக் கலீபா அவர்கள் தம் மகனைத் திருமணம் முடித்துக்கொடுத்தார்.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| மாறுவேடம் | – | ஒருவர் தனது உண்மையான தோற்றத்தை பிறர் அறியாத வகையில் மறைத்திடும் வேற்றுருவம் |
| கூலி | – | சம்பளம் |
| பணியாள் | – | வேலையாள் |
| ஆணை | – | கட்டளை |
| சன்மானம் | – | பரிசு/வெகுமானம் |
| சம்பந்தம் | – | தொடர்பு |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கலீபா உமர்(றழி) அவர்கள் தலைமை குறித்துக் கொண்டுள்ள கருத்து யாது?
2. மகளின் பண்புகள் என எவற்றைக் கலீபா கூறுகிறார்?
3. மகளின் உண்மைக்குக் கிடைத்த பரிசு யாது?
4. கலீபா உமர் (றழி) சிறந்த தலைவர் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக.
5. பின்வரும் சொற்களைக் கொண்டு பொருத்தமான வாக்கியங்கள் அமைக்குக.
   * நகரசோதனை
   * மாறுவேடம்
   * சன்மானம்

## செயற்பாடு

இதனை ஒரு நாடகப் பிரதியாக ஆக்கி, வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

# பெயர்ச்சொல் II

## ஆக்கப்பெயர்

தொழிலாளி
நோயாளி
விருந்தாளி

மேற்குறிப்பிட்ட சொற்கள் முறையே தொழில், நோய், விருந்து முதலான பெயர்ச் சொற்களுடன் ஆளி என்னும் விகுதி சேர்த்து உருவாக்கப்பட்ட சொற்கள் ஆகும். இது போல பயில், காண், நீள் முதலான வினைச் சொற்களுடன் 'சி' என்னும் விகுதி சேர்த்து பயிற்சி, காட்சி, நீட்சி முதலான சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு பெயர் அல்லது வினையுடன் விகுதி சேர்த்து உருவாக்கப்படும் பெயர்ச் சொல் ஆக்கப்பெயர் எனப்படும்.

### பயிற்சி

1. பெயர்ச்சொல்லுடன் சாலி, தனம், துவம், ஆளன் முதலான விகுதிகளை இணைத்து ஆக்கப் பெயர்களை உருவாக்கிக் கொள்க.
2. வினைச்சொல்லுடன் சி, ஐ, கை, வை முதலான விகுதிகளை இணைத்து ஆக்கப்பெயர்களை உருவாக்கிக் கொள்க.

## கூட்டுப்பெயர்

பாடசாலை
பல்கலைக்கழகம்
ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்

மேற்குறிப்பிட்ட சொற்கள் இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து உருவாக்கப்பட்ட பெயர்ச்சொற்களாகும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டு இச்சொல் ஒவ்வொன்றும் உருவாக்கப்பட்டிருந்தாலும் ஒரு சொல்லாகவே செயற்படுவதைக் காணலாம். அதாவது தனிப்பெயர் போன்றே இச்சொற்கள் இயங்குகின்றன. இவ்வாறு உருவாக்கப்படும் பெயர்ச்சொற்கள் கூட்டுப்பெயர் எனப்படும். அதாவது பெயர்ச்சொல்லுடன் பிறிதொரு பெயர்ச் சொல்லை இணைத்து அல்லது ஒரு வினைச் சொல்லுடன் ஒரு பெயர்ச்

சொல்லை இணைத்து உருவாக்கப்படும் பெயர்ச்சொல் **கூட்டுப்பெயர்** எனப்படும்.

உதாரணம்:-

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | + | **பெயர்** | = | **பெயர்** |
| **புகை** | + | **வண்டி** | = | **புகைவண்டி** |
| **வான்** | + | **ஒலி** | = | **வானொலி** |
| **வானம்** | + | **வில்** | = | **வானவில்** |

| | | | | |
|---|---|---|---|---|
| **வினை** | + | **பெயர்** | = | **பெயர்** |
| **எறி** | + | **கணை** | = | **எறிகணை** |
| **சுடு** | + | **கலன்** | = | **சுடுகலன்** |
| **எழுது** | + | **கோல்** | = | **எழுதுகோல்** |

## பயிற்சி

பெயரும் பெயரும் இணைந்து உருவாகும் கூட்டுப்பெயர்ச்சொற்கள் ஐந்து தருக.

## பந்தி எழுதுதல்

யாதேனும் ஒரு விடயத்தை விளக்கியும் விரித்தும் ஒழுங்குமுறையில் எழுதுவதற்குரிய அமைப்பே பந்தியாகும். கட்டுரையின் பகுதிகளாகப் பந்திகள் அமைகின்றன. எனவே கட்டுரை எழுதப் பயில்வதற்கு முதற்படி பந்திகளை எழுதப் பயில்வதாகும்.

பந்தி என்பது எடுத்துக்கொண்ட ஒரு விடயத்தை மட்டும் விபரிப்பதாக அமையும். பெரும்பாலும் பந்தியின் முதல் வாக்கியம் அப்பந்தி கூறும் விடயம் என்ன என்பதனை வாசகருக்கு தெரியப்படுத்துவதாயிருக்கும். தொடர்ந்து வரும் வாக்கியங்கள் அவ்விடயத்தை விரித்து விளக்கும். பந்தியில் வாக்கியங்கள் ஓர் ஒழுங்குமுறையில் அமைந்திருத்தல் அவசியம். சில சந்தர்ப்பங்களில் பந்தியில்

கூறும் விடயத்தை தொகுத்துக் குறிப்பிடும் வகையில் பிரதான கருத்தைக்கூறும் வாக்கியத்தைப் பந்தியின் இறுதியில் எழுதுவதுமுண்டு.

பின்வரும் இரண்டு பந்திகளையும் கவனமாக அவதானிப்போம்.

1. மாந்தரை ஒழுக்கநெறியில் நிறுத்துதற்கு நாடகம் ஒரு சிறந்த கருவியாகும் என்பர். நல்ல நாடகங்களைக் காணும் மக்கள் அறத்தாறறிந்து ஒழுகத் தலைப்படுவர். உயிர்க்கு நலம் பயக்கும் உயரிய உண்மைகளைக் கொண்ட கதைகளே முற்காலத்தில் நாடகமேடைகளில் நடிக்கப்பட்டமையால், மக்கள் பெரும்பாலும் நன்மையில் நாட்டமும் தீமையில் அச்சமும் உடையவராய் வாழ்ந்தார்கள். ஆனால் இக்காலத்தில் புன்னெறிக்கப்பட்டோரை இன்புறுத்திப் பொருள் கவரும் நோக்கமே பெரும்பாலும் நாடகசாலையை இயக்குகின்றது. அதனாலேயே தற்காலத்தில் நாடகங்களைக் காண்பதுவும் தீதென்று தக்கோர் கருதுகின்றனர்.

**டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை**

2. பலகாலங் காற்றினால் அசைக்கப்படாத எத்தகைய மரமும் உறுதியாய் நிற்பதில்லை. ஆனால், அடுத்தடுத்துக் காற்றினால் அசைக்கப்படும் மரமோ உரம் ஏறப்பெற்று நிலத்திலே அழுத்தமாக வேர் ஊன்றுகிறது. நாற்புறமும் அடைப்பாக உள்ள பள்ளத்தாக்குகளில் வளரும் மரங்கள் எளிதிலே முறிந்துவிடும் இயல்பின. ஆகவே, அச்சத்துக்கு ஏதுவான நிகழ்ச்சிகளின் நடுவே உயிர்வாழப் பெறுவதே நல்லோன் ஒருவனுக்கு நன்மையை அளிக்கின்றது. ஏனென்றால் அவற்றின் நடுவிலிருந்து பழக அவன் அஞ்சா நெஞ்சினன் ஆகின்றான். மேலும் எந்தத் துன்பத்தையும் துன்பமாகக் கருதாமையிலிருந்து எத்தகைய இடர்வரினும் அதனைப் பொறுக்கவுங் கற்றுக் கொள்கின்றான்.

**மறைமலை அடிகள்**

இங்கு முதலாவது பந்தியில் பிரதான விடயத்தை முதலில் கூறிவிட்டு பின்னர் விபரிக்கும் முறையையும் இரண்டாவதில் முதலில் விபரித்து பின்னர் இறுதியில் பிரதான விடயத்தைக் கூறும் முறையையும் அவதானித்தோமல்லவா?

இவ்விரு முறைகளைப் பின்பற்றியும் பந்திகளை எழுத முடியும்.

**பந்தியின் பண்புகள்**

**சிறந்த பந்தியொன்று பின்வரும் பண்புகளைக் கொண்டதாக அமையும்:**

★ தலைமைக் கருத்தொன்றைக் கொண்டிருக்கும்.

★ தலைமைக் கருத்தை ஐயந்திரிபற உறுதியாக முன்வைக்கும்.

★ பொருத்தமான துணைக் கருத்துக்களை, உதாரணங்களை, நியாயத்தர்க்கத்தை, விளக்கத்தைக் கொண்டிருக்கும்.

★ வாசகரின் மனதில் எழக்கூடிய வினாக்களுக்கு விடை தரக்கூடிய வகையில் பந்தி அமைந்திருக்கும்.

மேலே நீங்கள் வாசித்த இரண்டு பந்திகளும் மேற்படி பண்புகளைக் கொண்டிருக் கின்றனவா என ஆராய்ந்து பாருங்கள்.

**பந்தி எழுதும் படிமுறைகள்**

பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றி நல்ல பந்திகளை எழுதப் பழகுவோம்:

படி - 1 பந்தியின் தலைமைக் கருத்தை வாசகர் மனத்தில் பதியச் செய்யும் வகையில் முதல் வாக்கியத்தை எழுதுதல்

படி - 2 தலைமைக் கருத்தை ஐயந்திரிபற உறுதியாகத் தெளிவுபடுத்துதல்

படி - 3 வாசிப்பவரின் மனதில் எழக்கூடிய வினாக்களை ஊகித்து, அவற்றிற்கு விடை தரக்கூடிய வகையில் எழுதுதல்

படி - 4 பந்தியை வாசித்து திருத்தி மீள எழுதுதல்

**பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிகள்**

எடுத்துக் கொண்ட தலைப்பிற்கும் நோக்கத்திற்கும் ஏற்றவாறு பந்திகளைப் பல வழிகளில் விரித்து வளர்க்கலாம். அவ்வழிகள் கீழே தரப்படுகின்றன.

♦ விபரங்கள் தந்து விரித்தல்
♦ ஒற்றுமை, வேற்றுமை காட்டி விரித்தல்
♦ உதாரணங்காட்டி விரித்தல்
♦ நிகழ்ச்சிகளை விவரித்து விரித்தல்
♦ நியாயங்கூறி விரித்தல்
♦ விளக்கங்கூறி விரித்தல்
♦ காரண காரியங்கள் கூறி விரித்தல்

**பந்தியில் தவிர்க்கப்பட வேண்டியவை**

**பந்தியொன்றை எழுதும்போது பின்வரும் விடயங்களைத் தவிர்த்தல் அவசியமாகும்:**

- எழுதிய விடயத்தையே மீண்டும் மீண்டும் எழுதுதல்
- தேவைக்கு அதிகமாக எழுதுதல்
- எழுதிய விடயத்திற்கு முரணாக எழுதுதல்
- பிரதான கருத்திற்கு அவசியமற்ற / பொருத்தமற்ற விடயங்களை எழுதுதல்
- தேவையான அளவிற்கு விளக்கம் இன்றி எழுதுதல்
- தெளிவற்ற விதத்தில் எழுதுதல்



## பயிற்சி

1. ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களை பொருள்தரக்கூடிய பந்தியாக ஒழுங்குபடுத்துக.

அ. அத்தோடு அவன்முகம் வெயிலிற் காய்ந்து கருமையுற்று விளங்கும்.

ஆ. பாம்பாட்டிகள் பாம்புக் கடிக்குரிய சிகிச்சையை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பது உண்மையே.

இ. நாம் பாம்பாட்டியை இலகுவில் இனங்கண்டுகொள்ள முடியும்.

ஈ. ஆனால் மந்திரத்தினால் பாம்புகளைத் தீங்கு விளைவிக்காமற் செய்கின்றன ரென்று எண்ணுவது தவறாகும்.

உ. அவனுடைய உடையும் தோற்றமும் ஏனைய மக்களுடைய உடையிலும் தோற்றத்திலுமிருந்து வேறுபட்டிருக்கும்.

2. பின்வரும் தலையங்கங்களுக்குப் பொருத்தமாக ஐம்பது சொற்கள் கொண்ட ஒவ்வொரு பந்தி எழுதுக.

அ. தாவரங்களின் முக்கியத்துவம்

ஆ. தொலைக்காட்சியின் பாதகங்கள்

இ. தாய்மொழி கற்றலின் அவசியம்

ஈ. வாசிப்பதனால் பூரணமடையலாம்

உ. விஞ்ஞான வளர்ச்சியின் நன்மைகள்

# 3 ஒரு சின்னஞ்சிறு பூச்சி

நான் என் வீட்டு விறாந்தையில் பாய் விரித்து, படுத்தவாறு அன்றைய பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தேன். எனக்குப் பக்கத்தில் எனது ஐந்து வயது மகன் விளையாடிக்கொண்டிருந்தான். மாலை நாலுமணியிருக்கும், பத்திரிகைகளை வாசித்து முடித்த எனக்கு நித்திரை கண்களை இழுத்தது. நான் நித்திரையை முறிப்பதற்காக பத்திரிகைகளை பக்கத்தில் மடித்துப் போட்டு விட்டு, மகன் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

மகனுக்குக் காலையில் அம்புவில்லு செய்து கொடுத்திருந்தேன். அவன் அம்புத்தடியை ஒரு கையில் வைத்திருந்தான். அது ஒரு அடி நீளம் இருக்கும். அவனுடைய மறுகையில் சோக் துண்டு இருந்தது. அதனால் அவன் நிலத்தில் கிறுக்கிக்கொண்டிருந்தான். அப்போது அவனைநோக்கி ஒருபூச்சி சுறுசுறுப்பாக ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. அதைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவன், ஒரு யோசனையுடன் கையில் இருந்த சோக்கால் தனக்குப் பக்கத்தில் ஒரு வட்டம் போட்டான். பின்பு, அம்புத்தடியால் அந்தப் பூச்சியை அந்த வட்டத்தின் மத்தியில் தட்டிக்கொண்டு வந்துவிட்டு, அதையே அவதானித்துக் கொண்டிருந்தான். நானும் அந்தப் பூச்சியைப் பார்த்தேன். பப்பாளி விதை யளவு உடம்பு, அவ்வுடம்பு மட்டும் சிவப்பு நிறம், மற்ற உறுப்புக்கள் கறுப்பு நிறம். குண்டூசியின் குண்டுப் பருமன் தலையும், கடைக்கண் இமை மயிர் ஒத்த சின்னட்டிக் கால்களும். நான் இதற்குமுன் அப்பூச்சியைக் கண்டதில்லை. அது அவன் விட்ட இடத்தில் நிற்கவில்லை. அது ஊர்ந்து வந்த வேகத்திலும் அதிக வேகத்தில் வெளியில் வந்தது. அவன் அதை விடவில்லை. அம்புத்தடியால் தட்டித்தட்டி விடும்போதெல்லாம், அது புரண்டு நெளிந்து திரும்பவும் திரும்பவும் வெளியில் வரவே முயற்சித்துக் கொண்டிருந்தது.



''என்ன தம்பி செய்கிறாய்'' என்று மகனிடம் கேட்டேன்.

''இந்தப்பூச்சியை புடிச்சு வைக்கிறன் அப்பா, அது ஓடி ஓடி வெளியில் வருகுது'' என்று கூறிவிட்டு, அதை தன் வட்டத்துள்ளே தள்ளித்தள்ளி விட்டான்.

''இஞ்சை பாருங்கப்பா, இது என்ரை அம்பைக் கடிக்குது'' என்றான். பார்த்தேன். அப்பூச்சி அம்பின் கூர்முனையைக் கால்களால் கட்டிப்பிடித்து தன் சிறிய வாயால் கடித்துக்கொண்டுதான் இருந்தது. பின்பு திரும்பி வெளியில் ஊர்ந்தது. எனக்கு அப்பூச்சியைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

எனது மகன் அப்பூச்சியைவிட ஆயிரம் மடங்கு பெரிய உருவம். அவனுடைய அம்பு அதைவிட நூறு மடங்கு பெரியதாக இருக்கும். அப்பூச்சிக்கு கண்கள் இருக்கின்றன. மகனின் பூதாகர உருவத்தையும் அம்பின் பாரிய தோற்றத்தையும் அது நிச்சயம் கண்டிருக்கும். ஆனால் அது சற்றும் பயம் கொண்டதாக தெரியவில்லை. அதன் ஒரே இலட்சியம் என் மகன் இட்ட சிறை வட்டத்துள் இருந்து வெளியேறித் தன் வழியே செல்வதுதான். அது சளைக்கவில்லை. ஓயவில்லை. மகன் தட்டித்தட்டி விடவிட அது இன்னும் இன்னும் வேகம்கொண்டு இயங்கியது. என் மகன் களைத்துப்போய்விட்டான். தன் நோக்கம் சரிப்போகவில்லை என்று அவன் உணர்ந்ததும் அப்பூச்சியின் மேல் அவனுக்கு பெரும் ஆத்திரம். அவன் முகத்தில் அது தெரிந்தது. அவன் தன் இறுதி முயற்சியாக அப்பூச்சியை வட்டத்துக்குள், அம்பினால் இழுத்துவிட்டான்.

''இதில் கெட, இல்லாட்டி உன்னை கொண்டுபோடுவன்'' என்று அதைப் பயமுறுத்தி விட்டு, இயமன்போல் அதைப்பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அப்பூச்சி வெளியேதான் போய்கொண்டிருந்தது.

உடனே அவன், அதைத் தன் அம்பினால் தட்டி இழுத்து வட்டத்தின் நடுவில் விட்டு, அதை நசித்துவிட்டான். அதன் வயிறு பிய்ந்து, சதை நிலத்தோடு ஒட்டிக்கொண்டது. அது சாகவில்லை; அரை உயிரோடும் வெளிநோக்கித் தன்கால்களை எட்டி வலித்து ஊர முனைந்துகொண்டிருந்தது.

நான் அந்தப்பூச்சியை மனத்துடிப்போடு உற்று நோக்கினேன். அந்த அற்ப உயிருக்குள் எவ்வளவு தீட்சண்யமான வைரம் கொண்ட நெஞ்சு. என் மகன் அதன் எதிரி; எதிரியின் பாரிய உருவத்திலும், இயக்கத்திலும், வெருண்டு கொள்ளாத தைரியம் அதன் உதிரத்திலும், தசையிலும் அடிமை கொள்ள முடியாத வீறார்ந்த உணர்வுகள் எங்கிருந்து வந்ததோ?

அது குறை உயிரோடும் வெளி ஊர்ந்து செல்ல முனைவதைக் காண என் மகனுக்கு தாங்கமுடியவில்லை.

''செத்துப்போ!'' என்று கூறி அம்பினால் நசித்து அதைக் கொன்றுவிட்டான்.

''ஏன் தம்பி அதைக்கொன்றனீ?''

''அது நான் வைச்ச வட்டத்துக்குள்ளே நிற்குதில்லை அப்பா! பொல்லாத பூச்சி'' என்று கூறிய அவன் தொனியில் திருப்தி இல்லாதது வெளிப்பட்டது.

''யாருக்கு வெற்றி, உனக்கா? பூச்சிக்கா!'' என்று கேட்டேன்.

''எனக்குத்தான்!'' என்றான் எரிச்சலோடு.

அவன் கூறியதைக் கேட்டு நான் சிரித்தேன்.

''ஏன் அப்பா சிரிக்கிறீங்க?'' என்று என்னைக் கோபத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

''உனக்கு எப்படி வெற்றி?''

''நான் அதைக் கொண்டு விட்டனே?''

''இல்லை மகனே; உன்னால் அதனோடு போராட முடியாததினால் தான் அதைக் கொன்றாய். இந்தப் பூச்சிக்கு மீண்டும் உயிர் வந்தால் என்ன செய்யும்?''

''வெளியில்தான் அப்பா அந்தப் பூச்சி போகும்!''

''அதுதான் சொன்னேன். உனக்குத்தான் தோல்வி!''

''இல்லை அப்பா!'' என்று மனஞ்சலித்தான்.

''இல்லை மகனே! உன்னால் அதை வெல்லமுடியாது''

என்று அடித்துக் கூறினேன். அவன் மௌனமாக, இறந்து கிடக்கும் அதைப்பார்த்துக் கொண்டிருந்தான். நானும் மௌனமாக அதை பார்த்துக் கொண்டிருந்தேன். என் நெஞ்சுக்குள் அந்தச் சின்னஞ் சிறிய பூச்சி உயிரோடு ஊரத் தொடங்கியது; ஊர்ந்து கொண்டே இருக்கிறது.



**யோ. பெனடிக்ற் பாலன்**

**- தலைவிதியை பறிகொடுத்தோர் -**

## அரும்பதங்கள்

விறாந்தை - வீட்டின் முன் பகுதியில் உள்ள ஓய்வு எடுக்கும் இடம்

பூதாகர - பருத்த, மிகப்பெரிய

தீட்சண்யமான - கூர்மையான

வீறார்ந்த - பெருமிதமான

உதிரம் - இரத்தம்



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சின்னப் பூச்சியின் உருவ அமைப்பை கதாசிரியர் எவ்வாறு வருணிக்கின்றார்?
2. பூச்சியின் மேலே மகன் ஆத்திரம் கொள்ளக் காரணம் யாது?
3. ''வெற்றி எனக்குத்தான்'' என்று எந்த அடிப்படையில் மகன் கூறினான்?
4. ''வெற்றி பூச்சிக்குத்தான்'' என்று தந்தை கூறியதற்குக் காரணம் யாது?
5. இந்தக் குட்டிக்கதை உணர்த்த முயலும் விழுமியம் யாது?

## செயற்பாடு

பூச்சியே வெற்றிபெற்றது என்னும் தந்தையின் கருத்துத் தொடர்பாகக் கலந்துரையாடுக.

# வேற்றுமை I

## ஆறாம் வேற்றுமை

**பசுவினது கண்**
**தமிழ்ச் சான்றோரது பேரவை**
**சிறுமியது நினைவாற்றல்**

இங்கு பசு, தமிழ்சான்றோர், சிறுமி முதலான சொற்கள் அது என்னும் உருபை ஏற்று வந்துள்ளன. அது என்னும் உருபு ஆறாம் வேற்றுமையை உணர்த்தி வரும். அத்துடன் பழந்தமிழ் இலக்கியத்தில் ஆது, அ என்னும் உருபுகளும் ஆறாம் வேற்றுமையை உணர்த்தி நின்றன. இவற்றில் 'அது', 'ஆது' என்பன ஒருமைக்கும் 'அ' என்பது பன்மைக்கும் வரும் உருபு ஆகும்.

சிறுபான்மையாக 'அது' உருபு உயர்திணை ஒருமை, பன்மைப் பெயர்களையும் கொள்ளும்.

உதாரணம்:- அரனது தோழன்
அடியாரது தொண்டர்கள்

'உடைய' என்பது ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபாகும்.

உதாரணம்:- தமிழ்ச்செல்வனுடைய புத்தகம்

மேற்குறிப்பிட்ட வாக்கியங்களில் ஆறாம் வேற்றுமை உருபுகள் கிழமைப் பொருளில் வந்துள்ளன. கிழமைப் பொருள் என்பது உடைமைப் பொருள் என்று பொருட்படும். கிழமைப் பொருளைத் தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகையாகப் பகுத்து நோக்கலாம். தற்கிழமை என்பது பிரிக்கமுடியாதது.

உதாரணம்:- இராமனது கருமை

பிறிதின் கிழமை என்பது பிரிக்கக்கூடியது.

உதாரணம்:- தமிழ்க்கவியினது புத்தகம்

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் ஆறாம் வேற்றுமை உருபை அல்லது சொல்லுருபை ஏற்றுள்ள சொற்கள் உணர்த்தும் பொருள்களை எழுதுக.**

1. திருமாறனது கரங்கள் வலிமையானவை.
2. துரியோதனனது தோழன் கன்னன் ஆவான்.
3. அப்துல்காதரது பிறந்த நாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.
4. சோழனது குதிரைப்படை பாண்டிய நாட்டுக்குச் சென்றது.
5. அறிவுமதியினுடைய வீட்டை நோக்கி நடந்தோம்.
6. கூட்டத்தாருக்கு நாவலரது வரவு மகிழ்ச்சியை அளித்தது.
7. கறிக்குத் தூவப்பட்ட மிளகாயது பொடி காரமானது.
8. முதலமைச்சரது வாசஸ்தலம் மக்களால் நிரம்பி வழிந்தது.
9. நதிக்கரையில் பறவைகளது கூட்டம் அதிகம் காணப்பட்டது.
10. மரங்களது தொகுதியில் மான்களும் காணப்பட்டன.

## பல பொருள் குறித்த ஒரு சொல்

திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்றேன். திங்கள் - ஒரு நாள்

கார்த்திகைத் திங்களில் சிறுகோயில்கள் விளக்கொளியில் மின்னின. திங்கள் - மாதம்

வானில் திங்கள் பால் போல ஒளிர்ந்தது. திங்கள் - சந்திரன்

மேலே தரப்பட்ட உதாரணங்களில் திங்கள் என்னும் சொல்லானது ஒருநாள், மாதம், சந்திரன் முதலிய பல்வேறு பொருட்களைத் தந்து நிற்கின்றது. இவ்வாறு பல பொருள் தரும் ஒரு சொற்கள் தமிழில் நிறைய உள்ளன.

அடி : காலடி, அளவு, செய்யுளடி, தாக்கு

அளை : புற்று, தயிர், குகை, துழாவு

அரி : அழகு, குதிரை, சிங்கம், மூங்கில், விஷ்ணு

ஆலம் : நஞ்சு, மழை, கடல், நீர், ஆலமரம்

இடை : இடம், நடு, துன்பம், வழி, காலம், இடுப்பு

ஏறு : எருது, ஏறுதல், ஆண்சிங்கம், உயரம்

கட்டு : கட்டுதல், அரண், பந்தம், திருமணம்

கலி : அம்பு, ஒலி, கடல், துன்பம், போர், வஞ்சகம்

கார் : கரியது, பசுமை, கார்காலம், மழை, குளிர்ச்சி

நகை : சிரிப்பு, ஆபரணம், பல், இகழ்ச்சி, ஒளி

படி : பூமி, படித்தல், மாடிப்படி, படிக்கல்

பாடு : துன்பம், பக்கம், பாடுதல், ஓசை,

மதி : அறிவு, சந்திரன், மதித்தல், மாதம், அளவிடு

மாடு : பொன், பக்கம், எருது, செல்வம், இடம்



## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல் உணர்த்தும் பொருளைத் தெரிவு செய்து கோடிடுக.**

1. காயமே இது பொய்யடா : இதில் ***காயம்*** என்பது

   (உடல், புண், இலக்கு, பெருங்காயம்)

2. மதம் கொண்ட மனிதன் மூர்க்கம் கொண்டான் : இதில் **மதம்** என்பது

   (சமயம், வெறி, அறிவு, கொள்கை)

3. அகத்தில் ஒளி துலங்கிட வேண்டும்: இதில் ***அகம்*** என்பது

   (மனம், வீடு, உட்புறம், காதல்)

4. அரவம் கேட்டு கண் விழித்தேன் : இதில் **அரவம்** என்பது

(சத்தம், பாம்பு, சிலம்பு, கலக்கம்)

5. கோடு கொண்ட யானை அரணை உடைத்துத் தாக்கியது: இதில் **கோடு** என்பது

(தந்தம், வளைவு, ஊதுகொம்பு, வரி)



## பயிற்சி

**கீழே தரப்பட்ட சொல் ஒவ்வொன்றும் உணர்த்தும் வேறுபட்ட மூன்று பொருள் தரும் சொற்களை எழுதுக.**

1. உரம்
2. சிலை
3. மறை
4. திரி
5. தாலம்
6. ஆறு
7. மெய்
8. மா
9. வளை
10. வெள்ளி

# 4 இதயம் அழுகிறது



சின்னதோர் குற்றம்தான்
செய்தாய் அதற்காக
பென்னம் பெரிய
பிரம்பாலே உன்னுடைய
பொன்னான கைகளினை
புண்ணாக்கி விட்டேனா?


உண்மையிலே அன்றுமிக
உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன்
ஏங்கி வகுப்பறையுள்
இருந்து நீ அழுததனை
தாங்க முடியாது
தவித்தேனே அறிவாயா?

என்னை அறிவாய்
எனக்குள்ளே எப்போதும்
உன்னி கருக்கூட்டும்
உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்.

உன் போன்ற மாணவரை
உயர்த்துவதில் நான் என்றும்
கண்ணாய் இருந்து
கரை சேர்க்க முயற்சிப்பேன்.

நட்போடு பழகி
நயக்க இலக்கியத்தைக்
கற்பிப்பேன் அதை மிகவும்
கவனமாய் கேட்டிருப்பாய்.

அன்று மட்டும் நீயேனோ
அலட்சியமாய் இருந்ததனைக்
கண்டு விட்டேன், அதனாலே
கடுங் கோபம் பொங்கியதால்
தண்டித்து விட்டேன்
தவறுக்காய் மிக நொந்தேன்.



பின்னால்தான் உன்னுடைய
பிரச்சினையை நானறிந்தேன்.
வாப்பாவை அன்று
''வாட்'' டிலே சேர்த்து விட்டு
சாப்பாடும் இன்றி வந்த
சங்கதியைச் சொன்னார்கள்.

இந்த வயதில்
ஏப்பமிட எழும் அலையை
வென்று விட வேண்டுமென்றா
விரைவாக ஓடி வந்தாய்?
வந்த களைப்பாலா
வகுப்பிலே சோர்ந்திருந்தாய்?

அன்ப, உன் துயரை
அறியாமல் நடந்தவற்றை
மன்னித்து அக்கனவை
மறந்துவிட மாட்டாயா?

என்று நினைத்து
எனக்குள்ளே அழுகின்றேன்.
அழுகைக் குரல் கேட்டா
அருகில் வருகின்றாய்?

''மன்னிக்க வேண்டும், சேர்
மறுபடியும் பாடத்தை
படிப்பிக்க வேண்டு'' மென
பணிவாக ஏன் கேட்டாய்?

உன்மேல் எனக் கென்றும்
உயிர், அதனால்தான்
பாடத்தை மீண்டும்
படிப்பிக்க முயல்கின்றேன்.
என்னால் படிப்பிக்க
இயலாது குமைகின்றேன்.

''நாளை படிப்போ''மென
நம்பிக்கை ஊட்டிவிட்டு
எழுந்து நடக்கின்றேன்
இதயம் அழுகிறது.





அன்பு முகைதீன்
- புதுப்புனல் -

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| குற்றம் | - | தவறு |
| அலட்சியம் | - | கவனமின்மை |
| குமைதல் | - | வருந்துதல் |
| கருக்கூட்டும் | - | உருவாகும் |



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ''எனக்குள்ளே எப்போதும் உன்னி கருக்கூட்டும் உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்'' என்பதன் வாயிலாக ஆசிரியர் எதனை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்?
2. குறித்த மாணவன் வழக்கமாக, பாடவேளைகளில் எவ்வாறு நடந்து கொள்பவன்?
3. ஆசிரியர் குறித்த மாணவனை அடிப்பதற்குக் காரணம் யாது?
4. ஆசிரியரால் பாடத்தைத் தொடர்ந்து நடாத்த முடியாமற்போன காரணம் யாது?
5. ஆசிரியர் - மாணவர் உறவை இப்பாடல் எவ்வகையில் சித்திரித்துக் காட்டுகின்றது?

## செயற்பாடு

நல்லாசிரியர், நன்மாணாக்கர் இலக்கணங்கள் குறித்துக் கட்டுரை வரைந்து, ஆசிரியர் வழிகாட்டலில் அவ்விலக்கணங்களை அலசுக.

# வேற்றுமை II

## ஏழாம் வேற்றுமை

**மணியின் கண் ஒளி**

**மாமரத்தில் குயில்**

இங்கு மணி, மாமரம் போன்ற சொற்கள் கண், இல் என்னும் உருபுகளை ஏற்று வருமொழிப் பொருட்களான ஒளி, குயில் போன்றனவற்றுக்கு இடமாக அமைந்தன. ஆகையால் இதன் பொருள் இடப் பொருளாகும். எழுவாயை இடப்பொருளாக வேறுபடுத்தும் வேற்றுமையை ஏழாம் வேற்றுமை என்பர். இவ்வேற்றுமை கண்வேற்றுமை என்றும் பெயர் பெறும். கண், இல், கால், கடை, உள், இடம் முதலான இருபத்தெட்டு உருபுகள் ஏழாம் வேற்றுமைக்குரியதென நன்னூலார் கூறுவார். ஏழாம்வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களுள் ஒன்றைத் தனக்கு இடமாகக் கொண்டு வரும்.

பொருள் இடமாதல் - மணியின் கண் ஒளி.
- மரத்தின் கண் கிளி.

இடம் இடமாதல் - ஊரின் கண் இல்லம்.
- ஆகாயத்தின் கண் பருந்து.

காலம் இடமாதல் - நாளின் கண் மணித்தியாலம் உண்டு.
- இளவேனிற் கண் வேம்பு பூக்கும்.

சினை இடமாதல் - கையின் கண் விரல் உண்டு.
- விரலின் கண் மோதிரம்.

குணம் இடமாதல் - கறுப்பின் கண் மிக்கது அழகு.
- இளமையின் கண் வாய்த்த செல்வம்.

தொழில் இடமாதல் - ஆட்டத்தின் கண் அபிநயமுண்டு.
- ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு.

## எட்டாம் வேற்றுமை

*தம்பியே! பாராய்*

*அப்பனோ! பாராய்*

இங்கு தம்பியே, அப்பனோ முதலான சொற்கள் உருபின்றி முறையே ஏகாரம், ஓகாரம் மிகுந்து விளிப்பொருளில் வந்துள்ளன. மேற்குறிப்பிட்ட உதாரணங்களில் படர்க்கைப் பெயரை முன்னிலையில் அழைப்பதாக ஏ, ஓ மிகுந்து வந்ததைப் போன்று ஈறு திரிந்தும், கெட்டும், இயல்பாகவும், ஈற்றயல் எழுத்து திரிந்தும் எட்டாம் வேற்றுமை விளிப் பொருளில் வரும். எனவே எட்டாம் வேற்றுமைக்கு முதலாம் வேற்றுமை போன்று உருபு இல்லை.

உதாரணம்:-

அன்னாய் பாராய் - அன்னை - அன்னாய் - ஈறு திரிந்தது

நண்ப! இதைக் கேள் - நண்பன் - நண்ப ஈறு கெட்டது.

தம்பி சாப்பிட வா ! - தம்பி - இயல்பாய் வந்தது.

மக்காள்! கேளீர் - மக்கள் - ஈற்றயல் எழுத்துத் திரிந்தது.

## விளியுருபு ஏற்காப் பெயர்கள்

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் விளியுருபை ஏற்கமாட்டாத பெயர்களாகும். படர்க்கைப் பெயர்களுக்குள் அவன் முதலிய சுட்டுப் பெயர்களும் எவன் முதலிய வினாப் பெயர்களும் தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் விளியுருபை ஏற்கமாட்டதவை. ஆயினும் யான், நான் என்னும் தன்மை ஒருமைப் பெயர்கள் ''என்'' எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும். இது போல யாம், நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் முறையே எம், நம் எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:- யான் } என்னை, என்னால், எனக்கு

நான் } என்னை, என்னால், எனக்கு

யாம் } எம்மை, எம்மால், எமக்கு

நாம் } நம்மை, நம்மால், நமக்கு

நீ என்னும் முன்னிலைப் பெயர் உன் எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:- நீ } உன்னை, உன்னால், உனக்கு

தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் முறையே தன் எனவும் தம் எனவும் திரிந்து வேற்றுமை உருபை ஏற்கும்.

உதாரணம்:- தான்} தன்னை, தன்னால், தனக்கு

தாம்} தம்மை, தம்மால், தமக்கு

## பயிற்சி

**1. மிகவும் பொருத்தமான சொல்லையோ, சொற்களையோ கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ................பொருளாதி அறுவகைப் பெயர்களுள் ஒன்றைத் தனக்கு இடமாகக் கொண்டு வரும்.
2. .................. பெயர்கள் விளியுருபை ஏற்க மாட்டாதவை.
3. .................... வேற்றுமைகளுக்கு உருபு இல்லை.
4. ஏழாம் வேற்றுமையை ............. வேற்றுமை என்றும் அழைப்பர்.
5. இருபத்தெட்டு உருபுகளை உடையது ................. என நன்னூலார் கூறுவார்.

**2. மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1.சிறுவன் கல்விச் செல்வத்தைப் பெற்றான். இங்கே செல்வத்தை என்பதில் உள்ள ஐ உருபு உணர்த்துவது

1. ஆக்கல் 2. அடைதல் 3. நீத்தல் 4. அடைதல்

2.கண்ணனது கட்டில் தேக்கமரத்தால் உருவாக்கப்பட்டது. இங்கு வந்துள்ள மூன்றாம் வேற்றுமை உருபு

1. ஆல் 2. அது 3. இல் 4. பட்டு

3.ஊரில் நின்று வந்த மாணவன். இதில் வந்துள்ள சொல்லுருபு

1. வந்த 2. நின்று 3. இல் 4. அன்

4. ஒழுக்கத்தில் உயர்ந்தவர் நாவலர் பெருமான். இங்கே வந்துள்ள இல் என்பது

1. ஐந்தாம் வேற்றுமை 2. ஏழாம் வேற்றுமை
3. நான்காம் வேற்றுமை 4. ஆறாம் வேற்றுமை

5. நாவினால் சுட்ட வடு. இங்கே வந்த ஆல் உருபு உணர்த்தி நிற்பது

1. கருவி 2. கருத்தா 3. உடன்நிகழ்ச்சி 4. கோடற்பொருள்

# 5 மருமகனுக்கு விருந்து

ஒரு ஊரிலே ஒரு குடும்பஸ்தர் இருந்தார். அவருக்கு ஆறு பெண் பிள்ளைகள்; ஒரே ஒரு ஆண்பிள்ளை.

மூத்த மகளை அயலூரிலே திருமணம் செய்துவைத்தார்; மருமகன் இந்த மாமனார் வீட்டுக்கு அடிக்கடி வந்துபோவார்.

போகும் போதெல்லாம் சும்மா போகமாட்டார்; ஏதாவது பறித்துக் கொண்டுதான் போவார்.

பெண்பிள்ளைகளைக் கட்டிக்கொடுத்தே அந்தக்குடும்பம் நொடிந்துவிட்டது. இப்படி இருக்கும்போது குடும்பஸ்தரின் ஒரே மகனுக்கு ஏதோ ஒரு நோய் வந்துவிட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் சுகம் வரவில்லை.



ஒருநாள் அந்த வீட்டுக்கு குறி சொல்லுபவன் ஒருவன் வந்தான்; உடுக்கடித்துப் பாடத் தொடங்கினான்; ''இந்த வீட்டில இருக்கிற இளைய பிள்ளைக்கு காலம் சரியில்லை, ஏதோ செய்வினை சூனியம் ஏவியிருக்கு'' என்று சொன்னான்.

''என்ன செய்ய வேணும்?'' என வீட்டுக்காரர்கள் கேட்டார்கள். ''எனக்கு காணிக்கை தந்தால் குணமாக்கி விடுவேன்'' என்றான். கேட்டதைக் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்டு ஏதோ சூரணம் கொடுத்து ''இதைத் தேனிலே குழைத்துச் சாப்பிடக் கொடுங்க, குணமாயிடும்'' என்றான்.

அந்தக் குறிகாரன் அந்த அளவில் விடவில்லை; வேறொன்றையும் செய்யும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

குறிகாரன் கொடுத்த மருந்தால் மகனுக்கு உடல் நல்லபடி தேறிவிட்டது. அதனால் குறிகாரன் சொன்னபடியே செய்தார்கள். ''இந்த வீட்டில் இருக்கிறவர்களின் பேர்களை எல்லாம் மாற்றி வைக்க வேண்டும்; அப்படிச் செய்தால் எதிரிகள் செய்யும் சூனியம் எதுவும் பலிக்காது'' என்பதுதான் அவன் சொன்ன விடயம்.

எந்த வைத்தியராலும் மாற்ற முடியாத நோயை மாற்றித்தந்தவன் சொன்னதைக் கேட்காமல் விடமுடியுமா?

அந்தக் குடும்பஸ்தருக்கு 'வாழைப்பழம்' என்றும் அவருடைய மனைவிக்கு 'பாயாசம்' என்றும் வீட்டிலுள்ள மாட்டுக்கு 'விருந்தாளி' என்றும் நாய்க்கு 'சுத்திவளை' என்றும் குழந்தைக்கு 'கயிறு' என்றும் பேர்வைத்துக் கூப்பிடும்படி குறிகாரன் சொன்னபடியே பேர்வைத்து அப்படியே அவர்களைக் கூப்பிடவும் தொடங்கினார்கள். முதலில் ஒரு மாதிரியாக இருந்தாலும் போகப்போக அந்தப் பெயர்கள் நன்கு பழக்கத்துக்கு வந்துவிட்டன.

மாட்டை அவிழ்த்து விடு என்பதற்கு 'விருந்தாளியை அவிழ்த்துவிடு' என்றும் குழந்தையை தொட்டிலில்போடு என்பதற்கு 'கயித்த தொட்டிலில் போடு' என்றும் குடும்பத்தலைவர் வந்துவிட்டார் என்பதை 'வாழைப்பழம் வந்தாச்சு' என்றும் குடும்பஸ்தரின் மனைவி வயலுக்குப் போயிருக்கிறார் என்பதை 'பாயாசம் வயலுக்குப் போயிருச்சு' என்றும் கூறினார்கள். இந்தப் பழக்கம் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் வந்துவிட்டது.

இப்படி இருக்கும்போது ஊரிலிருந்து மருமகன் வந்தார். அவருக்கு இந்த விசயம் பற்றித் தெரியாது.

அவர் வந்ததும் வீட்டுவாசலில் இருந்த மைத்துனன் ''வாங்க மச்சான் சௌக்கியமா? அக்கா சுகந்தானே!'' என்று விசாரித்துவிட்டு ''உள்ளே போங்க... பாயாசம் இருக்கு போய்ச் சாப்பிடுங்க'' என்றான்.

மருமகன் வீட்டுக்குள்ளே போனார். மாமியார் (பாயாசம்) ''வாங்க மருமகனே சுகமா? வீட்டில எல்லாரும் சுகம்தானே?'' என்று குசலம் விசாரித்துவிட்டு, ''உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்'' என்றாள்.

மருமகன் ''என்னடா இது... வழமைக்கு மாறா இன்று விருந்துபசாரம் பலமா இருக்கும் போலிருக்கே'' என்று நினைத்துக் கொண்டார். அவர் விருந்து பற்றிய கற்பனையில் இருக்கும்போது, மாமனார் வெளியிலிருந்து மாடும் கையுமாக வந்தார். வாசலில் இருந்த மகனைப் பார்த்து ''தம்பி, விருந்தாளியைப் பிடிச்சுக் கட்டு'' என்றார். அந்தநேரம் பார்த்து குழந்தையும் அழுதது. ''என்ன பாத்துக்கொண்டு நிற்கிறாய் உடனே கயித்த எடேன்.''

''கயித்த எடுக்காம என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறாய்'' என்று உள்ளேயிருந்த மனைவியைப் பார்த்துச் சத்தம்போட்டார். தனக்குப் பின்னால் வந்த நாயைப் பார்த்து ''சுத்தி வளை'' என்றார்.

இதையெல்லாம் கேட்டதும் மருமகனுக்கும் பதற்றம் தொற்றிவிட்டது. ''என்னடா இது, முதல்ல பாயாசம் சாப்பிடு... வாழைப்பழம் வருது... இப்பிடி அப்பிடி என்றாங்க. இப்ப விருந்தாளியைப் பிடிச்சுக்கட்டு... கயித்த



எடு... சுத்திவளை பிடி என்கிறாங்களே... நாம அடிக்கடி வந்து அது இது என்று வாங்கிக்கொண்டு போறதுதான் காரணமோ... என்று யோசித்து, ஒரு முடிவுக்கு வந்தவராய் பின் கதவு வழியே எடுத்தாரே ஓட்டம்.

மாமியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏன் இப்படி மருமகன் பதறி யடித்துக் கொண்டு ஓடவேணும் என்று நினைத்தபடி கணவனிடம் வந்து, ''இங்க பாருங்க, நம்ம மருமகன் வந்தார்... நீங்க வரட்டும் உட்காருங்க என்று சொன்னோம். உட்கார்ந்திருந்தார். நீங்க வந்ததும் உங்க சத்தத்தைக் கேட்டதும் கோபம் வந்ததோ என்னவோ பின்வாசல் வழியா போயிட்டார்'' என்றாள்.

மருமகனின் கோபத்துக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்தார்கள்.

மாமியார்தான் கண்டுபிடித்தார் காரணத்தை,

''அவருக்கு சீதனமாக நாங்கள் உரல், சுளகு, அரிதட்டு எல்லாம் குடுத்தோம். உலக்கை செய்யக் குடுத்திருந்ததால் அப்ப அதைக் கொடுக்கமுடியல்ல. பின்னால தாறதா சொல்லியிருந்தோம். இன்னும் குடுக்கல்ல, நீங்கள் போய் மருமகனைச் சமாதானப்படுத்தி கூட்டிவாங்க. நம்ம பெண் அவரோட வாழவேணும் போங்க...ஓடுங்க... இந்தப் பழைய உலக்கையைக் கொடுத்தெண்டாலும் அவரச் சமாதானப்படுத்தி கூட்டிவாங்க'' என்று அவருடைய கையில் உலக்கையையும் எடுத்துக்கொடுத்து அனுப்பினார் மாமியார்.

மாமனார் கையில் உலக்கையுடன் ''மருமகனே... மருமகனே...'' என்று கூப்பிட்டபடியே மருமகனுக்குப் பின்னால் ஓடினார்.

மாமனாரின் குரலைக்கேட்டு மருமகன் திரும்பிப் பார்த்தார். ''அடே... நிலமை இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டுதா... நல்லவேளை தப்பினேன்'' என்று மேலும் வேகமாக ஓடி ஊரிலே போய்த்தான் நின்றார்.

பாவம் மாமனார்! வயதானவர்! மருமகனைத் தொடர்ந்து அவரால் ஓட முடியவில்லை. ''நாளைக்காவது இந்த உலக்கையை எடுத்துக்கொண்டுபோய் மருமகனிடம் குடுக்கவேண்டும்'' என்று ஓடிய களைப்பில் சோர்ந்து தள்ளாடியே வீடுபோய்ச் சேர்ந்தார்.



**- நாட்டார் கதை -**

### அரும்பதங்கள்

சீதனம் - வரதட்சணை

சூரணம் - சித்த மருந்துகளில் ஒன்று

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. குடும்பத்தில் உள்ள அனைவரும் தமது பெயர்களை மாற்றிக்கொண்டதற்கு காரணம் என்ன?
2. அந்தக் குடும்பத்துக்கு மருமகனால் ஏற்படும் தொல்லை யாது?
3. மருமகன் தப்பியோடுவதற்கான காரணம் யாது?
4. உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப்பொருள்கள் எவை?
5. இந்த நாட்டார் கதை எதனை உணர்த்த முயற்சிக்கின்றது?

செயற்பாடு

இதுபோன்ற வேறு நாட்டார் கதைகளை உறவினர் வாயிலாகக் கேட்டறிந்து, எழுத்தாக்கம் செய்து வகுப்பறையில் சமர்ப்பிக்குக.

## வினைச்சொல் I

### செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றாத வினை

- *இராமன் நடந்தான்.*
- *தம்பி பாட்டுப் பாடினான்.*
- *மரம் எரிந்தது.*
- *மரத்தை எரித்தேன்*

இங்கு, முதல் வாக்கியத்தில் ***'நடந்தான்'*** என்ற வினைச்சொல் செயப்படுபொருளை ஏற்காது வந்தது. இரண்டாவது வாக்கியத்தில் 'பாடினான்' என்ற வினைச் சொல் செயப்படுபொருளை ஏற்று வந்தது. முதல் வாக்கியத்தில் எதை நடந்தான் என நாம் வினவ முடியாது. அவ்வாறு வினா எழுப்புவதும் பொருந்தமாக இல்லை. இவ்வாறு வா, இரு, ஓடு முதலான வினைகளும் வாக்கியங்களில் செயப்படுபொருளை ஏற்பதில்லை. இவ்வாறு வாக்கியங்களில் செயப்படு பொருளை ஏற்காத வினைகளை செயப்படுபொருள் குன்றிய வினைகள் என்பர். எதை 'பாடினான்' என்று வினாவினால் நம்மால் பாட்டு என்று விடை கூறமுடியும். இங்கு பாட்டு என்பது செயப்படுபொருளாகும். இவ்வாறு படி, பார், தேடு, எழுது முதலான வினைகளும் வாக்கியங்களில் செயப்படுபொருளை ஏற்று வரும். அவ்வாறு செயப்படுபொருளை ஏற்று வரும் வினைகளை செயப்படுபொருள் குன்றா வினை என்பர்.

இதுபோல மூன்றாவது, நான்காவது வாக்கியங்களில் வரும் 'எரி' என்ற வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் குன்றாத வினையாகவும் வந்துள்ளமையைக் காணலாம். அதாவது ஒரே வடிவம் இரண்டு வகை

வினைகளாகவும் இருக்கக் காணலாம். இது போல முறி, நனை, ஒடி முதலான வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் குன்றாத வினைகளாகவும் வரக் காணலாம். இவ்வாறு செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் குன்றாத வினைகளாகவும் வரும் வினைகளைப் பொது வினை என்பர்.

## பயிற்சி

**பின்வரும் வினைகளுள் செயப்படுபொருள் குன்றிய வினைகளையும் குன்றாத வினைகளையும், பொதுவினைகளையும் வேறுபடுத்துக.**

அடி, அழு, கரை, கொல், தேய், சிரி, ஓடு, வளை, பாடு, எழுது, உண், வா, உழுது, படி, செல்

## ஒலி வேறுபாடு

### னகர, ணகர சொற்களும் பொருளும்

அன்னம் : சோறு, அன்னப்பறவை
அண்ணம் : மேல்வாய்

உன்னல் : நினைத்தல்
உண்ணல் : புசித்தல்

கனை : குதிரை கனைத்தல், செறிவு, நெருக்கம்
கணை : திரட்சி, அம்பு, காம்பு, கரும்பு

கான் : காடு, பூ, வாசனை, செறிவு
காண் : அழகு, காணுதல், தெளி, உணர்

துனி : அச்சம், கோபம், சினம், துன்பம்
துணி : ஒளி, கற்றை, ஆடை, துண்டம், தைரியம்

தின்மை : தீமை, சாவு

திண்மை : உறுதி, நிதானம், மெய்ம்மை

நானம் : முழுகுதல், குளித்தல்

நாணம் : வெட்கம்

கனம் : பளு, பெருமை

கணம் : கூட்டம், மிகநுட்பமான காலம்

பனை : தாலம், பனைமரம்

பணை : அரசமரம், கிளை, பிழை, பருமை

பினை : பிசைதல்

பிணை : கட்டு, ஆசை, பூமாலை, பெண்மான்

### னகர, ணகர பேதம்

அணைத்து : வெற்றி பெற்ற வீரமைந்தனை தாயார் அணைத்துக் கொண்டார்.

அனைத்து : அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டைத் தனிநாயகம் அடிகளார் முன்னின்று நடாத்தினார்.

தொண்டு : மக்கள் தொண்டே மகேசன் சேவை.

தொன்று : கிராம மக்கள் சிறுதெய்வங்களைத் தொன்றுதொட்டு வழிபட்டு வருகின்றனர்.

தோண்டி : வயலிலிருந்து புதையலைத் தோண்டி எடுத்தனர்.

தோன்றி : கணேசன் மேடையில் தோன்றி நடித்தார்.




**பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியங்கள் அமைக்குக.**

1. தினை, திணை

2. கானல், காணல்

3. வன்மை, வண்மை

4. சுனை, சுணை

5. ஆணி, ஆனி

# 6 யார் சிறந்தவர்?

**ஒவ்வொரு மனிதனிடமும் தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. எனினும் எம்மில் பலர் தம்மை ஏனையவருடன் ஒப்பிட்டு நோக்கி தற்பெருமை பேசுவதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். நீங்கள், நீங்களேதான்!**

அந்தி சாயும் நேரம். பகல் முழுவதும் வெப்பக் கதிர்களை வீசிய பகலவன், தன் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்காக கடற்கன்னியின் அரவணைப்பை நாடினான். மேற்கு வானம் செம்பிழம்பாகக் காட்சியளித்தது. இதனைக் கண்ணுற்ற ரோஜா தனக்குள் சிரித்துக் கொண்டாள். ரோஜா, 'செந்நிறம் கொண்ட அழகி' என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆம்! அவள் வாழும் இல்லமான ''துவாரகை''யின் ராஜகுமாரி என வர்ணித்தால் கூட மிகையாகாது. அதனால்தான் போலும் ரோஜாவிற்குத் தலைக்கனம் அதிகம்.''துவாரகை''யின் நந்தவனத்தில் மெல்லென வீசிய தென்றலுடன் சேர்ந்து நர்த்தனம் ஆடினாள். இவ்வாறு நாள் முழுவதும் ஆடிச் சலிப்படைந்ததினாலோ என்னவோ, அவளுக்கு யாரையாவது சண்டைக்கு இழுக்கவேண்டுமெனத் தோன்றியது. தன் அருகே நின்ற மல்லிகையைப் பார்த்து பேசத் தொடங்கினாள்.

ரோஜா : ஏய் மல்லிகையாளே! ஏன் என்னை முறைத்து முறைத்துப் பார்க்கிறாய். என் அழகை நீ இரசிக்கின்றாயா? அல்லது என்னைப் போல் நீ அழகில்லை என்பதனாலா? நீ ஏன் இன்னும் மலராமல் மொட்டாக இருக்கிறாய்? என்னைப் பார், என்னழகைப் பார் என்று கூறிச் சுற்றிச் சுற்றிச் சுழன்று ஆடியது.

மல்லிகை : (மௌனமாக இருந்தாள்)

ரோஜா : ஏன் பேசாமல் இருக்கிறாய்? உன் வெள்ளை நிறத்தை யார் விரும்புகிறார்கள். என்னுடைய செந்நிறம், மிருதுவான மேனி, நறுமணம் போன்றவை பற்றி எத்தனை கவிஞர்கள் பாடியுள்ளார்கள் தெரியுமா? மிக அண்மையில் ஒரு சினிமாவில் கூட

**''ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ**
**உன் பேரைச் சொல்லும் ரோசாப்பூ''** என்ற பாடலை நீ கேட்கவில்லையா?

கனகா(ம்பரம்): (கோபத்துடன்) அடி ரோஜா! உனக்கேன் இந்த வம்பு? வயதில் மூத்தவளான நீ, மலராத மொட்டாக இருக்கும் மல்லிகையுடன் ஏன் வலியச்சண்டைக்குப் போகிறாய்?

ரோஜா : கனகா! உனக்கேன் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது? நான் மல்லிகையுடன் அல்லவா பேசிக்கொண்டிருக்கிறேன்? என்னுடைய அழகைக் கண்டு நீயும் பொறாமைப்படுகிறாயா?

கனகா(ம்பரம்): உனக்கு மட்டும்தான் அழகுண்டு என நினைக்கிறாய்! நாம் பார்க்கிற கண் கொண்டு பார்த்தால் உலகிலுள்ள அனைத்துமே அழகுதான். அதை நீ நினைவில் வைத்துக்கொள்.

ரோஜா : ம் ..... பெரிய வேதாந்தம் பேசுகிறாளாம் கனகா. நீ கற்க வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன. முதற்கண் மற்றவர்கள் விடயத்தில் தலையிடாமல் இருப்பதற்குக் கற்றுக்கொள்.

கனகா(ம்பரம்): அடி ரோஜா! உன்னுடைய அழகு உன் கண்களை மறைத்துவிட்டது. மற்றவர்களுடன் எப்படிப் பண்பாகப் பேச வேண்டுமென்பதையே மறந்துவிட்டாய். சற்றுப் பொறுத்திருந்து பார். மல்லிகை மொட்டாள் விரியும்போது அவள் வீசும் நறுமணத்தில் நீயே மயங்கிவிடுவாய்! அழகு மட்டும் போதாது, சிறந்த குணமும் வேண்டும்.

ரோஜா : (நக்கலான சிரிப்புடன்) நறுமணத்தைப் பற்றியும் குணத்தைப் பற்றியும் நீயா பேசுகிறாய்? உன்னிடம் நறுமணமும் இல்லை, குணமும் இல்லை.

கனகா(ம்பரம்): (குறுக்கிட்டு) எனக்கு நறுமணமில்லை என்பது ஒருபுறமிருக்கட்டும். இந்த நந்தவனத்தை ஒரு முறை உன் கண்களால் பார். எல்லைப் புறம் நான்கிலும் எமது இனத்தையல்லவா இந்த வீட்டுக்காரியான ஜானகியம்மாள் உண்டாக்கியிருக்கிறாள். ஏன் இப்படிச் செய்தாள் தெரியுமா? யாவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக. எங்களில் அத்தகைய நம்பிக்கை உண்டு. இது ஒன்றே போதுமே எமது குணத்தை எடுத்தியம்புவதற்கு! அதுசரி, இறைவன் உன்னைச் சூழ முட்களை ஏன் படைத்தான் தெரியுமா?

ரோஜா : (பெருமிதத்துடன்) இது தெரியாதா உனக்கு? ''ரோஜா மலரே ராஜகுமாரி!'' என்ற சினிமாப்பாடலை நீ கேட்கவில்லையா? அதற்கேற்ப இந்த துவாராபுரி நந்தவனத்தின் ராஜகுமாரி நான் என்ற காரணத்தினால் எனக்குப் பாதுகாவலர்களாக முட்களை உண்டாக்கிவிட்டான் அந்த இறைவன்.

கனகா(ம்பரம்): (கலகலவெனச் சிரித்தவாறு) ரோஜா நிறமுடைய ராஜ குமாரியே! தங்களைச் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். நீ விரைவில் உணர்ச்சி வசப்படக்கூடியவள். ஆகவே நீ நிதானம் தவறாமல் இருப்பதற்காகவே உன்னைச் சூழ முட்களைப் படைத்து விட்டான் பிரம்மன். இதை அறிந்துகொள்.

ரோஜா : (கோபமாக) அடி கனகா! இப்படியான கருத்துக்களைக் கூறி மக்களைக் கெடுத்துவிடாதே. நான் தூய்மையானவள். எனக்குக் களங்கத்தை உண்டு பண்ணாதே! நீ நந்தவனத்தின் ஓரமாக இருப்பதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நீ அருகிலிருந்தால் உடலைக் குதறி எடுத்திருப்பேன் ஜாக்கிரதை!

கனகா(ம்பரம்): இங்கே பார்! உன் மிடுக்கான பேச்சை உன்னிடமே வைத்துக் கொள். ஒன்று மட்டும் கூறுகின்றேன். கவனமாகக் கேட்டுக்கொள். இவ்வுலகில் வாழும் ஒவ்வொன்றும் தனித்துவமானது.

குறிப்பாக மலர்கள் என்ற எமது இனத்தை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு வகையிலும் தனித்துவம் காணப்படுகிறது. நாம் எல்லோருமே அழகுடையவர்கள். நான் கூறுவது புற அழகை மட்டுமல்ல, அக அழகையும் கூட! இன்னும் விளக்கமாகச் சொன்னால் அக அழகே உண்மையான அழகு. ஆகவே வீணாகப் பெருமை பேசி மற்றவர்களை மட்டம் தட்டாதே! உன்னிடமுள்ள அழகு, மணம், மென்மை போல ஏனைய மலர்களிடமும் உண்டு என்பதை மறந்து விடாதே. அதோ! அந்த மல்லிகையைப் பார்த்தாயா? நீ கூறிய கருத்துக்களுக்கு மறுகருத்துத் தெரிவித்து உன்னைப் போலக் கொதித்தெழுந்தாளா? அவளது நிறத்திற்கேற்ப அவள் தூய்மையானவள், பண்பானவள், அடக்கமானவள், அவளுக்கு நிகர் அவளேதான்!

ரோஜா : சரி! சரி! போதும் உன் உபதேசம். மேலும் பேசி என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. (முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டது).

ஜானகியம்மாள் : ரமணி! ரமணி!

ரமணி : (வீட்டினின்றும் வெளியே வந்து) அம்மா கூப்பிட்டீங்களா?

ஜானகியம்மாள் : ஆமாம் ரமணி, நாளைக் காலையில் என் சிநேகிதன் மகள் குமுதாவின் கல்யாண வைபவத்திற்குப் போகவேண்டுமெனக் கூறினேன் அல்லவா? இந்த மல்லிகை மொட்டுகளைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை.

ரமணி : அப்படியே செய்கிறேன் அம்மா.

ரமணி மல்லிகை மொட்டுக்ககைப் பறித்துத் தட்டில் சேகரிக்கிறாள். கனகா(ம்பரம்) கடைக் கண்ணால் ரோஜாவைப் பார்க்கிறது. ரோஜாவோ, தன்னையும் பறித்து ரமணி தன் கார்குழலில் நாளை சூடமாட்டாளா என்ற அங்கலாய்ப்புடன் சிறுமியைப் பார்க்கிறது. ரமணி ரோஜாவின் அருகில் வந்து அதன் தண்டினை அசைத்துப் பார்க்கிறாள். ம்கும்!



'இது நாளை உதிர்ந்துவிடும்' எனத் தனக்குள் முணு முணுத்தவாறே மல்லிகை மொட்டுகளுடன் வீட்டினுள் சென்று விட்டாள். கனகா (ம்பரம்) ரோஜாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். ரோஜா அவமானத்தால் வெட்கித் தலை குனிந்தாள்.

மறுநாட்காலை கனகா(ம்பரம்) கண் விழித்தபோது ரோஜாவைக் காணவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள் திடீரென மல்லிகையின் மணம் மூக்கை துளைத்தது. மல்லிகை நன்றாக மலர்ந்து விட்டாள்.

அவள் ஜானகியம்மாளினதும், ரமணியினதும் கூந்தலை நன்கு அலங்கரித்திருந்தாள். நிறைகுடம் தளும்பாது என்பதற்கேற்ப தனக்கேயுரிய அழகு, பண்பு, தூய்மை ஆகிய பண்புகளுடன் மென்மையாகச் சிரித்தாள் மல்லிகையாள்.

தற்செயலாகப் பூமியை நோக்கிய கனகா, ரோஜாவின் இதழ்கள் கீழே உதிர்ந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். ரோஜாவிற்காகப் பரிதாபப்படுவதை விடக் கனகாவால் எதுவுமே செய்ய முடியவில்லை.

**மல்லிகை மல்லிகைதான்!**
**ரோஜா ரோஜாதான்!**
**நான் நானேதான்!**
**நீங்கள் நீங்களேதான் என்கிறாள் கனகா**
**உங்களைப் பார்த்து!**



**ராணி சிதம்பரநாதன்**
**- வான் துளிகள் -**

## அரும்பதங்கள்

தணித்தல் - குளிரச் செய்தல்

களங்கம் - குற்றம்

வேதாந்தம் - தத்துவங்களில் ஒன்று

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ரோஜாவின் கர்வத்துக்கான காரணம் யாது?
2. மல்லிகையுடன் ரோஜாவைச் சண்டையிட வேண்டாம் என, கனகாம்பரம் எந்தக் காரணத்தை முன்னிறுத்திக் கூறுகின்றது?
3. கனகாம்பரம் ‘அழகு’ என்பதற்கு கொடுக்கும் விளக்கம் யாது?
4. ‘‘மற்றவர் விடயங்களில் தலையிடாதிருக்கும் பண்பு’’ தொடர்பில் இங்கு எவ்வகையில் விவாதிக்கப்பட்டுள்ளது?
5. நற்குணம், மென்மை உடையவர் போற்றப்படுவார் என்பதனை இந்த ஆக்கம் எவ்வகையில் வெளிப்படுத்துகின்றது?

## செயற்பாடு

இந்த ஆக்கத்துக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.

# வினைச்சொல் II

**தன்வினை, பிறவினை**

தம்பி உணவை உண்டான்.

தாய் குழந்தைக்கு உணவு ஊட்டினாள்.

முதல் வாக்கியத்தில் உண்டான் என்பது தம்பி ஆகிய கருத்தா செய்த வினையை உணர்த்தி நின்றது. இரண்டாவது வாக்கியத்தில் வினையினை கருத்தா நிகழ்த்தி இருந்தாலும் வினையின் பயனானது கருத்தாவையன்றி பிறிதொன்றைச் சேருகின்றது. முதல்வாக்கியத்தில் வினையடியால் உணர்த்தப்படும் செயல் கருத்தா தானே செய்தமையால் அதனைத் தன்வினை என்பர். இரண்டாவது வாக்கியத்தில் ஊட்டியவள் தாய். ஆனால் அதன் பயனானது குழந்தையை அடைந்தது. ஆகவே ஊட்டினாள் என்பது பிறவினை ஆகும்.

முதல் வாக்கியத்தில் வினையை நிகழ்த்துபவனே வினையின் பயனை அடைகிறான். இவ்வாறு வினையின் பயன் கருத்தா அல்லது எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும். இரண்டாவது வாக்கியத்தில் வினையின் பயனானது அதனை நிகழ்த்திய கருத்தாவாகிய தாயையன்றி பிறிதொன்றை அடைந்தது. அதாவது பிறவினை என்பது வினை நிகழ்த்துபவன் தானே வினையின் பயனை அடையாமல் பிறிதொருவர் அல்லது பிறிதொன்று அப்பயனை அடைதல். வி, பி முதலியன பிறவினைக்குரிய விகுதிகள் என இலக்கண நூல்கள் உரைக்கின்றன.

உதாரணம் : ஆசிரியர் ஒப்படைகளைச் செய்வித்தார். - 'வி' விகுதி பெற்று வந்த பிறவினை

ஆசிரியர் பாடங்களைப் படிப்பித்தார். - 'பி' விகுதி பெற்று வந்த பிறவினை

## பயிற்சி

**தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையும் வகையில் பின்வரும் வினைச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்குக.**

1. கரை
2. அழி
3. எரி
4. முறி
5. கெடு

# செய்வினை, செயப்பாட்டுவினை

**செய்வினை, செயப்பாட்டுவினை**

*யானை பாகனைக் கொன்றது.*

*பாகன் யானையால் கொல்லப்பட்டான்.*

மேலுள்ள வாக்கியங்களில் கொன்றது, கொல்லப்பட்டான் ஆகியன வினைகளாகும். இங்கு கொன்றது என்பது யானை ஆகிய எழுவாயால் செய்யப்பட்ட வினை ஆகும். இவ்வாக்கியத்தில் எழுவாயே வினையின் கருத்தாவாகவும் உள்ளது. ''பாகன் யானையால் கொல்லப்பட்டான்'' என்ற வாக்கியத்தில் செயப்படுபொருளே எழுவாயாக வந்துள்ளது. எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகளைச் செய்வினை என்றும் செயப்படு பொருளை எழுவாயாகக் கொள்ளும் வினைகளைச் செயப்பாட்டுவினை என்றும் அழைப்பர். இவ்வாறு, எழுவாய்க்கும் வினைக்கும் இடையே உள்ள உறவின் அடிப்படையில் வினைச் சொற்களை செய்வினை, செயப்பாட்டு என இரண்டாக வகைப்படுத்தலாம்.

செய்வினை வாக்கியத்தில் எழுவாய் திரியாது வர செயப்பாட்டுவினை வாக்கியத்தில் எழுவாய் ''ஆல்'' உருபினை ஏற்று மூன்றாம் வேற்றுமைக் கர்த்தாப் பொருளில் வந்தது. செய்வினை வாக்கியத்தில் கொன்றது என்னும் வடிவில் அமைந்த வினை செயப்பாட்டுவினை வாக்கியத்தில் ''படு'' விகுதி பெற்று கொல்லப்பட்டான் என வந்தது.

செய்வினை வாக்கியத்தில் வினையின் அடிச்சொல் அடிப்படை வடிவத்தில் இருக்கும்.

உதாரணம் : கொன்றது, படித்தாள், பார்த்தான், இவற்றில் கொல், படி, பார் என்பன அடிச் சொற்களாகும்.

செயப்பாட்டுவினை வாக்கியத்தில் வினையின் அடிச்சொல் செய்ய என்னும் வாய்ப்பாட்டு எச்ச வடிவத்தில் இருக்கும்.

உதாரணம்: கொல்லப்பட்டது, படிக்கப்பட்டது, பார்க்கப்பட்டது ஆகிய செயப்பாட்டு வினைகளில் கொல்ல, படிக்க, பார்க்க என்பன வினை எச்சங்களாகும்.

### பயிற்சி

**பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. *உமறுப்புலவர் சீறாப்புராணத்தைப் பாடினார்.*
2. *பசு புல் மேய்ந்தது.*
3. *அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனியை வழங்கினான்.*
4. *ரவிவர்மா தைலவண்ண ஓவியங்களை வரைந்தார்.*
5. *சத்யஜித்ரே பதேர்பாஞ்சாலி திரைப்படத்தை இயக்கினார்.*

## அழைப்பிதழ்

*விழாக்கள், விருந்துகள், நூல் வெளியீடுகள் போன்றனவற்றுக்கு விருந்தினர்கள், உற்றார், உறவினர், நண்பர்களை அழைப்பதற்காக உருவாக்கப்படுவதே அழைப்பிதழாகும்.*

### அழைப்பிதழின் அமைப்பு / வடிவம்

**தலைப்பு**

**விளிப்பு**

**இடம்**

**திகதி**

**நேரம்**

**விழாவில் பங்கு பெறுபவர்களின் விபரங்கள்**

**நடைபெறவுள்ள நிகழ்ச்சி**

**திகதி** **ஏற்பாட்டாளர்**

## குறிப்பு

குறித்த நபருக்குரிய பெயர் குறிப்பிட்டு அழைப்பிதழ் எழுதும்போது அவர் பட்டம், பதவி, திரு, ஜனாப், கௌரவ, மதிப்புக்குரிய என்பன பொருத்தமாக இடப்படல் வேண்டும்.

## மாதிரி அழைப்பிதழ்



அழைப்பிதழ்

க/ பாரதி மகா வித்தியாலயத்தின்
முத்தமிழ் கலை விழா 2018

அன்புடையீர்,

கண்டி பாரதி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு முத்தமிழ் கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம் – வித்தியாலய மண்டபம்
காலம் – 30.01.2018
நேரம் – காலை 8.00 – 11.30
பிரதம விருந்தினர் – பேராசிரியர் ம. நல்லதம்பி
கௌரவ விருந்தினர் கலைமாமணி அ. அனஸ்

முக்கிய நிகழ்வுகள்

1. கோவலன் (நாடகம்)
2. புத்தர் கூறும் போதனை (வில்லிசை)
3. நபிகளார் மாண்பு (கவியரங்கு)
4. தேம்பாவணியில் தேன் அமுது (சொற்பொழிவு)
5. பாஞ்சாலி சபதம் (நாட்டிய நாடகம்)
6. தித்திக்கும் திருவாசகம் (மெல்லிசை)

கலையமுது பருகத் திரண்டு வருக !

10.01.2018

தி. தயா,
செயலாளர்
முத்தமிழ் விழாக்குழு
க / பாரதி மகா வித்தியாலயம்

## பயிற்சி

உமது பாடசாலையில் இடம்பெறவுள்ள தமிழ்மொழித்தின விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்குக.

# 7 மலைநாட்டுப் பிரயாணம்

''இலங்கைத் தீவின் அழகு எமது இதயத்தைக் கனிவித்தது; அழகும் வளமுமமைந்து, இந்துமா கடலின்கண் ஒரு முத்துப்போலவும், பசும் பொற்குன்று போலவும் ஒளிரும் உங்கள் நாட்டைச் சுற்றிப்பார்த்து நாம் அடைந்த மகிழ்ச்சி எம் உள்ளத்தைவிட்டு எஞ்ஞான்றும் நீங்காது'' என்றும், இன்னும் பலவாறாகவும், இந்நாட்டைச் சுற்றிப் பார்த்த வேற்றுநாட்டவர் பலரும் கூறவும், தங்கள் நூல்களில் எழுதவும் பல முறைகளில் நாம் கேட்டும் படித்தும் உள்ளோம். பாற்கடலிலுள்ள மீன்கள் இனிய பாலைப் பருகாது வேறு உணவுகளைத் தேடுவதுபோல, நாமும் எங்கள் நாட்டின் அழகையும் வளத்தையும் கண்டு மகிழ்ந்து வாழ அறியாது சாதி சமயச் சழக்குகளில் மூழ்கிக் கிடக்கின்றோம். இந்தச் சிந்தனையின் பேறாக வானம் பார்க்கும் யாழ்ப்பாணத்தை விட்டு மழைவளங் கொழிக்கும் வளமார்ந்த மலைநாட்டுப் பக்கங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய நான் விரும்பினேன்.

முன்னரே திட்டமிட்டபடி சென்ற பங்குனி மாத விடுமுறைக் காலத்தில் ஒருநாள் நண்பர்கள் ஐவரும் நானுமாக யாழ்ப்பாணத்திற் புகைவண்டியில் ஏறினோம். பொல்காவலையில் இறங்கிப் பின் கண்டிக்குச் செல்லும் வண்டியில் ஏறினோம். வழி நெடுகிலும் அழகிய ஆறுகள், நீர்தேங்கி நிற்கும் குளங்கள், பசுமையான சோலைகள், வளம் மிக்க விளைநிலங்கள், தேயிலை - றப்பர்த் தோட்டங்கள் பலவற்றையும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தோம். குன்றுகளிலிருந்து அருவி குதிக்கும் காட்சி உள்ளத்தைக் குதிகொள்ளச் செய்தது. அப்போது பகற் காலமானதினால் மலைப்பிரதேசங்களில் வண்டி செல்லும்போது வளைந்து வளைந்து சென்றதையும், அப்பகுதிகளிலுள்ள பள்ளத்தாக்குகளில் பயன்படும் மரங்கள் செடிகள் பலவும் நிறைந்து பொலிந்து இயற்கையழகு பெற்று விளங்குவதையுங் கண்டேன். மக்கள் வாழும் குடிசை களையும் மாளிகைகளையும் பார்த்தேன். தேயிலைத் தோட்டங்களில் மலைநாட்டுத் தமிழ்ப் பெண்கள் கொழுந்து கொய்வதையுங் கண்டேன். பலா, மா, வாழைகள் நிறைந்து அவற்றின்கீழ்க் கனிகள் உதிர்ந்து கிடந்த காட்சி என்னுள்ளத்திற் சிந்தனையைக் கிளறியது.

**''காய்மாண்ட தெங்கின் பழம்விழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே...''**

என்று திருத்தக்கதேவர் பாடியது புனைந்துரையாகாது, மெய்யுரையே யாம் என்றும் அஃது எங்கள் நாட்டுக்கும் பொருந்துமென்றும் தெளிந்தேன்.



கண்டியிலிருந்து அட்டனுக்கும், அங்கிருந்து மஸ்கெலியாவுக்கும் போனோம். இடையே மலைகளை ஊடறுத்து வகுத்த பாதையில் புகைவண்டி சென்றபோது வியப்புத் தருவதாய் இருந்தது. மஸ்கெலியா என்ற இடத்தை நாம் அடைந்தபோது இரவு எட்டு மணியாயிற்று. பால்போல நிலவு பொழியும் அந்தவேளையிலே சிவனொளிபாத மலையை நோக்கி நாம் நடந்தோம். எங்களுக்கு முன்னாகக் கூட்டம் கூட்டமாகச் சிங்களச் சகோதரர்கள் போய்க்கொண்டிருந்தார்கள்.

வழியின் இருமருங்கும் அடர்ந்த காடு சூழ்ந்து, ஊடே சீதளகங்கை என்னும் பேராறும் வேறு சிற்றாறுகளும் அருவிகளும் ஓடிக் கொண்டிருந்தன. யானைகளின் பிளிற்றொலியும் ஏனைய காட்டு மிருகங்களின் ஒலியுந் தொலைவிலிருந்து வந்து அச்சத்தை உண்டாக்கினவேனும் மக்கள் திரண்டு பரந்து சென்றபடியால் நாம் கலக்கமின்றி மகிழ்ச்சியோடு நடந்து சென்றோம்.

மலை அடிவாரத்தில் சில மைல்தூரம் சமதரையில் நடந்து சென்ற நாம், சாய்வான பகுதியில் படிக் கட்டுக்களின் வழியாக மேலே எட்டி ஏறி நடந்தோம். செங்குத்தான மலைப்பகுதியை அடைவதற்கு வளைந்து வளைந்து செல்லும் பாதை வழியே நடந்தோம். சில இடங்களில் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு ஏறினோம். தங்கள் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி

செய்வதற்கும் புத்தரின் பாதபங்கயங்களை வழிபடுவதற்குமாகச் சிங்கள மக்கள் நோயாளிகளைத் தாங்கிச் செல்வோரும் ஆவேசங்கொண்டு போவோருமாகிச் ''சாது சாது சாது'' என்ற கோஷம் செய்துகொண்டு ஏறினார்கள். மக்கள் வழிநடை வருத்தம் நீங்கி ஆறிச் செல்வதற்கு இடையிடையே மடங்கள், சிற்றுண்டிச் சாலைகள் இருந்தன. மலையுச்சியை நாம் அடைவதற்குச் சிறிது தூரத்துக்கு இப்பால் மக்கள் தங்கள் செருப்பு, சப்பாத்து முதலான காலணிகளைக் கழற்றிவிட்டு மேலே சென்றார்கள்.

மலையுச்சியில் முடிபோல ஒரு கோபுரம் வகுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோபுரம் மிகவும் சிறியது. ஏறக்குறைய நூற்றைம்பது பேரைக் கொள்ளக்கூடியது. இரண்டு திருவடிச்சுவடுகள் அங்கேயுள்ளன. அவற்றைச் சைவமக்கள் சிவபெருமானுடையவை என்றும், கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் ''ஆதாம்'' என்ற ஆதிபிதாவின் பாதங்கள் என்றும், பௌத்தர்கள் புத்தபெருமானுடையவை என்றும் நம்பிப் போற்றி வழிபடுகின்றார்கள். எல்லாச் சமயிகளாலும் ஒத்து வழிபடப்பெறும் இடம் இதுவாகும்.

இந்த இடத்தை அடைந்தவுடனே மக்கள் பக்தி பரவசராகிச் ''சாது சாது'' என்று ஆரவாரம் செய்து பாடினார்கள்; ஆடினார்கள். நாங்களும் ''அரோகரா'' சொல்லி வழிபட்டோம். என்னையறியாமலே எனக்கு அப்போது ஒரு மனத் தெளிவும் பக்தியுறுதியும் ஏற்பட்டன. அழகிய விதானத்தின் கீழமைந்த பாதபங்கயங்களின் மேல் வெண்துகில் பரப்பிப் புத்தசமயத்தவர்கள் தமது காணிக்கைப் பொருள்களை வைத்து வணக்கம் செலுத்தினார்கள். கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தி கொளுத்திச் செபஞ்செய்து வழிபட்டார்கள். நாங்களும் கர்ப்பூரம் கொளுத்திச் சிவபுராணம் பாடினோம்.

அவ்விடத்தில் குளிர் கடுமையாகத் தாக்கியது. சிறிது நேரத்தால், கீழ்த்திசையில் ஓர் ஒளி தோன்றியது. ஏழுநிறக்கதிர்களும் எங்கும் பரவத் தொடங்கின. பனிபடிந்த குன்றின் பலவிடங்களிலும் பரந்த கதிர்கள் பொன்னும் வெள்ளியும் உருக்கி வார்த்ததைப்போல் மலையை அழகு செய்தன. சூரியன் கிளம்பிக் குதித்து அசைந்து எழுந்தது போன்ற காட்சியை நாம் கண்ணாரக் கண்டோம். இயற்கைத் தேவதை அளிக்கும் இன்பக் காட்சிகளுள் இது மிகவும் சிறந்ததொன்றாகும். ஒரு புலவனாக இருந்தால் நான் இப்போது கண்ட காட்சியைப் புனைந்து எத்தனையோ கவிதைகளைப் பாடி யான் பெற்ற இன்பத்தைப் பிறரும் நுகரும் பெற்றியைச் செய்திருப்பேன்.

*பின் சிறிது நேரத்தால் நாம் மலையுச்சியினின்றும் கீழிறங்கினோம். இரவுவேளையில் மாலை நேரம் ஏறியபோது தெரிந்ததிலும் பார்க்கப் பகலில் இறங்கியபோது யாவும் தெளிவாகத் தெரிந்தன. மலையடி வாரத்தையடைந்து காலை உணவு அருந்தியபின் மோட்டார் வண்டியிலேறி அட்டனுக்குப் போய், பின்னர் பல்வேறு இடங்களையும் கண்டு மகிழ்ந்து, சில தினங்களால் நண்பர்களும் நானும் வீடு வந்து சேர்ந்தோம்.*

*இந்தச் சுற்றுப்பிரயாணத்தினால் நானடைந்த நலன்கள் பல. எனது உள்ளத்தில் அமைதி சிறிதுண்டானது. பல மக்களையுங் கண்டு பழகியறியும் வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கை வளத்தையும் மலைச் சுகத்தையும் பிறர்க்கு உரைத்து மகிழவும் முடிந்தது.*



**வித்துவான் பொன்.முத்துக்குமாரன்**
**- தமிழ் மரபு -**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| எஞ்ஞான்றும் | - | எப்போதும் |
| சழக்குகள் | - | பயனற்ற செயல்கள் |
| இருமருங்கு | - | இருபக்கம் |
| சீதளம் | - | குளிர்ச்சி |
| பங்கயம் | - | தாமரை |
| வெண்துகில் | - | வெள்ளை ஆடை |
| இசை | - | புகழ் |
| நுகர்தல் | - | அனுபவித்தல் |
| வருக்கை | - | பலாப்பழம் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இலங்கை பற்றி வெளிநாட்டவர் கூற்றுக்கும் இங்கு வாழும் எமது பார்வைக்கும் இடையிலான வேறுபாடு எத்தகையது? இதனைப் ''பாற் கடலில் உள்ள மீன்கள்'' எனும் தொடர் எவ்வகையில் வெளிப்படுத்துகிறது?
2. ''வானம் பார்க்கும் பூமி'', ''மழை வளம் கொழிக்கும் வளமார்ந்த மலைநாடு'' எனப்படும் பிரதேசங்களின் சிறப்புகளை எழுதுக.
3. இக்கட்டுரையின் பயணத்தின் தொடக்க ஊர், பயணித்த இடங்கள் என்பவற்றை வரிசைப்படுத்துக.
4. திருத்தக்க தேவரின் பாடலடிகள் வெறும் புனைந்துரையல்ல எனக் கட்டுரை ஆசிரியர் கூறக் காரணம் யாது?
5. சுற்றுப்பயணம் எத்தகைய பயன்களைத் தந்துள்ளதாக இக்கட்டுரை கூற முற்பட்டுள்ளது?

## செயற்பாடு

உங்களுடைய பயண அனுபவங்களை இக்கட்டுரை போன்று இரசனைப்பாங்குடன் எழுதுக.

# வினைச்சொல் III

## தனிவினை, கூட்டுவினை

பாடு, கண்டுபிடித்தேன், முன்னேறினேன், பாடுங்கள், வெற்றியடைந்தேன், பாடுகிறார்கள்

பாடு, பாடுங்கள், பாடுகிறார்கள் முதலான சொற்களில் வினையடிகள் பகாப்பதங்களாக அமைந்துள்ளன. கண்டுபிடித்தேன், முன்னேறினேன், வெற்றியடைந்தேன் முதலான சொற்களில் வினையடிகள் பகுபதங்களாக அமைந்துள்ளன. பாடு, பாடுங்கள், பாடுகிறார்கள் முதலான சொற்களில் இடம்பெறும் வினையடிகளை மேலும் பொருள்தரக் கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு பகாப்பதங்களாக அமைந்துள்ள வினைகளைத் தனிவினை என்பர். கண்டுபிடித்தேன், முன்னேறினேன், வெற்றியடைந்தேன் முதலான சொற்களில் கண்டு + பிடி, முன் + ஏறு, வெற்றி + அடை என்னும் அடிப்படையில் பிரிபடக்கூடிய பகுபதங்களாக அமைந்துள்ளன. இவ்வாறு பகுபதமாகவுள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்போம்.

கூட்டு வினையடிகள் மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.
ஒரு பெயர்ச் சொல்லுடன் ஒரு வினைச் சொல்லைச் சேர்த்து கூட்டுவினையை ஆக்கலாம்

உதாரணம் :

| | | | | |
|---|---|---|---|---|
| கேள்விப்படு | - | கேள்வி | + | படு |
| கைப்பிடி | - | கை | + | பிடி |
| உத்தரவிடு | - | உத்தரவு | + | இடு |

ஒரு வினைச் சொல்லுடன் ஒரு வினைச் சொல்லைச் சேர்த்து கூட்டுவினையை ஆக்கலாம்

உதாரணம் :

| | | | | |
|---|---|---|---|---|
| சொல்லிக்கொடு | - | சொல்லு | + | கொடு |
| தட்டிக்கேள் | - | தட்டி | + | கேள் |
| பறித்துக்கொள் | - | பறித்து | + | கொள் |

ஒரு இடைச் சொல்லுடன் ஒரு வினைச் சொல்லைச் சேர்த்து கூட்டுவினையை ஆக்கலாம்

*உதாரணம் :*

*பின்பற்று - பின் + பற்று*
*முன்னேறு - முன் + ஏறு*
*சரிபார் - சரி + பார்*

## பயிற்சி

**பின்வருவனவற்றுள் தனிவினை, கூட்டுவினை என்பவற்றை வேறுபடுத்தி எழுதுக.**

1. ஓடினான்
2. வந்திருக்கிறார்
3. எழுதிக்கொள்வான்
4. ஆடுகின்றாள்
5. கடைப்பிடிக்கிறேன்
6. கற்பிக்கிறார்
7. சொல்லிக்கொடுத்தார்
8. பயிரிடுவோம்
9. பேசிக்கொள்வதில்லை
10. சேகரிப்பான்

## ஒலி வேறுபாடு

தமிழ்மொழியிலே லகர, ளகர, ழகர, ரகர, றகர எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்படும் சொற்கள் பலவுள்ளன. அவற்றின் பொருள் வேறுபாட்டினைக் கருத்தில் கொள்ளாது மாணவர்கள் தவறாக எழுதுகின்றனர். மாணவருக்கு மாறுபட்ட ஒலி வேறுபாட்டைப் பிரித்தறிந்து உணர்த்தும் வகையிலும் பொருள் வேறுபாடறியாது எழுதும் மாணவரின் மயக்கத்தைத் தெளிவுறுத்தும் வகையிலும் சில சொற்களைத் தெரிந்து வாக்கியங்களில் அமைத்துள்ளோம்.

### லகர, ளகர, ழகர பேதம்

அலி : அலிகளையும் மனிதரென மதிப்போம்.

அளி : உண்மை உயர்வை அளிக்கும்.

அழி : ஒழுக்கமின்மை வாழ்வை அழிக்கும்.

கலி : கலிகாலத்தில் நன்மைக்குக் காலமில்லை.

களி : களிமண்ணால் கட்டப்பட்ட வீடு.

கழி : தேவையற்ற பொருள்களை வீட்டிலிருந்து கழி.

வாலி : வாலி சிறந்த வீரன்.

வாளி : இராமனின் வாளி இராவணனைத் தாக்கியது.

வாழி : வாழி, வாழி என மக்கள் மன்னனை வாழ்த்தினர்.

### லகர, ளகர, ழகரச் சொற்களும் பொருளும்

பால் : இடம், உரிமை, பக்கம், வெண்மை

பாள் : கம்பி

பாழ் : அழிவு, ஆகாயம், நட்டம், வெறுமை

கலை : சாத்திரம், ஆண்மான், அருங்கலை, வஞ்சகம், கலைத்தல்

களை : அயர்வு, அழகு, பயிர்க்களை, அகற்று

கழை : மூங்கில், கரும்பு, ஓடக்கோல்

வாலை : இளையது, இளம்பெண், சுத்தம்

வாளை : ஒருவகை மீன்

வாழை : ஒருமரம், கனி

காலம் : பருவம், சமயம், பொழுது, முடிவு

காளம் : நஞ்சு, முகில், பாம்பு, கருமை

காழம் : உறுதி

## பயிற்சி

பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1. பூமி (கோல, கோள) வடிவானது.
2. (களை, கலை, கழை) எடாத வயலில் விளைவிராது.
3. இராவணன் சீதையை (விழைந்து, விளைந்து) இலங்கையை இழந்தான்.
4. மாலன் அம்மியை (பொளிந்தான், பொழிந்தான்).
5. திரௌபதிக்கு நடந்ததைக் கண்ட வீமன் (சூழுரைத்தான், சூளுரைத்தான்).
6. வீட்டின் முன்னால் பட்ட மரம் (தளைத்தது, தழைத்தது).
7. முயற்சியுடையவர் முன்னேறுவது (இலகு, இளகு).
8. தமயந்தியிடம் அன்னப் (புள், புல்) தூது சென்றது.
9. (இழவு, இளவு) வீட்டில் மக்கள் கண்ணீர் பெருக அஞ்சலி செலுத்தினர்.
10. பெண்களின் தோளினை (நாளிக்கு, நாழிக்கு) உவமிப்பர்.

### ரகர, றகர பேதம்

பொரி : நெற்பொரி எறிந்து யாகம் செய்யப்பட்டது.

பொறி : பொறி வைத்து எலியைப் பிடித்தான்.

இரை : நாய் தன் இரையைக் கௌவிச் சென்றது.

இறை : இறை அருள் இருந்தால் காரியம் ஈடேறும்.

### ரகர, றகர சொற்களும் பொருளும்

அரவு : பாம்பு, ஒலி

அறவு : அவா, அறுதல், தொலைதல்

உருமு : அச்சம், இடி,
உறுமு : உறுமல்

உரை : சொல், பொன், நூல், புகழ், விடை, கூறுதல்
உறை : இடம், உறைதல், இரை, உயர்ச்சி, துன்பம்

குரவர் : ஆசிரியர், அரசர், தந்தை, மூத்தோர்
குறவர் : குறிஞ்சி மக்கள், வேடர்

குரை : குதிரை, பெருமை, குளம்பு, நாய் குரைத்தல்,
குறை : குற்றம், வறுமை, தவறு, வெறுப்பு

துரை : தலைவன், வேகம்
துறை : ஆறு, இடம், எல்லை, காரியம்

நரை : வெளுத்தமுடி, வெண்மை, சாமரை, மூப்பு
நறை : கள், குற்றம், தேன், வாசனை, நறும் புகை

மரித்தல் : இறத்தல், நினைத்தல்
மறித்தல் : தடுத்தல், அழித்தல்

மரை : ஒரு வகை மான், தவளை, தாமரை,
மறை : வேதம், இரகசியம், புள்ளி, மந்திரம், களவு, மறைதல்

விரல் : கையிலுள்ள உறுப்பு
விறல் : பெருமை, வலி, வீரம், வெற்றி

விரகு : தந்திரம், உற்சாகம், விவேகம்
விறகு : எரிகட்டை

## பயிற்சி

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்குக.

1. இரை :
   இறை :

2. பரவை :
   பறவை :

3. தெரு :
   தெறு :

4. தாரு :
   தாறு :

5. மருப்பு :
   மறுப்பு :

## பயிற்சி

அகராதியின் துணையுடன் பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தேடியறிக:

1. ஒருத்தல் -
   ஒறுத்தல் -

2. துரத்தல் -
   துறத்தல் -

3. பிரை -
   பிறை -

4. கூருதல் -
   கூறுதல் -

5. வருத்தல் -
   வறுத்தல் -

# 8 இனியவை கூறல்

## திருக்குறள்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
   செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

**பொருள்:** அறத்தை உணர்ந்தவர்களின் பயன் மிக்க சொற்கள், இன்பம் பயக்கக்கூடிய, அன்போடு இயைந்த, மனத்தால் வஞ்சனையற்ற சொற்களாகவே இருக்கும்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே; முகன்அமர்ந்து
   இன்சொலன் ஆகப் பெறின்.

**பொருள்:** நெஞ்சு உவந்து ஒரு பொருளைக் கொடுப்பதை விடவும், முகம் இனியனாக இன்சொல் கூறுவது மிகவும் நல்லது.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
   இன்சொ லினதே அறம்.

**பொருள்:** முகம் மலர்ந்து, இனிமையாகப் பார்த்து, விரும்பிய மனத்தோடு இனிய சொற்களைக் கூறுதலின் கண்ணது அறம்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்; யார்மாட்டும்
   இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

**பொருள்:** நண்பர், பகைவர் என்று வேறுபாடு பாராட்டாது அனைவர்க்கும் இன்பத்தையளிக்கும் இன்சொல் கூறுபவர்களுக்கு, வெறுத்து ஒதுக்கும் துன்பம் இராது. விரும்பி ஏற்கும் இன்பம் பெருகும்.

5. பணிவுஉடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

**பொருள்:** *ஒருவன் பணிவுடைமையோடு இனியவை கூறலையும் பெற்றிருப்பதே சிறப்பு. அவனுக்கு அதைவிடப் பெருமை தருவது பிறிதொன்றும் இல்லை.*

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

**பொருள்:** *பிறர் நலத்தை நாடி இனிய சொற்களைக் கூறினால் பாவம் குறைந்து அறம் பெருகும்.*

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

**பொருள்:** *பிறர்க்கு நன்மையைக் கொடுத்து, இனிமைப் பண்பில் நீங்காத சொல்லானது இன்பத்தையும் அறத்தையும் தரும்.*

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

**பொருள்:** *பிறர்க்குத் துன்பம் தராத இனிய சொல், ஒருவனுக்கு இப்பிறப்பிலும் மறுமையிலும் இன்பம் பயக்கும்.*

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

**பொருள்:** *இன்சொல் தனக்கும், பிறர்க்கும் இன்பம் பயத்தலை அனுபவித்து அறிபவன் சிறுமையைத் தரும் வன்சொல் கூறுவது என்ன பயன்கருதியோ?*

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

**பொருள்:** *நன்மை பயக்கும் இனிய சொற்கள் உளவாக, அவற்றைக் கூறாமல் தீமை பயக்கும் கடுஞ்சொற்களைக் கூறுவது, கனியே தம்மிடம் இருப்பினும் அதையுண்ணாமல் தீமைபயக்கும் காயைத்தேடித் தின்பதைப்போன்றது.*

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈதல் அறம் எவ்வகையில் அமைய வேண்டும்?
2. இனிய சொற்களைக் கூறுதல், பணிவு என்பன எவ்வகையில் சிறப்புடையன?
3. பண்பட்ட இனிய சொற்கள் எத்தகைய நன்மைகளை வழங்கும்?
4. ''சிறுமை நீங்கிய இன்சொல்'' பற்றி விளக்குக.
5. ''கனியிருப்பக் காய் கவர்தல்'' என்ற உவமைத் தொடரின் சிறப்பினை எழுதுக.

## செயற்பாடு

''நட்பை வளர்க்கும் இன்சொல்லும் பகையைத் தூண்டும் வன்சொல்லும்'' எனும் பொருளில் மேடைப்பேச்சினை எழுதி உரையாற்றுக.

# சொற்றொடர் வகைகள்

*அமைப்பு ரீதியான உறவுடைய ஒரு சொல் அல்லது சொற்களின் தொகுதி சொற்றொடர் ஆகும் என்பது பற்றி தரம் 8 இல் கற்றுள்ளோம் அல்லவா?*

*வாக்கியமொன்றின் உறுப்புக்களாகச் சொற்றொடர்கள் அமைகின்றன.*

*பின்வரும் வாக்கியத்தினைக் கவனமாக அவதானிப்போம்.*
*கன்னங்கரேலெனக் கறுத்த யானைகள் மிகப் பயங்கரமாகப் பிளிறின.*
*இந்த வாக்கியத்தில் பிரதானமாகப் பின்வரும் இரு சொற்றொடர்கள் இடம் பெற்றிருப்பதனை அவதானிப்போம்.*

‘கன்னங்கரேலெனக் கறுத்த யானைகள்’ என்ற சொற்றொடரில் பிரதானமான சொல்/உறுப்பு (தலைமை உறுப்பு) எது?

‘யானைகள்’ என்பதே இத்தொடரில் காணப்படும் பிரதான சொல் ஆகும். யானைகள் பெயர்ச்சொல் ஆகும். எனவே இச்சொற்றொடரின் பிரதான உறுப்பாக பெயர்ச்சொல் அமைந்துள்ளது. இத்தகைய தொடர்களை பெயர்த் தொடர் என்போம்.

ஒரு பெயர்ச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயர்த் தொடர் எனப்படும்.

‘மிகப் பயங்கரமாகப் பிளிறின’ என்ற சொற்றொடரில் பிரதானமான சொல்/உறுப்பு (தலைமை உறுப்பு) எது?

‘பிளிறின’ என்பதே இத்தொடரில் காணப்படும் பிரதான சொல் ஆகும். பிளிறின வினைச்சொல்லாகும். எனவே இச்சொற்றொடரின் பிரதான உறுப்பாக வினைச் சொல் அமைந்துள்ளது. இத்தகைய தொடர்களை வினைத்தொடர் என்போம்.

ஒரு வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினைத் தொடர் எனப்படும்.

‘கன்னங்கரேலென கறுத்த யானைகள்’ என்று சொற்றொடரை மேலும் சொற்றொடர்களாக்கலாம்.

யானைகள்
கன்னங்கரேலெனக் கறுத்த
கன்னங்கரேலென
கறுத்த

மேலே உள்ளவற்றில் ‘யானைகள்’ என்பது ஒரு சொல்லாக இருந்தாலும் அது வாக்கியத்தில் ஒரு சொற்றொடராகவே தொழிற்படுகின்றது என்பதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும். யானைகள் பெயர்ச்சொல் ஆதலால் அது பெயர்த்தொடர் ஆகும்.

கன்னங்கரேலெனக் கறுத்த என்ற சொற்றொடரில் பிரதானமான சொல்/உறுப்பு (தலைமை உறுப்பு) கறுத்த என்ற சொல்லாகும். அது பெயரடையாகும். எனவே இச்சொற்றொடரின் பிரதான உறுப்பாக பெயரடை அமைந்துள்ளது. இத்தகைய தொடர்களை பெயரடைத் தொடர் என்போம்.

கன்னங்கரேலென, கறுத்த ஆகியனவும் பெயரடைத் தொடர்களே ஆகும்.

> ஒரு பெயரடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயரடைத் தொடர் எனப்படும்.

'மிகப்பயங்கரமாகப் பிளிறின' என்ற சொற்றொடரை மேலும் சொற்றொடர் களாக்கலாம்.

*பிளிறின*
*மிகப்பயங்கரமாக*
*மிக*
*பயங்கரமாக*

மேலே உள்ளவற்றில், ஒரு சொல்லாக இருந்தாலும் வாக்கியத்தில் சொற்றொடராகத் தொழிற்படும். 'பிளிறின' என்பது வினைச்சொல் ஆதலால் அது வினைத்தொடர் ஆகும்.

மிகப் பயங்கரமாக என்ற சொற்றொடரில் பிரதானமான சொல்/உறுப்பு (தலைமை உறுப்பு) பயங்கரமாக என்ற சொல்லாகும். அது வினையடையாகும். எனவே இச்சொற்றொடரின் பிரதான உறுப்பாக வினையடை அமைந்துள்ளது. இத்தகைய தொடர்களை வினையடைத்தொடர் என்போம்.

மிக, பயங்கரமாக என்பனவும் வினையடைத் தொடர்களே ஆகும்.

> ஒரு வினையடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினையடைத் தொடர் எனப்படும்.



## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

1. என்றும் அழியாத தர்மம் இறுதியில் வெல்லக் காண்போம்.
2. செயல்முறையில் செய்து கற்றல் சிறந்த பயனளிக்கும்.
3. எல்லோரையும் விட அறிவாளியான முகுந்தன் பக்குவமாகப் பேசினான்.
4. பச்சைப் பசேலென விரிந்து கிடக்கும் வயல்வெளிகள் காண்போரை மெய் சிலிர்க்க வைத்தன.
5. பெரிய பெரிய கப்பல்கள் வரிசை வரிசையாகக் கரைசேர்ந்தன.

| | பெயர்த்தொடர் | வினைத்தொடர் | பெயரடைத் தொடர் | வினையடைத் தொடர் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |

## மரபுப்பெயர்கள்

தமிழ்மொழியில் வழங்கிவரும் மரபுப்பெயர்கள் சிலவற்றை முன்னைய வகுப்புக்களில் கற்றுள்ளோம். மேலும் சில மரபுப்பெயர்களை இங்கு அறிந்து கொள்வோம்.

### விதைகளைக் குறிக்கும் மரபுப் பெயர்கள்

வேம்பு - முத்து/விதை/கொட்டை

ஆமணக்கு - முத்து

கடுகு - மணி

கோதுமை - மணி

சோளம் - மணி

நெல் - மணி

வெண்டி - கொட்டை

தோடை - கொட்டை

கத்தரி - விதை

மிளகாய் - விதை

## பிஞ்சுகளைக் குறிக்கும் மரபுப்பெயர்கள்

தென்னை - குரும்பை

பனை - நுங்கு

பலா - மூசு

மா - வடு

வாழை - கச்சல்

## இலைகளைக் குறிக்கும் மரபுப்பெயர்கள்

தென்னை - ஓலை

தாழை - மடல்

வெங்காயம் - தாள்

தினை - தாள்

கமுகு - கூந்தல்

## வேறு சில மரபுப்பெயர்கள்

ஆடு மேய்ப்பவன் - இடையன்

பசு மேய்ப்பவன் - ஆயன்

குதிரை செலுத்துபவன் - பாகன்

விமானம் செலுத்துபவன் - வலவன்

கப்பல் செலுத்துபவன் - மீகாமன், மாலுமி

## பயிற்சி

**பொருத்தமான மரபுப்பெயர்களை எழுதுக.**

1. ஆமணக்கிற்கு முத்து போல புடோலிற்கு ..........
2. பலாவிற்கு மூசு போல அவரைக்கு ..........
3. சோளத்திற்கு தாள் போல பனைக்கு ..........
4. யானைக்குப் போதகம் போல சிங்கத்திற்கு ..........
5. நரி ஊளையிடும் என்பதைப் போல பசு ..........
6. ஆந்தை அலறும் என்பதைப் போல கோழி ..........
7. ஆட்டிற்கு மந்தை போல பசுவிற்கு ..........
8. பற்களுக்கு வரிசை போல மலரிற்கு ..........
9. ஆட்டிற்கு  இடையன் போல யானைக்கு ..........
10. கப்பலுக்கு மாலுமி போல பேருந்திற்கு ..........

# 9 வியக்கும் மனம் வேண்டும்

நாகரிகப் பெருநகரத்தின் வீதிகள் எல்லாம் வெளிச்ச மயம். எண்ணற்ற மின் விளக்குகள் இருளைத் துரத்திவிட்டுப் பேரொளி பரப்பிக் கொண்டிருந்தன. கடைகள், கட்டிடங்கள் எங்கெங்கும் ஒளிமழை பொழியும் விதவிதமான விளக்குகள். இரவு என்று தெரியாதபடி எங்கும் வெளிச்சமயம். வீடுகள் தோறும் ஒளி சிரிக்கும் விளக்குகள். நகரத்தின் பல பகுதிகளும் தனி அழகுடன் ஒளிர்ந்தன.

திடீரென்று மின்சக்தி செயலற்றுப் போச்சு.

இருட்டு கவிழ்ந்தது; எங்கும் இருட்டு; வீதிகளில் சந்து பொந்துகளில் வீடுகளில் எங்கெங்கும் இருட்டு. இருட்டைப் போக்குவதற்கான தற்காலிக ஏற்பாடுகளில் முனைந்தனர் மனிதர்கள். இப்போது இருள் சிரிக்கத் தொடங்கியது.

ஒரு வீட்டில், பொங்கிப் பெருகி வழிந்த பெரும் வெளிச்சத்தில் தனி அறையில் அமைதியாகப் படித்துக் கொண்டிருந்த ஒருவன் வெளிப்புறம் வந்து நின்றான். ஆகா, என வியந்தது அவன் மனம். கண்கள், பார்வையைச் சுற்றிலும் மிதக்கவிட்டன. நிலா ஒளி அற்புதமாகப் படிந்து கிடைப்பதை வியப்புடன் விழுங்கினான் அவன். தனி அழகுடன் குளுகுளுத்தது சூழ்நிலை. கட்டிடங்களும் மரங்களும் பிறவும் ஒரு மோகன அழகுடன் காட்சி தந்து கொண்டிருந்தன. இரவைப் பகலாக்க முயலும் செயற்கை ஒளி இல்லை. இரவை இரவாகவே காட்சிப்படுத்தும் ஒளி தவழ்ந்து நின்றது நெடுகிலும். வானம்கூட அற்புதமாகக் காட்சியளித்தது. செயற்கை ஒளிப்பெருக்கு இயற்கையின் எழிலை, இனிமையை மறைத்திருந்தது அவன் மனசில் பட்டது.

ஒளிப்பெருக்கு ஓர் அழகு என்றால், இருளின் நிறைவு தனி வசீகரம். இரவு இருட்டுமயமாகவே இருந்துவிடுவது இல்லை. இருட்டு குறைவான வெளிச்சம் என்கிறார் மகாகவி. இருள் ஒளிக்குப் பகையா? அல்லது ஒளியை எடுத்துக்காட்ட வாய்த்த துணையா? இரவு மோகனமானது. இரவிலும் ஒளி செய்கிற அற்புதங்கள் நிறைந்திருக்கின்றன. வானத்தின் வெள்ளிகள் அமுத ஒளி பாய்ச்சும் குளுமையான நிலவு. இப்படிப் பல.

வெளிச்சமே வெளிச்சத்துக்குப் பகையாகிவிடுகிறது. நிலாவின் அமுத ஒளி அழகை உணரவிடாதபடி விளக்குகள் தடையாக ஒளிர்கின்றன. நாகரிகப் பெரும் வெளிச்சங்களுக்குப் பழகிப் போன மனிதர்கள் நிலாவை, விண்மீன்களை, வானத்தின் ரகசியங்களைக் காணத் தவறிவிடுகிறார்கள். காண்பதற்கான மனமும் நாட்டமும் அவர்களுக்கு இருப்பதில்லை. அதனால் எத்தனையோ இனிமைகளை இழந்துவிட்டார்கள். செயற்கை ஒளி வெள்ளம் மேவாத கிராமப்புறங்களில்கூட மக்கள் முன்காலங்களைப் போல் நிலாவின் இனிமையை ரசித்து அனுபவிக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. வாழ்க்கைப் பரபரப்பும் பிரச்சினைகளும் கவனங்களும் மிகுந்ததாக ஆகிவிட்டது பெரும்பாலோருக்கு.

நிலா, முன்பு சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் களிப்பு அளிக்கும் களிப்பு ஆக இருந்தது. நிலவில் அமர்ந்து கதைகள் பேசி உண்டு மகிழ்வதற்கு மக்களுக்கு முன்பு நேரம் இருந்தது; மனமும் இருந்தது. இளம்பெண்களும் சிறார்களும் வகைவகையான விளையாட்டுகள் ஆடி மகிழ்வதற்கு நிலா துணைபுரிந்தது; உற்சாகம் அளித்தது. இக்காலத்தில் அத்தகைய விளையாட்டுகள் மறக்கப்பட்டு விட்டன. சின்னஞ்சிறுசுகளுக்கு இனிய கதைகள் சொல்லி சந்தோஷப்படுத்துவதற்கு பெரியவர்களுக்கு நேரமும் இல்லை.பொறுமையும் இல்லை. பலருக்குச்சுவையாகக் கதைகள் சொல்லக்கூடிய ஆற்றலும் இல்லை என்ற நிலைமை.

நகரத்தில் வசிப்பவர்கள் வானத்தைப்பார்க்க மறந்து போனார்கள். எண்ணற்ற சிறுவர் சிறுமியருக்கு நட்சத்திரங்கள், சந்திரன் முதலிய அற்புதங்களைக் கண்ணாரக் காணக்கூடிய வசதிகள் இல்லாமலே போயின. வாழ்க்கையில் சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்க்கக்கூடிய வாய்ப்புகளோ, பார்க்க வேண்டும் எனும் ஆசையோ நகரவாசிகளுக்கு இல்லை.

செம்பட்டுச் சல்லடம் சொகுசாக உடுத்தி எழிலாகக் கிழக்கில் சிரித்து வரும் உஷை பற்றிய கவிஞனின் வர்ணனை, இன்றைய நாகரிக மனிதர்களுக்கு பேத்தல் (பிதற்றல்) ஆகவே தோன்றும். அந்தி வானில் உமை கவிதை செய்து கொண்டிருக்கிறாள் என்ற கவிக்கூற்றும் புரியாத விஷயமாகவேபடும் அவர்களுக்கு. வைகறை வேளையின் ஒளி மலர்ச்சிகளையும் அந்திவேளையின் வர்ணமய வானத்து விந்தைகளையும் கண்டு வியக்க எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள்?

தொலைக்காட்சிப்பெட்டி முன் அமர்ந்து அநாகரிகக் கூத்துகளையும் அபத்த ஆட்டங்களையும் பார்ப்பதிலேயே பெரியவர்களும் சிறியவர்களும் கருத்தாக இருக்கிறார்கள். காலம் மாறிவிட்டது. மனிதர்களின் விருப்பங்களும் போக்குகளும் மாறிப்போயின. இயற்கையை, அதன் வனப்புகளையும் வசீகரங்களையும் காணவேண்டும்என்கிற எண்ணம் மனிதருக்கு வேண்டும்.

*செயற்கைச்சாதனங்கள் பயனுள்ளவை; வலியன. சந்தேகமில்லை.அவற்றைப் போலவே - பல சமயங்களில், அவற்றை விடவும் - வலுவானவை; வனப்பு மிக்கவை; இனிமையானவை இயற்கை சக்திகள். அவற்றைக் கண்டு வியந்து, ரசித்துப் பழகி, பயன்படுத்தி மகிழக்கூடிய மனசை நாம் மீண்டும் பெறவேண்டும்.*



**வல்லிக்கண்ணன்**

**- வல்லிக்கண்ணன் கட்டுரைகள்-**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வசீகரம் | - | அழகு/கவர்ச்சி |
| களிப்பு | - | சந்தோஷம் |
| வைகறை | - | அதிகாலை |
| உஷை | - | சூரியனின் சக்தி |
| உமை | - | சக்தி, இறைவி |
| சல்லடம் | - | அரைக்கால் சட்டை |
| அபத்தம் | - | மோசம்/பொய் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நகரம் எங்கும் வெளிச்ச மயமாவதற்குக் காரணம் யாது? அது அற்றுப்போகும்போது ஏற்படும் சூழல் எத்தகையது?
2. ''இரவை இரவாகவே காட்சிப்படுத்தும் ஒளி'' எத்தகைய பண்புச் சிறப்புடையது?
3. ''இருட்டு குறைவான வெளிச்சம்'' என்ற மகாகவியின் கூற்றினை விளக்குக.
4. நாகரிகப் பெருவெளிச்சம் எத்தகைய தீமைகளை ஏற்படுத்தியுள்ளது?
5. வலிமைதரும் செயற்கையை வளர்க்கும் அதேவேளை, இயற்கை வனப்புகளை அள்ளிப் பருகும் பக்குவத்தின் அவசியத்தை இவ்வாக்கம் எவ்வகையில் வலியுறுத்தி நிற்கின்றது என விளக்குக.

**செயற்பாடு**

செயற்கையான வளர்ச்சிகள் ஏற்படுத்தியிருக்கும் நன்மைகள், தீமைகள் என்பன குறித்த விவாத அரங்கினை ஏற்பாடு செய்க.

## வாக்கியத்தின் அமைப்பு

வாக்கியம் தொடர்பாக தரம் 8 இல் கற்ற விடயங்களை நினைவுபடுத்திக் கொள்வோம்.

விமலன் கடைக்குச் சென்றான்.
அப்துல்லா தோட்டத்திற்குச் சென்று பூக்களைப் பறித்தான்.

மேலேயுள்ள இரண்டு வாக்கியங்களையும் அவதானியுங்கள்

முதலாவது வாக்கியத்தில் எழுவாயின் (விமலன்) செயலொன்று கூறப்பட்டுள்ளது, அது ஒரு வாக்கியத் தொடரால் அமைந்துள்ளது. இதனையே தனிவாக்கியம் என்போம்.

ஒரு வாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியம் தனி வாக்கியம் எனப்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் எழுவாயின் (அப்துல்லா) இரு செயல்கள் கூறப் பட்டுள்ளன. அதாவது இரு வாக்கியத் தொடர்களையும் பின்வருமாறு தனித் தனியே இரு வாக்கியங்களாகவும் எழுதமுடியும்.

அப்துல்லா தோட்டத்திற்குச் சென்றான்.
அப்துல்லா பூக்களைப் பறித்தான்.

இவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத் தொடர்களால் அமையும் வாக்கியங்களைத் தொடர் வாக்கியம் என்போம்.

தொடர்வாக்கியங்கள் ஒரு எழுவாயின் ஒன்றிற்கு மேற்பட்ட செயல்களாகவோ, ஒன்றிற்கு மேற்பட்ட எழுவாய்களின் ஒரு செயலாகவோ ஒன்றிற்கு மேற்பட்ட எழுவாய்களின் ஒன்றிற்கு மேற்பட்ட செயல்களாகவோ அமையலாம்.

ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம் தொடர் வாக்கியம் எனப்படும்.

கீழே இரண்டு வாக்கியங்கள் தரப்படுகின்றன. அவை இரண்டுமே தொடர்வாக்கியங்கள். அவற்றைக் கவனமாக அவதானியுங்கள்.

கமலினி கடதாசியால் பூக்களைச் செய்து வீட்டை அழகுபடுத்தியிருந்தாள்.
நாளை மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

மேலுள்ள இரண்டு வாக்கியங்களில்

முதலாவது வாக்கியம் இரு வாக்கியத் தொடர்களைக் கொண்டிருந்தாலும் அவை அமைப்புரீதியாக ஒன்றில் ஒன்று தங்கியிருக்கவில்லை. அவை சமநிலையில் இணைக்கப்பட்டுள்ளன.

கமலினி கடதாசியில் பூக்களைச் செய்தாள்.
கமலினி வீட்டை அழகுபடுத்தியிருந்தாள்.

இவ்விரண்டுமே சுயாதீனமான சமநிலைத்தொடர்கள் ஆகும். இவ்வாறான வாக்கியத் தொடர்களால் அமையும் வாக்கியங்களே கூட்டுவாக்கியம்.

சமநிலை வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம் கூட்டு வாக்கியம் எனப்படும்.

நாளை மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்தது.
என்ற வாக்கியத்தில்

நாளை மழை பெய்யும்.
வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

என்ற வாக்கியத் தொடர்களிடையே அமைப்பு ரீதியான தொடர்பு உள்ளதை அவதானிக்கலாம்.


வானிலை அவதான நிலையம் அறிவித்தது என்ற வாக்கியத் தொடரே பிரதான தொடர் ஆகும். அந்த தலைமைத் தொடரைச் சார்ந்திருக்கும் தொடரே நாளை மழை பெய்யும் என்பதாகும்.

இவை சமநிலைத் தொடர்கள் அல்ல சமனில் தொடர்கள் (சமனற்ற தொடர்கள்) ஆகும். இவ்வாறான வாக்கியத் தொடர்களால் அமையும் வாக்கியங்களை கலப்பு வாக்கியம் என்போம்.

சமனில் வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப்படும்.

இதுவரை கற்றவற்றைத் தொகுத்துப்பாருங்கள்.

**வாக்கியங்களை அமைப்பு ரீதியாகப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.**




## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களை தனிவாக்கியமா, கூட்டு வாக்கியமா அல்லது கலப்பு வாக்கியமா என இனங்கண்டு எழுதுக.**

1. நான் நேற்று கண்டியிலிருந்து கொழும்பிற்கு வந்தேன்.
2. நாளை நாங்கள் மிருகக்காட்சிச் சாலைக்குச் செல்வோம்.
3. வெளிநாடு சென்ற தர்மினி நாடு திரும்பியிருக்கிறாள்.
4. அச்சம் தவிர் என்பது பாரதியின் கூற்றாகும்.
5. பறவைகள் வான்வெளியில் பறந்தன.

# செய்திகள்

## செய்தி என்றால் என்ன?

இவ்வினா தொடர்பாகக் கலந்துரையாடுக. அவ்வாறு கலந்துரை யாடும் போது பல தகவல்கள் கிடைக்கப்பெறும். அவற்றை வைத்துக் கொண்டு பின்வரும் வரைவிலக்கணத்திற்கு வருதல் நன்று.

| |
|---|
| *நிகழ்ந்த, நிகழ இருக்கின்ற, நிகழும் செயல்கள் தொடர்பாக ஊடகங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் தகவல்களே செய்திகள்* |

செய்திகளை ஊடகங்களுக்குப் பெற்றுத் தருபவரைச் செய்தியாளர் என்போம்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற நிறுவனங்கள் உடனுக்குடன் செய்திகளை வெளியிட வேண்டியிருப்பதனால், தமக்கெனச் செய்தி யாளர்களைப் பணியில் அமர்த்துகின்றன.

## செய்தி வகைகள்

★ அரச செய்திகள்

★ வெளிநாட்டுச் செய்திகள்

★ வர்த்தக வாணிபச் செய்திகள்

★ விளையாட்டுச் செய்திகள் என பலவாகும்.

## செய்தி ஒன்றை எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டியவை.

தலைப்புச் செய்தியை எழுதுதல்.

விரிவான செய்தியாக மாற்றுதல்.

கவர்ச்சியான முறையில் எழுதுதல்.

தெளிவான - விளங்கக் கூடிய - மொழிநடையைக் கையாளுதல்.

பொருத்தமான படங்களை இணைத்தல்.

## பயிற்சி

1. நாளாந்தம் வெளிவரும் பத்திரிகையிலிருந்து முக்கியமான செய்திகளைப் பட்டியற்படுத்துக.

2. வானொலி, தொலைக்காட்சியில் வெளிவரும் ஒருநேரச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

## செயற்பாடு

மூன்று குழுக்களாகப் பிரிந்து பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றிற்கு செய்திகளை எழுதி முன்வைக்குக.

# 10 செய்யும் தொழிலே தெய்வம்



செய்யும் தொழிலே தெய்வம் – அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி

(செய்யும்)

பயிரை வளர்த்தால் பலனாகும் – அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் – இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங்காலமுண்டு அதை நம்பிடுவோம்

(செய்யும்)

சாமிக்குத் தெரியும், பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை – அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை – இதைப்
பாடிப்பாடி விளையாடி ஆடிப்பல
கோடிக் கோடி முறை கும்பிடுவோம்

(செய்யும்)

காயும் ஒரு நாள் கனியாகும் – நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் – நம்
கனவும் நினைவும் நிலையாகும் – உடல்
வாடினாலும் பசி மீறினாலும் – வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம்

(செய்யும்)



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- ஆளுக்கொரு வீடு - 1960

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தொழில் திறனை விருத்தி செய்து பணியாற்றுகிறவர்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் கிடையாது என்பதனை எவ்வகையில் இப்பாடல் விளக்குகிறது?

2. இதனை எடுத்துக்காட்டும் குறள் ஒன்றினை எழுதுக.

3. ‘‘வேர்வைகள் எல்லாம் விதையாகும்’’ எனும் தொடரினை விளக்குக.

4. இப்பாடலின் கடைசி இரண்டு அடிகளின் ஊடாக கவிஞர் கூற விழைவது என்ன?

5. ‘‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’’ என்பதனை இப்பாடல் எவ்வகையில் வெளிப்படுத்தி நிற்கிறது?

## செயற்பாடு

இசையுடன் இப்பாடலைப் பாடி, அபிநய நடிப்பினை வெளிப்படுத்தும் அரங்காற்றுகை ஒன்றை நிகழ்த்துக.

# அடைமொழிகள்

குளிர்மையான காற்று வீசுகின்றது.
வீதியில் வாகனங்கள் வேகமாகச் செல்கின்றன.

மேலேயுள்ள வாக்கியங்களை அவதானியுங்கள். அவற்றில் இடம்பெற்றுள்ள 'குளிர்மையான', 'வேகமாக' ஆகிய சொற்களைக் கூர்ந்து நோக்குங்கள். அவை எவ்வகையின?

தரம் 8 இல் வாக்கியங்களில் இடம்பெறும் இத்தகைய சொற்கள் பற்றிக் கற்றுள்ளோமல்லவா? ஆம், இவை அடைமொழிகள் எனப்படுகின்றன.

மேலுள்ள முதலாவது வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'குளிர்மையான' என்பது பெயரடையாகும்.

இரண்டாவது வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'வேகமாக' என்பது வினையடையாகும்.

அடைமொழிகள் தொடர்பாக தரம் 8 இல் கற்ற விடயங்களை நினைவுபடுத்திக் கொள்ளுவோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள அடைமொழிகளை இனங்கண்டு, அவை பெயரடைகளா, வினையடைகளா என்பதனைக் குறிப்பிடுக.**

1. புறாவைப் பார்த்த மன்னன் மிகுந்த வேதனைப்பட்டான்.
2. அழகிய பூஞ்சோலையில் பாரி அமர்ந்திருக்கிறான்.
3. வியாபாரி சுவையான மாம்பழங்களை விற்றான்.

4. மணிமேகலையின் செயலை அனைவரும் வியப்போடு பார்த்தார்கள்.

5. விமலன் ஒரு படித்த பையன்.

6. நகரங்களில் வீடுகளைச் சின்னஞ்சிறியனவாகக் கட்டுகிறார்கள்.

7. சுந்தரேசன் மிகமிக இனிமையாகப் பாடினான்.

8. அழகி ருசியான கறிகளைச் சமைத்தாள்.

9. தெள்ளிய திரைகள் தாலாட்டக் கமலப்பள்ளியில் இனிது துயின்றது.

10. சித்திரச் சோலைகளே, உமை நன்கு திருத்த எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தனரோ?

## சொற்பொழிவு

கேட்போர் மனதில் கருத்தோட்டத்தினை உண்டாக்கும் வண்ணம் சரளமாக உரையாற்றுதலைச் சொற்பொழிவு எனக் கூறுவர். ஆன்மிகச் சொற்பொழிவுகளும் இலக்கிய சொற்பொழிவுகளும் அவதானிக்கும் திறனை வளர்ப்பதுடன் அறிவையும் மேம்பாடடையச் செய்யும். மனதைப் பண்படுத்தும்.

**நல்ல சொற்பொழிவின் இயல்புகள்**

- தலைப்புக்கு அமைவாக இருத்தல்
- தெளிவாக இருத்தல்
- அவசியமான இடங்களில் தொனி வேறுபாட்டுடன் இருத்தல்
- விளக்கமாகவும் பொருள் விளங்கும் வகையிலும் கருத்தூன்றிப் பேசப்படல்.
- திரட்டப்பட்ட தகவல்களைக் கேட்போர் விரும்பும் வகையில் வழங்குவதாக இருத்தல்.
- பொருத்தமாக மேற்கோள்கள், பாடல்கள், கதைகள், கிளைக்கதைகள் கையாளப்படல்.

**இலக்கியச் சொற்பொழிவொன்றை கேட்டுக் கிரகித்து குறிப்பெடுக்கும் பொறிமுறைகள்**

- சொற்பொழிவு நிகழும் இடத்துக்கு எழுதுதாள்கள், எழுதுகருவிகளை எடுத்துச் செல்லல்.
- கருத்தூன்றிக் கேட்டல்.

- கருத்துக்களைக் குறிப்பெடுத்தல்.
- சொற்பொழிவில் கையாளப்படும் மேற்கோள்களைக் கவனத்தில் எடுத்தல்.
- பொருள்விளங்காத சொற்களை, கலைச் சொற்களைக் குறித்து வைத்தல்.

**இலக்கியச் சொற்பொழிவொன்றைக் கேட்பதால் பெறக்கூடிய பயன்கள்**

- அவதானித்துக் கேட்டுக் கிரகித்துச் சிந்திக்கும் திறன் வளரும்.
- அறிவாற்றலை விருத்தியடையும்.
- குறிப்பெடுக்கும் திறன் வளரும்.
- பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.
- கேட்டுக் கிரகித்தவற்றை, பொருத்தமான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும் ஆற்றல் வளர்ச்சி அடையும்.

## பயிற்சி

பாடசாலையில் அல்லது சமூகத்தில் நடைபெற்ற விழாக்களை அவதானித்து அங்கு இடம்பெற்ற

★ வரவேற்புரை

★ தலைமையுரை

★ பாராட்டுரை

★ நன்றியுரை என்பவற்றை நிகழ்த்திக் காட்டுக.

## செயற்பாடு

குழுக்களாகப் பிரிந்து பாடசாலை நிகழ்வுகளுக்கு வரவேற்புரை, தலைமையுரை, பாராட்டுரை, நன்றியுரை எழுதி உரையாற்றுக.

# 11 செய்யுளை மனனஞ் செய்யும் வழி

முற்காலத்தில், மனப்பாடஞ் செய்தல் ஒரு நல்ல செயலாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் தமிழ் படிக்கும் மாணவர்கள் 'நிகண்டு' என்னும் நூல் முழுவதையும் மனப்பாடஞ் செய்வார்கள். நிகண்டு மனப்பாடஞ் செய்த மாணவர் பிற்காலத்தில் பெரிய தமிழ் அறிஞர்களாகவும் வித்துவான்களாகவும் இருந்தார்கள். ஆனால் பொருள் விளங்காமல் மனப்பாடஞ் செய்வது மிகவும் கடினமானது. பொருள் விளங்கிவிட்டால் மனப்பாடஞ் செய்வது அவ்வளவு கடினமான வேலையன்று. ஒவ்வொரு மாணவனும் சில பகுதிகளை மனனஞ் செய்யவேண்டுவது அவசியம். அப்படிச் செய்வது நமக்குச் சில சந்தர்ப்பங்களில் மிக உதவி ஆகும். ஆகையால் சில நயமான செய்யுள்களையும் விசேட உரைப் பகுதிகளையும் மனனஞ் செய்வது மாணவர் கடன்.

மனப்பாடஞ் செய்யும் பகுதி நன்றாக விளங்கிய பகுதியாய் இருக்கவேண்டும். செய்யுளை மனனஞ் செய்வதற்கு ஒரு சுலபமான வழி உண்டு. ஏதாவதொரு பாடலைப் பாருங்கள் (அது நீங்கள் இதுவரையும் படித்த பாடல்களில் ஒன்றாகவும் இருக்கலாம்) ஒவ்வொரு வரியுந் தொடங்குஞ் சொற்களை மாத்திரம் அவதானியுங்கள். அவற்றுள் ஒரு விசேடம் இருக்கிறது. அது என்ன? இப்பாடலைப் படியுங்கள்:

**கன்றொ ழிந்தகா ராவின் கலக்கமொத்(து)**<br>**அன்று அரற்றி அழுத அரிவையை**<br>**என்று மெங்கணு மெவ்வுயி ரும்தொழ**<br>**நன்று கண்டமெஞ் ஞானியும் நோக்கியே.**

இப்பாடலில் ஒவ்வொரு வரியிலும் முதற் சொற்களைப் பாருங்கள். அவை 'கன்று', 'அன்று', 'என்று', 'நன்று' என்பன. இதில் நீங்கள் காணும் விசேடம் என்ன? இரண்டாவது எழுத்துக்கள் ஒரே எழுத்துக்களாய் வந்திருக்கின்றன. இவ்வாறே மற்றைய பாடல்களிலும் ஒவ்வொரு வரியிலும் உள்ள முதற் சொற்களின் இரண்டாம் எழுத்துக்கள் ஒரே எழுத்தாயிருக்கும்.

சில பாடல்களில் முதல் இரண்டு வரிகளில் முதற்சொற்களின் இரண்டாம் எழுத்துக்கள் ஒரே எழுத்தாயும் மற்றைய இரண்டு வரிகளது முதற் சொற்களின் இரண்டாமெழுத்துக்கள் ஒரே எழுத்தாயுமிருக்கும். இவ்வாறு இரண்டா

மெழுத்துக்கள் ஒரே எழுத்தாயிருக்குஞ் சொற்களை எதுகைச் சொற்கள் என்று கூறுவார்கள்.

‘அப்பம்‘, ‘கப்பம்’, ‘செப்பம்’, ‘தெப்பம்’ இவைகள் எதுகைச் சொற்கள். இரண்டாம் எழுத்துக்கள் (‘ப்’) ஒரே எழுத்தாயிருப்பதை அவதானியுங்கள். மனனஞ் செய்ய வேண்டிய பாட்டில் இவ்வாறு எதுகைச் சொற்களை அவதானிப்பது மனனஞ் செய்வதற்கு ஒரு சுலபமான வழியாம்.

**பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றுந் தா.**

இந்தப் பாட்டைப் பாருங்கள்; முதலிரண்டு வரியும் ஓர் எதுகை. முன் வரியிரண்டிலும், பாலும், நாலும் என ‘லு’ என்னும் எழுத்தும், பின்னிரண்டு வரியிலும் துங்கம், சங்கம் என‘ங்’ என்னும் எழுத்தும் எதுகையாய் வந்திருக்கின்றன. இச்சொற்களை அவதானித்தாற் செய்யுளை மனனஞ் செய்வது மிகச்சுகமான வழியல்லவா?

செய்யுளை மனனஞ் செய்வதற்கு இன்னும் ஒரு வழி இருக்கிறது. இப்பொழுது நாங்கள் படித்த வழி, பாடலில் ஒவ்வொரு வரியிலும் முதற்சொற்களை அவதானிப்பது. மற்றது ஒரேவரியில் வருஞ் சில சொற்களை அவதானிப்பது. எதுகையில் இரண்டாம் எழுத்துக்கள் ஒரே எழுத்தாய் இருக்குமென அறிந்தோம். இனி முதலாம் எழுத்துக்கள் ஒரே மாதிரி இருப்பதைப் பற்றிப் படிப்போம்.

‘கன்றொழிந்த’ என்னும் பாடலை மறுபடியும் பாருங்கள். இவ்வரியின் முதலெழுத்து ‘க’ ஆகும். அதே வரியிலுள்ள ‘காரா’, ‘கலக்கம்’ என்ற சொற்களை அவதானியுங்கள். அவற்றின் முதலெழுத்துக்கள் ‘க’ வரியிலுள்ள எழுத்துக்கள். இவை ‘கன்று’ என்பதிலுள்ள ‘க’ என்னும் எழுத்தோடு சம்பந்தமுடையன.

இனி இரண்டாவது வரியைப் பாருங்கள். அதன் முதலெழுத்து ‘அன்று’ என்பதிலுள்ள ‘அ’ ஆகும். அந்த வரியிலுள்ள மற்றச் சொற்களையும் பாருங்கள். அவை ‘அரற்றி’, ‘அழுத’, ‘அரிவை’ என்பன. இவை எல்லாவற்றிற்கும் ‘அ’ என்பது முதலெழுத்தாகும். அவ்வெழுத்துக்கள், ‘அன்று’ எனத் தொடங்கும் இரண்டாம் வரியின் முதலெழுத்துப்போல இருக்கின்றன. இப்படி இருப்பதை மோனை எழுத்துக்கள் என்று சொல்வார்கள். இவற்றை அவதானித்தாற் பாட்டுகளை மனனஞ் செய்வது சுலபமல்லவா?

இரண்டாவது பாட்டிலுள்ள மோனைச் சொற்களையும் அவதானியுங்கள். பாடல்கள் அதிகமாக மோனை, எதுகை உடையனவாகவே வரும். இவற்றை அவதானித்துச் செய்யுள்களை மனனஞ் செய்யுங்கள். சில பாடல்கள் மோனை, எதுகையின்றியும் வரும். அங்ஙனம் வருவது மிகக் குறைவு.



**- இலக்கிய மஞ்சரி -**



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மனப்பாடம் செய்வதன் அவசியம் பற்றி இக்கட்டுரையில் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது?
2. ஒரு பகுதியை மனப்பாடம் செய்யவேண்டுமானால் நாம் முதலில் செய்யவேண்டியது யாது?
3. எதுகைச் சொற்கள் என்றால் என்ன?
4. மோனை எழுத்து என்பது எத்தகையது?
5. எதுகை மோனை பற்றிய அறிவு எவ்வகையில் மனனம் செய்வதற்கு உதவுகின்றது?

## செயற்பாடு

ஆசிரியர் உங்களுக்கு வழங்கிய பாடல்களில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களைப் பட்டியற்படுத்துக.

# நிறுத்தக்குறிகள்

மொழிப்பயன்பாட்டிலே இன்றியமையாதவையாகப் பயன்படுத்தப்படுகின்ற சில நிறுத்தக்குறிகள் தொடர்பாகக் கடந்த வகுப்புக்களில் கற்றுள்ளோமல்லவா?

முற்றுப்புள்ளி
முக்காற்புள்ளி
மெய்ப்பாட்டுக்குறி/அடைப்புக்குறி
காற்புள்ளி
வினாக்குறி
மேற்கோட்குறி

ஆகிய நிறுத்தக்குறிகளின் பிரயோகம் பற்றி நாம் கற்றவற்றை நினைவுபடுத்திக் கொள்வோம்.

இந்த வகுப்பில் மேலும் இரு வகையான நிறுத்தக்குறிகளை அறிந்து கொள்வோம்.

### அரைப்புள்ளி (;)

கூட்டு வாக்கியத்திலே ஒத்த தன்மையுடைய சமநிலையான ஒன்றிற்கு மேற்பட்ட தொடர்புகளை இணைப்பதற்கு அரைப்புள்ளி பயன்படும்.

வாக்கியங்களிலே கருத்தை விபரிக்கும்போது அரைப்புள்ளி பயன்படுகின்றது.

உதாரணம்:- கடற்கரைக்குச் சென்ற சிறுவர்கள் மகிழ்ச்சியில் கூத்தாடினார்கள்; நீரில் குதித்தார்கள்; கரையேறி ஓடினார்கள்; பரவசத்தில் பாடினார்கள்.

### விட்டிசைக்குறி / சிறு கோடு (-)

சொற்சுருக்கங்கள் சிலவற்றில் இக்குறி பயன்படுத்தப்படுகின்றது.

சடுதியான கருத்து மாற்றத்தினைக் காட்டுவதற்கு விட்டிசைக்குறி பயன்படுத் தப்படுகிறது

உதாரணம்:- அப்பா இன்று எம்மோடு இருந்திருந்தால் - அதை இப்பொழுது பேசி என்ன பயன்?

வெவ்வேறாகக் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதற்கும் விட்டிசைக் குறி பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம்:- இலங்கைத் திருநாட்டின் அபிவிருத்திக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் - அனைவரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும்.

## பயிற்சி

**பின்வரும் பந்தியில் பொருத்தமான இடங்களில் உரிய நிறுத்தக் குறிகளை இட்டு பந்தியை மீள எழுதுக.**

*தூரத்திலுள்ள மாகாணமொன்றில் பகைவர்கள் கலகம் செய்ததாகச் சக்கரவர்த்திக்கு அறிவிக்கப்பட்டபோது அவன் தன் உத்தியோகத்தவர்களைப் பார்த்து என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள் நாம் அவர்களை விரைவில் அழித்து விடுவோம் என்று சொன்னதாகக் கூறப்பட்டிருக்கிறது சக்கர வர்த்தியின் வார்த்தைக்கிணங்கி பெரியோர்கள் இளைஞர்கள் சிறுவர்கள் அனைவரும் அவனைப் பின் தொடர்ந்து அணிவகுத்தனர் சக்கரவர்த்தி பகைவர்களை அடைந்ததும் அவர்கள் அவனுக்குப் பணிந்து விட்டனர் எல்லோரும் அவன் கொடிய பழிவாங்குதலை நிகழ்த்துவான் என்று எண்ணியிருந்தனர் ஆனால் அவர்களெல்லோரும் ஆச்சரியப்படத்தக்கதாக அவன் கைதிகளை இரக்கமாகவும் சாந்தமாகவும் நடத்தினான் அப்பொழுது முதன்மந்திரி சக்கரவர்த்தியைப் பார்த்து இப்படியா உம் வாக்கை நிறைவேற்றினீர் என்று கேட்டான் சக்கரவர்த்தி பெருந்தன்மையுடன் நான் பகைவர்களை அழிப்பதாக வாக்குப்பண்ணினேன் என் வாக்கையும் நிறைவேற்றியுள்ளேன் எனக்கு இனிமேல் பகைவர்கள் இல்லை அவர்களெல்லோரையும் என் சினேகிதர்களாக்கிவிட்டேன் என்று கூறினான் ஆகா என்னே சக்கரவர்த்தியின் மனப்பான்மை*

## இரட்டைக்கிளவி

தரம் 8 இல் இரட்டைக்கிளவி, குறித்து விரிவாகக் கற்றுள்ளோமல்லவா? அதனை நினைவுபடுத்திக் கொள்வோம். இப்போது அவை குறித்து அறிவை விருத்தி செய்ய இரட்டைக்கிளவிகளின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது. அவற்றைப் பயன்படுத்தும் தேர்ச்சியை வளர்த்துக் கொள்வோம்.

| | | | |
|---|---|---|---|
| கடகட | நெறுநெறு | மளமள | மொளுமொளு |
| கமகம | தகதக | குறுகுறு | வளவள |
| கிடுகிடு | தளதள | பளபள | சரசர |

## பயிற்சி

1. கூட்டினுள் தரப்பட்டுள்ள இரட்டைக்கிளவிகளில் பொருத்தமான ஒலிக் குறிப்புச் சொற்களைக் கையாண்டு பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

**பொலுபொலு, கலகல, குடுகுடு, கலீர்கலீர், கடுகடு, குளுகுளு, திருதிரு, மடமட, வீர்வீர், கமகம**

1. வயோதிபர் .................. என நடந்தார்.
2. தென்னாலிராமனின் பேச்சைக் கேட்ட சபையோர் ................ எனச் சிரித்தனர்.
3. தோட்டவேலை செய்யாத கூலியாளைக் கண்ட எஜமானனின் முகம் ........................ என இருந்தது.
4. காலில் கட்டிய சலங்கை ...................... என ஒலித்தது
5. பலாப்பழத்தில் எழுந்த வாசனை .................... என மூக்கை துளைத்தது.
6. தென்றல்காற்று .................... என சாளரத்தின் வழி வந்தது.
7. கையும் மெய்யுமாக அகப்பட்ட திருடன் ........... விழித்தான்.
8. மூத்தம்மா ..................... என தேநீரை அருந்தினார்.
9. காட்டில் பாலப்பழங்கள் .................... என உதிர்ந்தன.
10. வயிற்றுவலி தாங்கமுடியாமல் குழந்தை ........................ எனக் கத்தியது.

2. பின்வரும் இரட்டைக்கிளவிகளை பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் வைத்து எழுதுக.

1. தகதக
2. சடசட
3. கணகண
4. புறுபுறு
5. திடுதிடு
6. மொரமொர
7. பொசுபொசு
8. தொளதொள
9. சிலுசிலு
10. கரகர

# 12 எறும்புக் குடும்பம்

இந்த மாதத் துவக்கத்தில் பெய்த புயல் மழையில் என் மாடித் தோட்டம் பாதிப்புக்கு உள்ளாகியது. அதில் வசித்து வந்த ஒன்பது வகை எறும்பு இனங்களின் வாழ்விடங்கள் முற்றிலும் நாசமாகின; 90,000 எறும்புக் குடும்ப உறுப்பினர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். கரு முட்டைகள் கூழ்முட்டைகள் ஆகின. மழை ஓய்ந்த மறுநாள் எஞ்சிய எறும்புகள், மிகத் துடிப்புடன் புதிய புற்றுகள் அமைப்பதில் ஈடுபட்டு இருந்தன. மனிதனைப் போன்று ஓய்ந்து போய்விடவில்லை. அரசு உதவிக்காக காத்திருப்பது போன்றோ, நாட்களைக் கடத்தவில்லை. உடனடி செயல்பாட்டில் இறங்கிய அதன் உத்வேகத்தை, அதனிடம் கடிபட்டபோது உணர முடிந்தது.

எறும்புகள் இவ்வுலகிற்கு வந்து நூறு மில்லியன் ஆண்டுகள் ஆகின்றன. வெற்றி கொண்ட அழியாப் பூச்சி இனம் என்ற வரிசையில் இது இரண்டாம் இடம் வகிக்கிறது. முதல் இடம்பெற்றது கரப்பான் பூச்சி. எறும்பில் 20,000 வகை உண்டு என்றும் இது அறுதி இடாத தகவல் என்றும் அறிவியல் கூறுகிறது. கும்பல் கும்பலாக வாழும் இவை, தலைசிறந்த சமூக அமைப்பின் அடையாளம். ஒரு கும்பலில் ஆண், ராணி, பெண் உழைப்பாளிகள் என கட்டாயம் மூன்று வகை உண்டு. பெண் உழைப்பாளிகளில் பல வேலைக்கார எறும்புகளாகவும் சில போர் புரியும் ராணுவ வீரர்களாகவும் செயல்படும் உட்பிரிவு உண்டு.

கும்பலாக வாழும் இவை பல்வேறு வகை எறும்பினங்களையும் கூட்டாகச் சேர்த்துக்கொள்கின்றன. அவை ஒவ்வொன்றும் தங்களுக்குள் சிறு குழுக்களை ஏற்படுத்தி அரசாளுகின்றன. அவை வசிக்க தங்களுக்கென தனி வீடுகளை அமைத்துக் கொள்கின்றன. இவை புற்றுகள் என அழைக்கப்படும். இப்புற்றுகள் சகதிமண், களிமண் கொண்டு அமைக்கப்படும். வேறு சிலவகை எறும்புகள் சிறுகுச்சி, களிமண் உருண்டை கொண்டு பூசிக்கட்டும். அமேசான் காடுகளில் வாழும் எறும்புகள், 15 அடி உயர மலை போன்ற அமைப்புடைய புற்றுகளைக் கட்டுகின்றன. இது மழையாலோ, காற்றாலோ, வேறு விலங்குகளாலோ பாதிப்புக்கு உள்ளாகாதவாறு இறுக்கம் கொண்டிருக்கும். ராணுவ கேந்திர மையம் போல அமையப் பெற்றிருக்கும் இப்புற்றுகளில் பல சுரங்க வழிகள், அறைகள் உண்டு. குழந்தைகளைப் பேணி காக்க, உணவு சேமித்துப் பாதுகாக்க, ஓய்வெடுக்க என பல அறைகள் ஒதுக்கப்பட்டு அறிவியல்

நுட்பத்தோடும், கலை நயத்தோடும் அமையப் பெற்றிருக்கும். இவ்வகையான கட்டமைப்பை வேலைக்கார எறும்புகள் செய்கின்றன. இவைகளுக்கு உதவியாகப் படை வீரர்களான எறும்புகள் உதவி புரிகின்றன. ஒரு சோகமான விஷயம் என்னவெனில் இவ்வகை எறும்புகளுக்கு என எந்த அறையும் ஒதுக்கப்படுவதில்லை. ஓய்வெடுக்க கட்டை இடுக்குகளையும், சுவரின் விரிசல்களையும் இவை தேர்ந்தெடுக்கின்றன. கூட்டமாகச் சென்று வேட்டையாடி உணவு சேமிப்பதும், புதிய வாழிடங்களை உருவாக்கித் தருவதிலும், ஈடுபடும் இவை எப்போதும் தனித்து இயங்குவதே கிடையாது. சில சந்தர்ப்பங்களில் மாற்று புற்றுகளுக்குச் சென்று, வேட்டையாடி கரு முட்டைகளைத் திருடி வந்து பேணிக்காக்கின்றன. அவற்றிலிருந்து வரும் எறும்புகள், இளமைப் பருவம் முதல் அடிமை சிந்தனையுடன் வளர்க்கப்படுகின்றன. முழு வளர்ச்சி அடைந்த பிறகு சேவகம் புரிவதில் தங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றன.

எறும்புகளின் உடல் மூன்று பகுதிகள் கொண்டது. தலை, உடல் மற்றும் பின்பகுதி. இவற்றிற்கு ஆறு கால்களும் நடுப்பகுதியும் உடல் எனப்படும். தலைப்பகுதியில் வாய், கண் மற்றும் உணர்வுக் குழல்கள் உண்டு. இதன் கண்கள் பல விழித்திரைகளைக் கொண்டது. எனவே இவற்றால் ஒரு பொருளைப் பல கோணங்களிலும் ஆராய முடியும். வாய்ப்பகுதி கூரிய ரம்பம் போன்று இருக்கும். இவற்றைக் கொண்டு இலைகளைக் கவ்வுவதும், துண்டாக்கிப் புற்றுக்குக் கொண்டு செல்லவும் முடிகிறது. தீ எறும்புகள், இவ்வகையான செயல்களில் அதிகம் ஈடுபடும். உணர்வுக் குழல் மூலம், சுவை, மணம், சத்தம் போன்றவற்றை உணர முடிகிறது.



பின்பகுதியில் வயிறும், மலப்புழையும் உண்டு. பல எறும்பு வகைகளுக்கு இங்குதான் விஷ நீர் சுரப்பியும் கொடுக்கும் உண்டு. இதைக் கொண்டு தன்னை விட பத்து மடங்கு எடை கொண்ட உயிரினத்தையும் வீழ்த்த முடியும். எறும்பிற்குக் குடல் கிடையாது. பெரும்பாலும் உறிஞ்சி உண்ணுகின்றன. கர்ப்ப காலத்தில் மட்டும், பெண் எறும்புகள் புரதம் கலந்த உணவை உண்ணுகின்றன. பிற வகை எறும்புகள் 'சுக்ரோஸ்' கலந்த இனிப்பு உணவையே எடுத்துக் கொள்ளும்.



**- எஸ். கிருஷ்ணன் ரஞ்சனா -**

**'இப்போது அவை இங்கு வருவது இல்லை'**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| 1. உத்வேகம் | - | ஊக்கம் |
| 2. கும்பல் | - | குழு/கூட்டம் |
| 3. கேந்திரமையம் | - | முக்கியத்துவமான இடம் |
| 4. ரம்பம் | - | வாள் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எறும்புகளது விடா முயற்சிக்கான உதாரணமாக எதனைக் கட்டுரை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்?
2. உலகில் மிகப்பழங்காலத்தனவான இரு பூச்சி இனங்கள் எவை?
3. எறும்புக் கூட்டம் ஒன்றில் காணப்படும் 3 பிரிவுகள் எவை?
4. எறும்புப் புற்றுகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன?
5. எறும்புகளின் உடல் அமைப்பை விளக்குக?

## செயற்பாடு

இயற்கையாகவே சமூகமாக வாழும் ஒழுங்குமுறையொன்றை எறும்புக் கூட்டம் எவ்வகையில் கொண்டு ஒழுகுகின்றன என்பது குறித்துக் கலந்துரையாடுக.

# வாக்கிய உறுப்புக்கள்

**செயப்படுபொருள் குன்றிய வாக்கியமும் குன்றா வாக்கியமும்**

வாக்கியத்தின் அமைப்புத் தொடர்பாகவும் அதன் உறுப்புக்கள் தொடர்பாகவும் முன்னைய வகுப்புக்களில் கற்றவற்றை நினைவுபடுத்திக் கொள்வோம்.

வாக்கியமொன்று எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அவற்றிற்கான அடைமொழிகள் என்பவற்றைக் கொண்டிருக்கலாம் என்பதனைக் கற்றுள்ளோமல்லவா?

பின்வரும் வாக்கியங்களை அவதானிப்போம்.

கமலன் திருக்குறளை இனிமையாக ஓதினான்.

அப்துல்லா மிகவும் கவனமாகப் படிக்கின்றான்.

யேசுதாஸன் விழுந்து விழுந்து சிரித்தான்.

★ முதலாவது வாக்கியத்தின் செயப்படுபொருளை இனங்காண்போம். அதில் 'ஓதினான்' என்பது பயனிலையாகும்.

எதை ஓதினான்? என்ற வினாவிற்கு விடை திருக்குறளை என்பதாகும்.

எனவே மேற்படி வாக்கியத்தின் செயப்படுபொருள் வெளிப்படையாக இடம் பெற்றுள்ளது.

★ இரண்டாவது வாக்கியத்தின் செயப்படுபொருள் யாது? எதைப் படிக்கிறான்? பாடங்களை

வாக்கியத்தில் வெளிப்படையாக இடம்பெறாத போதிலும் எதைப் படிக்கிறான்? என்ற வினாவிற்கு விடையாக அமைவது 'பாடங்களை' என்பதே ஆகும்.

எனவே இந்த வாக்கியத்தின் செயப்படுபொருள் 'பாடங்கள்' ஆகும்.

இரண்டாவது வாக்கியத்தில் செயப்படுபொருள் வெளிப்படையாக அன்றி மறைந்தே வந்துள்ளது.

| |
|---|
| செயப்படுபொருள் வெளிப்பட்டோ மறைந்தோ இடம்பெற்றிருக்கும் வாக்கியம் செயப்படுபொருள் குன்றா வாக்கியம் எனப்படும். |

★ மூன்றாவது வாக்கியத்தின் செயப்படுபொருளை இனங்காண முயற்சிப்போம். மூன்றாவது வாக்கியத்தின் பயனிலை சிரித்தான்.

*எதைச் சிரித்தான்?*

இந்த வினாவிற்கு விடை காணமுடியாது. உண்மையில் விடை இல்லை.

எனவே மூன்றாவது வாக்கியத்தில் வெளிப்பட்டோ மறைந்தோ செயப்படு பொருள் இடம்பெற்றிருக்கவில்லை.

செயப்படுபொருள் வெளிப்பட்டோ மறைந்தோ இடம்பெறாத வாக்கியம் செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் எனப்படும்.

## பயிற்சி

**1. பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றையும் அவற்றின் அடைமொழிகளையும் இனங்கண்டு எழுதுக.**

1. ஒரு காலத்திலே ஈழவள நாட்டிலே வாழ்ந்த வள்ளல்கள் பாடி வந்தோர்க்கு இரத்தினங்களை வாரி வாரி வழங்கினார்கள்.
2. ஆலயத்தில் வானுயரமான கோபுரத்தைக் கண்டோம்.
3. உலகம் போற்றும் மஹாகவி இனிமையான கவிதைகளை எழுதினார்.
4. அறிவிற் சிறந்த அப்துல் கலாம் சிந்தனைக்கு விருந்தான கருத்துக்கள் பல வற்றை நயமாகக் கூறியுள்ளார்.
5. நிலையில்லாத இவ்வுலக வாழ்வைப் பயனுடையதாகக் கழியுங்கள்.

**2. பின்வரும் வாக்கியங்களை செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்கள், செயப்படுபொருள் குன்றா வாக்கியங்கள் என வேறுபடுத்தி எழுதுக.**

1. வீதியில் மாணவர்கள் வரிசையாக நடந்து சென்றார்கள்.
2. அறம் செய்ய விரும்பு.
3. விமலனைப் பிடித்த பயம் கண்ணனையும் கலக்கிவிட்டது.
4. மரங்கள் இல்லாவிட்டால் பூமியென்று ஒன்று இருக்காது.
5. நாடெங்கும் டெங்குநோய் வேகமாகப் பரவிவருகின்றது.

## கலைச்சொற்கள்

துறைசார்ந்த தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற சிறப்புச் சொற்களான கலைச்சொற்கள் சிலவற்றைக் கடந்த வகுப்புக்களில் கற்றுள்ளோம். இங்கு ‘எறும்புக் குடும்பம்’ என்ற பாடத்தோடு தொடர்புடைய சில கலைச்சொற்களை அறிந்து கொள்வோம்.

| | | |
|---|---|---|
| Abdomen | - | வயிறு |
| Antennae | - | உணர்கொம்பு |
| Exoskeleton | - | புறவன்கூடு |
| Species | - | இனங்கள் |
| Sting | - | கொடுக்கு |
| Throax | - | நெஞ்சறை |

## பயிற்சி

**பின்வரும் பகுதியில் தடித்த எழுத்துக்களில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச் சொற்களை எழுதி, பந்தியை மீள எழுதுக.**

நேற்று வீசிய காற்றிற்கு **‘அன்ரெனா’** முறிந்து விட்டதால் **‘ரீ.வி.’**யும் பார்க்க முடியவில்லை. **‘எயார்கொண்டிஷன்’** வேலை செய்யாததால் புழுக்கமாகவும் இருந்தது. அதனால் அன்ரன் வீட்டைவிட்டு வெளியேறி முற்றத்தில் உலாவினார். அன்ரன் ஓர் **‘ஓடிற்றர்’** ஆவார். **‘லைசன்ஸ்’** பெற்று தனியாக ஒரு **‘ஓடிற்’** நிறுவனத்தை நடாத்தி வருகின்றார். தனது நிறுவனத்திற்கு புதிதாகப் பணியாட்களைச் சேர்ப்பதற்கான **‘இன்ரவியூவை’** நடாத்துவது பற்றி உரையாடுவதற்காக வரவுள்ள தனது உதவியாளர்களுக்காகக் காத்திருக்கின்றார்.

# 13 தந்தை மகளுக்கு எழுதிய புகழ் பெற்ற கடிதம்

அன்புள்ள ஸ்காட்டி,

நீ உன் கடமைகளை ஒழுங்காகச் செய்வதைப் பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ பிரெஞ்சு மொழி படிப்பதைப் பற்றி அடுத்த கடிதத்தில் இன்னும் விளக்கமாகக் கூற முடியுமா?

நீ மகிழ்ச்சியாக இருப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே. ஆனால், நான் எப்போதும் மகிழ்ச்சியை நம்பியதில்லை.

அதேசமயம், நான் துன்பத்தையும் நம்பியதில்லை. இவற்றை எல்லாம் உன்னால் மேடையிலோ, திரையிலோ அல்லது புத்தகங்களின் பக்கங்களிலோதான் பார்க்க முடியும். இவை உண்மையாக உன் வாழ்க்கையில் எப்போதும் நடைபெறாது.

வாழ்க்கையில் உன் நற்பண்புகளுக்காகக் கிடைக்கும் வெகுமதிகளையும் (உன் திறமைகளுக்கு தகுந்தபடி), கடமை தவறியதற்காக உனக்கு கிடைக்கும் இரண்டு மடங்கு தண்டனைகளையும் தான் நான் எப்போதும் நம்புகிறேன்.

உன் கேம்ப்பில் பெரிய நூலகம் இருந்தால், திருமதி டைசனிடம், ஷேக்ஸ்பியர் நாடகத்தில் வரும் இந்த வரி குறித்துக் கேள்! ‘‘ அழுகிய மலர்கள், களைச் செடிகளை விட மோசமான நாற்றம் எடுக்கும்’’

நான் எப்போதும் உன்னைப் பற்றி இனிமையாகவே உணர்கிறேன். நான் கேம்ப் கட்டணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.

இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தந்தை

புகழ் பெற்ற எழுத்தாளர் எஃப். ஸ்காட் ஃபிட்ஸ் ஜெரால்டு தன் பதினொரு வயது மகள் ஸ்காட்டிக்கு எழுதிய கடிதம்.

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கடிதத்தில் மகள் குறித்த எந்த விடயத்துக்காக தந்தையின் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
2. மகளின் எந்தச் செயற்பாடு குறித்த மேலதிக விளக்கம் கோரப்பட்டுள்ளது?
3. மகிழ்ச்சி, துன்பம் என்பன ஏன் நம்பிக்கைக்கு உரியன அல்ல எனக் கூறப்பட்டுள்ளன?
4. வெகுமதி, தண்டனை பற்றி தந்தை கருதுவது யாது?
5. ‘‘அழுகிய மலர்கள், களைச் செடிகளை விட மோசமான நாற்றம் எடுக்கும்’’ எனும் கூற்று எதனை வலியுறுத்த முற்படுகின்றது?

## செயற்பாடு

புகழ்பெற்றவர்களது முக்கியத்துவமிக்க கடிதங்கள் சிலவற்றை ஆசிரியரது உதவியுடன் வகுப்பறையில் படித்து அவைகுறித்துக் கலந்துரையாடுங்கள்.

## இணைப்பிடைச் சொற்கள்

இணைப்பிடைச் சொற்கள் பற்றியும் ‘ஆனால்’, ‘எனினும்’, ‘ஆகவே’ ஆகிய இணைப்பிடைச் சொற்களின் பயன்பாடு பற்றியும் முன்னைய வகுப்புக்களில் கற்றுள்ளோமல்லவா? அவற்றை நினைவுபடுத்திக் கொள்வோம்.

இந்த வகுப்பில் மேலும் இரு இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வோம்.

★ பிரேமிகா கவனமாகப் படித்திருந்தாள். அவள் தவணைப்பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றாள்.

மேலுள்ள வாக்கியங்களை இணைப்பதற்கு எந்த இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தலாம் ?

ஆம்,

காரண காரியத் தொடர்பில் அமையும் இவ்வாக்கியங்களை இணைப்பதற்கு தரம் 8 இல் நாம் கற்ற 'ஆகவே' என்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்த முடியும்.

'ஆகவே' என்ற இணைப்பிடைச் சொல்லிற்குப் பதிலாக 'அதனால்' என்ற இணைப்பிடைச் சொல்லையும் நாம் பயன்படுத்தலாம்.

பிரேமிகா கவனமாகப் படித்திருந்தாள். அதனால் அவள் தவணைப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றாள்.

மேலும் சில உதாரணங்களைக் கவனிப்போம்.

சலீம் அடுத்த மாதம் இந்தியாவிற்கு செல்லவுள்ளார். அதனால் அவர் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளமாட்டார்.

நாளை அதிகாலையிலேயே துயிலெழவேண்டும். அதனால் நேரத்துடன் நித்திரைக்குச் செல்கின்றோம்.

★ குமார் மிக வேகமாக ஓடினான்.
அவனால் முதற் பரிசைப் பெறமுடியவில்லை.

மேலுள்ள வாக்கியங்களை இணைப்பதற்கு 'ஆனால்', 'எனினும்' முதலிய இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்த முடியும். அதேபோல் அவற்றிற்கு பதிலாக 'இருப்பினும்' என்ற இணைப்பிடைச்சொல்லையும் பயன்படுத்தலாம்.

குமார் வேகமாக ஓடினான். இருப்பினும் அவனால் முதற் பரிசைப் பெற முடியவில்லை.

மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

இறைவன் மீது நம்பிக்கைகொள்வது நல்ல விடயம். இருப்பினும் அது மூட நம்பிக்கைகளுக்கு வழிவகுக்கக் கூடாது.

★ தரமான பொருள்களை வாங்குவதே சிறந்தது. இருப்பினும் அவை அதிக விலையுள்ளவையாகவும் இருக்கின்றன.

## பயிற்சி

பின்வரும் வாக்கியச்சோடிகளை அதனால், இருப்பினும் ஆகிய இணைப்பிடைச் சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி இணைத்து எழுதுக.

1. புகையிரதம் வழமையாக காலை 8 மணிக்குப் புறப்படும்.
   புகையிரதம் இன்று காலை 9 மணிக்கே புறப்பட்டது.

2. விவசாயிகள் மிகக் கடுமையாக உழைக்கின்றனர்.
   இயற்கையின் ஒத்துழைப்பின்மையால் விவசாயிகள் உழைப்பின் பயனை நுகரமுடியாது தவிக்கின்றனர்.

3. முயற்சி திருவினையாக்கும்.
   கடுமையாக உழைத்து முன்னேறுங்கள்.

4. சமூக வலைத்தளங்களால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன.
   மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

5. நாளை முழுவதும் எனக்குப் பல்வேறு வேலைகள் உள்ளன.
   நான் நாளை உங்களைச் சந்திக்க முயற்சி செய்கின்றேன்.


## கடிதம்

**அறிமுகம்**

★ கடிதம் எழுதுவது ஒரு கலை. நேரில் கண்டு கருத்துக்களைக் கூறமுடியாத நிலையில் கடிதம் மூலம் அவற்றைத் தெரிவிக்கின்றோம்.

★ கடிதத்தை ஓலை, கடதாசி, திருமுகம், முடங்கல், மடல் எனவும் அழைப்பர்.

உறவு முறைக் கடிதங்கள், தொழில்முறை/அலுவலகக் கடிதங்கள் என எழுதும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடிதத்தை இரு வகைப்படுத்தலாம். இவற்றுள், உறவு முறைக் கடிதங்கள் பற்றி தரம் 8 இல் கற்றுள்ளோம். இங்கு தொழில் முறைக் கடித மாதிரியைக் காண்போம்.




1. எழுதுபவர் - பெயர், முகவரி, திகதி
2. பெறுபவர் - உள் முகவரி.
3. விளிப்பு.
4. தலைப்பு.
5. விடயம்/செய்தி.
6. முடிப்பு.
7. ஒப்பம்.

வீதி மின்விளக்கு ஒளிராமை பற்றி நகரசபை நகரபிதாவிற்கு ஒரு கடிதம்.

ம.மணி,
இல-15,
கல்லாறு வீதி,
மன்னார்,
2008.01.01.

நகர பிதா,
நகர சபை,
மன்னார்.

மதிப்பிற்குரிய ஐயா,

<u>வீதி மின்விளக்கு ஒளிரவில்லை</u>

எனது பெயர் மணி. நான் கல்லாறு கிராமத்தில் வசித்து வருகின்றேன். எங்கள் வீதியில் கடந்த இரு வாரங்களாக வீதி மின்விளக்கு ஒளிரவில்லை.

இதனால் பொது மக்கள் மிகவும் அல்லல்படுகின்றார்கள். மாலை மற்றும் இரவு நேரங்களில் பாதையில் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. எதிரில் வரும் வாகனங்களை எளிதில் அடையாளங்காண முடியவில்லை.

மேலும், எங்கள் ஊர் கிராமப் பகுதி என்பதால் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் தெருவோரங்களில் காணப்படுகின்றன.

எனவே, விரைவில் வீதி மின்விளக்கினைச் சரிசெய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்,
பணிவுள்ள,
ம.மணி.




1. பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாமை பற்றி வகுப்பாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.

# 14 வான்குருவியின் கூடு

கல்லூரி மாணவனாக இருந்தபோது, இடைக்காலத்து ஔவையார் பாடல் ஒன்றைப் படித்தேன். அப்பாடலில் கடைசி அடி என்மனத்தில் ஒட்டிக் கொண்டது. வெண்பாவில் அமைந்த அந்தக்கடைசிக்கு முந்தைய மூன்றடிகள் கடைசி அடியின் கருத்தை மந்திரமாக்கும் முழு முயற்சியில் இறங்கி வெற்றி பெற்றிருந்தன. கிராமத்திலிருந்து, கல்வி சார்ந்த பின்னணி எதுவும் இல்லாமல் கல்லூரிப் படிப்புக்கு வந்து சேரும் முதல் தலைமுறை மாணவனுக்கு ஏற்படும் தாழ்வுணர்ச்சி எனக்குள் நிறைந்திருந்த காலம். சக மாணவர்களுடன் கூட இயல்பாகப் பழக இயலாமல் ஒதுங்கி நின்றிருந்தேன். என்னை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது தெரியாமல் புழுங்கித் தவித்த பருவம். அப்போது இந்தப் பாடலைப் படிக்க நேர்ந்தது.

மையிருட்டில் தடுமாறிக் கொண்டிருப்பவனுக்கு அவ்வப்போது வெளிச்சம் பெய்து வழிகாட்டும் மின்னலென இந்தப்பாடல் தொடர்ந்து என்னை முன்னிழுத்துச் சென்றது; சென்றுகொண்டிருக்கிறது. என்னுள் புதுக்கருக்கு அழியாமல் சுழலும் பாடல் இது. கல்லூரிச் சூழலைச் சமாளித்துக் கல்வியில் மேற்செல்ல, உறவினர்களின் ஏளனப் பார்வையை உதறித்தள்ள, குடும்பத்தின் பல்வேறு துயர நிகழ்வுகளைச் செரித்துக் கொள்ள, படைப்புகளில் தொடர்ந்து இயங்க என எல்லா நிலைகளிலும் இந்தப் பாடல் எனக்கு உதவியிருக்கிறது. இன்றைக்கு ஆசிரியப் பணியிலும் நான் அதிகம் மேற்கோள்காட்டிப் பேசுகிற பாடலும் இதுவே. திரும்பத் திரும்பப் பயன்படுத்தினாலும் தேய்ந்து பழசாகிப் போகாத திறன் இப்பாடலுக்கு உண்டு.

இப்பாடலின் கடைசி அடி ரொம்பவும் சாதாரண வார்த்தைகளால், எளிமையாகப் புனையப்பட்டது. இதுதான் -

**‘எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது’**

ஔவையாரின் புகழ் பொறுக்காத புலவர் பலர் இகழ்ந்து பேசி வாதுக்கழைத்த சமயத்தில் மிகவும் அடக்கமாக அவர் சொன்ன மொழி இதுவெனக் கதை கூறும். கதை முக்கியமல்ல. இந்தத் தொடர், நம் சமூகத்தில் நிலவும் பொதுப் புத்திக்கு எதிரானது. ஒருவருக்கு எது எளிதாகக் கைவருமோ, ஒருவர்

எதில் திறன் பெற்றவரோ அதனைத் தேர்வு செய்துகொள்வதற்கு இங்கே அனுமதியில்லை. தம் பிள்ளைகள் ஒவ்வொருவரும் மருத்துவர்களாக வேண்டும் என்னும் கனவில்லாத பெற்றோர் யாரேனும் இருக்கிறார்களா? ஓவியம் தீட்டத் தெரிந்த குழந்தையை ஓவியப் பயிற்சி பெற, விளையாட்டுத் திறன் மிகுந்தவரை விளையாட்டுக்கு அனுப்ப எத்தனை பேர் தயாராக இருக்கின்றனர்? குழந்தையின் ஆர்வம், திறன் இவற்றைப் பற்றி யோசிக்காமல் தம் விருப்பங்களைக் குழந்தையின் மீது திணிக்கும் பொதுப்புத்திக்கு எதிராக, ஒவ்வொருவரின் ஆர்வத்தையும் திறனையும் அங்கீகரித்துப் போற்றும் தொடர் இது. மற்றவர்களோடு ஒப்பிட்டுத் தாழ்வுணர்ச்சி கொண்டு தவிக்கும் மனத்துக்கு 'உனக்கு எளிதாகக் கைவருவது ஒன்றுண்டு' எனத் துணிவு கொடுக்கும் தொடர் 'எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது'.

இந்தக் கருத்தை மனத்தில் அடித்து நிறுத்துவதற்கு ஔவையார் கையாளும் உத்தி வெகு சிறப்பானது. அவர் சொல்கிறார்! தென்னங்கீற்றின் ஒரு தோகையில் தொங்கும் தூக்கணாங் குருவிக் கூடு பார்த்திருக்கிறீர்களா? மிகவும் நுட்பமான பின்னல் வேலை. முத்திரை பதிப்பதற்கு அரக்கு பயன்படுத்துகிறோமே, அந்த வலிமையான அரக்கை உருவாக்குவது சிறு பூச்சிதான். அழகான புற்றுக்களைக் கட்டியமைப்பது சின்னஞ் சிறு கறையான். தேன் கூடு, சிலந்தி வலை இவற்றின் நுணுக்கம் வேறு யாருக்குக் கைவரும்? எத்தனையோ படித்த பொறியாளர்களாலும் முடியாத செயல்கள் சின்னஞ்சிறு உயிரிகளால் முடிகின்றன. ஆகவே என்னுடைய வேலைதான் சிறந்தது. நான்தான் திறமையுடையவன் என்று பெருமை பீற்றித் திரிய வேண்டாம் மனிதர்களே! 'எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது'. முழுப்பாடல் -

**வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்**
**தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் – யாம்பெரிதும்**
**வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்**
**எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது.**

பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகள் வெளிவரும் ஒவ்வொரு முறையும் இந்தப் பாடலைப் பயன்படுத்த வேண்டிய தேவை எனக்கு நேரும். இலக்கணத்தில் திறனுடைய மாணவர் இலக்கியத்தில் மதிப்பெண் குறைந்திருப்பார். இலக்கியப் பிரிவுகளுக்குள்ளும் மாணவருக்கிடையே வேறுபாடு இருக்கும். விளையாட்டில் பல பரிசுகள் பெற்றிருக்கும் ஒருவர் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்திருப்பார்; இல்லை தோல்வியுற்றிருப்பார். அந்தச் சமயங்களில் உணர்வு பூர்வமாக இந்தப் பாடலைப் பயன்படுத்துவேன். பாதிக்கப்பட்டவருக்கு இது எத்தனை உத்வேகத்தைத் தரும் என்பது

அவர்கள் நிலையிலிருந்த எனக்கு நன்றாகப் புரியும். சுயமுன்னேற்ற நூல்கள் தரும் புஸ்வாணத் தன்னம்பிக்கை அல்ல இது. எதையும் சாதித்துவிட முடியும் எனப் பொய்யுற்சாகம் தருபவை அந்நூல்கள். உனக்கும் ஒரு திறமை இருக்கிறது; அது உனக்கு எளிதாகக் கைவருவது என்று சொல்லி, இருப்பதைக் கண்டுணர்த்தும் பாடல் ஔவையாருடையது.



**- பெருமாள் முருகன் -**

## அரும்பதங்கள்

1. திறன் - திறமை
2. அரக்கு - செம்மெழுகு
3. ஏளனம் - இகழ்ச்சி
4. கைவருதல் - தேர்ச்சிபெறுதல்



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கட்டுரையாசிரியர் தனக்கு ஏற்பட்ட தாழ்வுணர்ச்சிக்கான காரணமாக எதனைக் குறிப்பிடுகிறார்?
2. நம் சமூகத்தில் நிலவும் பொதுப்புத்தி எத்தகையது? அதனை 'எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது' எனும் ஔவையார் பாடலின் அடி எவ்வகையில் முறியடிக்கின்றது?
3. ஒவ்வொருவரது ஆர்வம் - திறன் என்பவற்றின் அடிப்படையிலான துறையில் கற்பதற்கு அனுமதிப்பது ஏன் அவசியமாகின்றது?
4. 'எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது' என்பதை வலியுறுத்துவதற்கு ஔவையார் கையாளும் உத்தி யாது?
5. தேர்வு முடிவுகள் வெளியாகும்போது அதனை எதிர்கொண்ட மாணவர்களுக்கு இப்பாடலை எடுத்துக்காட்டுவது எவ்வகையில் பயனுடையதாக அமையும்?

## செயற்பாடு

எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது என்ற கருப்பொருளில் அமையும் சிறுகதையொன்று எழுதுக.

## அடுக்குத்தொடர்

தரம் 8 இல் அடுக்குத்தொடர் குறித்து விரிவாகக் கற்றுள்ளோமல்லவா? அதனை நினைவுபடுத்திக்கொள்வோம். எடுத்துக்கொண்ட பொருளை அழுத்தமாகச் சொல்வதற்குப் பயன்படுத்தப்படும் அடுக்குத்தொடர் குறித்தான அறிவை மேம்படுத்தும் வகையில் கீழே தரப்பட்ட பயிற்சிகளைச் செய்து தேர்ச்சியை வளர்த்துக் கொள்வோம்.

ஓடஓட

பெரியபெரிய

வழிவழியாக

மேலேமேலே

வண்ணவண்ண

### பயிற்சி

**1. பின்வரும் அடுக்குத்தொடர்களை வாக்கியங்களில் வைத்து எழுதுக.**

1. விடிய விடிய
2. மணி மணியாக
3. சுடச் சுட
4. பக்கம் பக்கமாக

5. ஏறிஏறி
6. குறைந்து குறைந்து
7. தேடித்தேடி
8. பார்த்து பார்த்து
9. புதிது புதிதாக
10. குமுறிக்குமுறி

2. **கூட்டினுள் தரப்பட்டுள்ள அடுக்குத் தொடர்களுள் பொருத்தமானதைக் கையாண்டு பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(துளித்துளியாக, திரும்பத்திரும்ப, காலம்காலமாக, அழகழகான, வீடுவீடாக, பரம்பரைபரம்பரையாக, சிறுகச்சிறுக, வருந்திவருந்தி, சிரித்துச்சிரித்து, ஓடி ஓடி)

1. ஏழை உழவன் ____________________ உழைத்த பணத்தால் முன்னேறினான்.
2. காந்திமதி ____________________ சேலை கட்டினாள்.
3. இருக்கும் போது அளவுக்கதிகமான பாவங்களைச் செய்தவன் ஈற்றில் தீராத நோயினால் ____________________ செத்தான்.
4. வியாபாரிகள் சிலர் ____________________ சென்று புடைவைகளை விற்றனர்.
5. அமைதியாக வேலை செய்யும் பார்த்தசாரதி ஓய்வு நேரத்தில் ____________________ பேசினான்.
6. ____________________ அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்கள்.
7. குழந்தையின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் ____________________ சிந்தின.
8. அவனுக்கு இதனைச் செய்யாதே என ____________________ கூறினேன்.
9. ____________________ முன்னோர் சொன்ன கதைகள் எல்லாம் இன்று பொய்யாய்ப் போயின.
10. ____________________ சென்றதால் குறிப்பிட்ட நேரத்தில் புகைவண்டியைப் பிடிக்கக் கூடியதாய் இருந்தது.

# விளம்பரம்

விளம்பரம் என்பது வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட பொருட்களை, சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது ஆகும். குறிப்பிட்ட வடிவங்கள், உத்திகளைக் கையாண்டு மக்களைக் கவரும் வகையில் அரசு, உற்பத்தியாளர்கள், தனியார் நிறுவனங்கள் விளம்பரங்களை உருவாக்குகின்றன. பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி, இணையத் தளங்கள் முதலான தொடர்புச் சாதனங்கள் விளம்பரங்களை மக்கள் மத்தியில் பரவச் செய்கின்றன. விளம்பரம் என்பது தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் துறையாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே விளம்பரம் அதன் அமைப்பு பற்றிய அறிவு அவசியமானதாகும்.

**விளம்பரங்களின் வகைகள்**

- உற்பத்திப் பொருள் விளம்பரம்
- நிறுவனங்களின் விளம்பரம்
- மக்களுக்கு இன்றிமையாத சில செய்திகளை அறிவிப்பதற்காகச் செய்யப்படும் விளம்பரம்
- பொதுத்தகவல்களுக்காகச் செய்யப்படும் விளம்பரம்
- சொத்துத் தொடர்பாக உரிமையாளர்கள் சட்டப்படியாக வழக்கறிஞர் வாயிலாக வெளியிடும் விளம்பரம்.

**விளம்பரம் செய்வதற்கான காரணங்கள்**

- தகவல்களைத் தெரிவித்தல்
- பொருட்களை அறிமுகப்படுத்தல்
- உற்பத்திப் பொருட்களின் நுகர்வை அதிகரித்தல்
- பொருட்களின் விற்பனையைப் பெருக்குதல்

**விளம்பரத்தின் பண்புகள்**

- சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருத்தல்.
- கச்சிதமான தகவல்களைக் கொண்டிருத்தல்.
- கவர்ச்சிகரமான சொற்றொடர்களைக் கொண்டிருத்தல்.
- மக்களினைக் கவரும் வண்ணப் படங்களைக் கொண்டிருத்தல்.
- நுகர்வோர் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் வகையில் அமைந்திருத்தல்.

**மாதிரி விளம்பரம்**




**செயற்பாடு**

புதிதாக வெளிவரவுள்ள இலக்கிய இதழ் தொடர்பான விளம்பரம் ஒன்றை வடிவமைக்குக.

# 15 நளவெண்பா

**நளவெண்பா – அமைப்பு**

சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில், 405 வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் 13 வெண்பாக்கள், பாயிரம், நூல் வரலாறு என்பனவாகும். சுயம்வர காண்டத்தில் 155 வெண்பாக்களும், கலிதொடர் காண்டத்தில் 147 வெண்பாக்களும், கலிநீங்கு காண்டத்தில் 90 வெண்பாக்களும் உள்ளன.

**நளவெண்பா கதைச்சுருக்கம்**

நிடத நாட்டு அரசனான நளன் அன்னம் தூதுரைப்ப, விதர்ப்ப நாட்டரசன் மகளான தமயந்திமேற் காதல் கொண்டான். சுயம்வரத்தின்போது அவள் அவனுக்கு மாலை சூட்ட அவளை மணந்து பன்னீராண்டு அரசோச்சினான். அரசோச்சு நாளில் அவனுடன் பகை கொண்டிருந்த கலி அவனைப் பிடித்து புட்கரனோடு சூதாடச் செய்து தோற்கச் செய்தான். இதனால் நாடு நகரை இழந்த நளன் தன் மனைவி மக்களைப் பிரிந்து அல்லற்பட்டு, பின்னர் இழந்த அனைத்தையும் திரும்பப் பெறுவதைக் கூறும் கதை.

இந்நளவெண்பாவின் சுயம்வர காண்டத்திலுள்ள செய்யுள்கள் சில இங்கே தரப்பெற்றுள்ளன.

**நளன் அறநெறியில் அரசு புரிதல்.**

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழும் உலகு.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| சீதம் | - | குளிர்ச்சி |
| தாது | - | மகரந்தம் |
| அவிழ் | - | சிந்தும் |
| பூந்தாரான் | - | அழகிய மலர்மாலையை அணிந்தவன் |

## பொழிப்பு

மகரந்தப் பொடி சிந்துகின்ற மலர் மாலையைத் தரித்த நளன், மகளிர் தம் அருகில் வைத்துப் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கின்ற பச்சைக்கிளியும் பருந்தும் ஒரே கூட்டிற்குள் பகைமை நீங்கி வாழும்படி, குளிர்ச்சியுடைய நிலவு போன்ற வெண்கொற்றக்குடையின் நிழலில், சிறந்த அறங்கள் நிற்கத் தன் நாட்டைத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஆண்டு வந்தான்.

## சிறப்பு

நளனின் ஆட்சிச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. பைங்கிளியும் பகையான பருந்தும் ஒரு கூட்டில் வாழ்வதுபோல் மக்கள் பகையின்றி வாழுமாறு அவன் ஆட்சி அமைந்திருந்தது.

### நளன் சோலைக்குச் செல்லல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான் - தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வாங்கு வளை | - | வளைந்த வளையல் |
| வதனமதி | - | முகமாகிய சந்திரன் |
| தேங்குவளை | - | தேம் + குவளை |
| தேம் | - | இனிமை |
| தேனாடி | - | தேன் + ஆடி |
| ஆடி | - | முழுகி |

## பொழிப்பு

இனிமை பொருந்திய குவளை மலரின் தேனில் முழுகி எழுந்த வண்டுகள், தம் சிறகுகளை உலரச் செய்கின்ற நீர்வளம் வாய்ந்த நாடு நிடதம்; அந்நாட்டரசனாகிய நளன் , பூக்கொய்ய விரும்பி சோலைக்குள் செல்லும்போது, வளைந்த வளையல்களை அணிந்த பெண்களின் முகமாகிய நிலவினிடத்து மலர்ந்துள்ள விழிகள் என்னும் அழகிய நீலமலர்க் கூட்டத்தின் நடுவிலே சென்றான்.

## சிறப்பு

நளன் சோலைக்குச் சென்றபோது பெண்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர் என்பது.

**நளன் பூங்காவை அடைதல்.**

*தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்*
*வேரிப் புனல்நனைப்ப வேயடைந்தான் - கார்வண்டு*
*தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்*
*புக்கிருந்தால் அன்ன பொழில்.*

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| வேரி | - | தேன் |
| தொக்கிருந்தாலித்துழலும் | - | தொக்கு + இருந்து + ஆலித்து + உழலும் |
| தொக்கு | - | ஒருங்கு சேர்ந்து |
| ஆலித்து | - | ஆரவாரம் செய்து |
| வெய்யோன் | - | கொடிய கிரணங்களையுடைய சூரியன் |
| பொழில் | - | சோலை |

## பொழிப்பு

*மிக்க இருளானது சூரியன் ஒளிக்கதிர்களின் முன் விலகி ஒளித்துக்கொண்டிருந்தாற் போன்ற கருநிற வண்டுகள் ஒன்றாகக் கூடி மகிழ்ந்து சுற்றித் திரிகின்ற சோலையை, தனது தேர் உருளைகளிற் படிந்த புழுதியைத் திருத்தமான அணிகள் அணிந்த பெண்களது மலர் சூடிய கூந்தலினின்று ஒழுகி வழிகின்ற பூந்தேன் என்னும் நீர் நனைத்துக் கரைக்கும்படி நளன் சேர்ந்தான்!*

## சிறப்பு

*நளன் சோலைக்குள் சென்ற விதத்தை புலவர் காட்டுகின்றார். பெண்களின் கூந்தலிலுள்ள மலரிலிருந்து வடிந்ததேன் தேர்சில்லிலுள்ள புழுதியை நனைத்தபடி சென்றான்.*

**அன்னம் தோன்றுதல்.**

*நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்*
*தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப - மாணிறத்தான்*
*முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்*
*அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.*

## அரும்பதங்கள்

நீணிறம் ( நீள் + நிறம்) - மிக்க வெண்ணிறம்
பெயர - மாறுபட
மாண் நிறத்தான் - நளன்
முளரித்தலை - தாமரையில்
அன்னப்புள் - அன்னப்பறவை

### பொழிப்பு

அந்தப் பொழிலில் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய நளன் முன்பு நீரில் முளைத்தெழுகின்ற தாமரை மலரில் தங்கி வாழ்கின்ற அன்னப் பறவை ஒன்று, தன் உடலின் வெண்மை நிறத்தால் சோலையின் பசுமை நிறம் வெண்ணிறமாய் மாறவும், தன் கால்களின் செந்நிற மிகுதியினால் அங்குள்ள தடாகத்தின் நீரிடமெல்லாம் செந்நிறமாய் மாறவும் தோன்றியது.

### சிறப்பு

அன்னத்தின் சிறப்பு காட்டப்படுகிறது. தன் வெண்மை நிறத்தால் சோலை வெண்ணிறமாகவும் கால்சிவப்பால் தடாகம் செந்நிறமாயும் மாறியது என உயர்வுநவிற்சிமூலம் கூறப்படுகிறது.

**நளன் தோழி ஒருத்தியை அன்னத்தை பிடித்துத்தர ஏவுதல்.**

பேதை! மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் - கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து.

## அரும்பதங்கள்

மட அன்னந்தன்னை - இளமை பொருந்திய அன்னத்தை
மேதிக்குலம் - எருமை மந்தை

### பொழிப்பு

அன்னத்தின் அழகில் நளன் மனம் ஈடுபட்டது. ஆதலின், அதனைப் பிடித்துத்தர அவன் தோழி ஒருத்தியை ஏவினான்.

எருமை மந்தை கரும்பு வயலில் புகுந்து மென்மையான கரும்புகளைக் கடித்துக் குதப்பி முத்துகளைக் கக்குகின்றது; அத்தகு நாட்டையுடையவன் நளன். அவன் தோழி ஒருத்தியை பார்த்து, 'மடவாய் , நீ சென்று இளமை பொருந்திய அந்த

அன்னத்தைத் தப்பாமல் பிடித்துக் கொண்டுவந்து கொடுப்பாயாக,' என்றான்.

### சிறப்பு

கரும்பின் கணுவில் முத்துப் பிறக்கும் என்பது பல நூல்களில் கூறப்படுகின்றது. இங்கு நிடத நாட்டில் முத்துக்களும் கங்கை நீரும் காணப்படுகின்றன என்பதன் மூலம் வளச்சிறப்பு கூறப்படுகிறது.

**மகளிர் அன்னத்தைப் பிடித்தல்.**

நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே - நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

### அரும்பதங்கள்

தங்கோ - தம் + கோ (தம் அரசன்)

### பொழிப்பு

சிறந்த மயிற்கூட்டமானது ஓடி வளைத்தது போன்று நீளமான, பசுமையான கூந்தலையுடைய பெண்கள் இளமையான அன்னத்தை நாடிச் சென்று வளைத்துப் பிடித்து தமது அரசனின் முன்னால் பணிந்து வைத்தார்கள்.



### சிறப்பு

இளம் பெண்கள் அன்னத்தைப் பிடிக்கும் விதம் உவமை அணிமூலம் காட்டப்படுகிறது. மயில் கூட்டம் அன்னத்தைச் சூழ்ந்தது போலப் பெண்கள் அன்னத்தைச் சூழ்ந்தார்கள்; மகளிர் மயில் போன்ற சாயலையுடையவர் எனக் கூறப் பெறுவராதலின், ஆசிரியர் இங்ஙனம் கூறினார்.

**மன்னனைக் கண்ட அன்னம் வருந்துதல்.**

*அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்*
*மன்னன் திருமுன்னர் வைத்தலுமே - அன்னம்*
*மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்*
*கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.*

**அரும்பதங்கள்**

ஆயிழையார் - ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகளைப் பூண்ட மகளிர்
மலங்கிற்று - மருண்டது
வான் கிளை - பெரிய சுற்றம்

## பொழிப்பு

ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகளையுடைய மகளிர் அன்னத்தைப் பிடித்துச் சென்று அரசன் முன் வைத்த உடனே, அன்னம் தனது சுற்றமாகிய மற்ற அன்னங்களைக் காணாமல் வருந்தியது; மன்னவனைக் கண்டு மருண்டது.

**'அஞ்சாதே!' என அரசன் அன்னத்தைத் தேற்றுதல்.**

*'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்*
*வஞ்சி அனையார் மணிநடையும்- விஞ்சியது*
*காணப் பிடித்ததுகாண்,' என்றான் களிவண்டு*
*மாணப் பிடித்தார் மன்.*

**அரும்பதங்கள்**

அஞ்சல் - அஞ்சாதே
வஞ்சி - வஞ்சிக்கொடி
மணிநடை - அழகிய நடை
மாண - மிகுதி/சிறப்பு

## பொழிப்பு

மதுவை உண்டு களிக்கும் வண்டுகள் மிகுதியாய் மொய்த்துள்ள மாலையை அணிந்த நளன், ''இளமை பொருந்திய அன்னமே, அஞ்சாதே! உனது அழகிய நடையும், வஞ்சிக்கொடி போன்ற பெண்களின் அழகிய நடையும் ஆகிய இரண்டனுள் எது சிறந்தது என்று கண்டறிவதற்காகவே உன்னைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தேன்! வேறொன்றுமில்லை! '' என்றான்.

### சிறப்பு

நளன் அன்னத்தைப் பிடித்ததற்கான நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. பெண்கள் நடையையும் உனது நடையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகவே எனக் கூறப்படுகிறது.

**அன்னம் அச்சம் நீங்கல்**

செய்ய கமலத்திருவை நிகரான
தையல் தனியன்னம் - செய்ய
அடுமாற்ற மில்லா அரசன் சொற் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான்.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| செய்ய கமலம் | - | சிவந்த தாமரை |
| திருவை | - | இலக்குமியை |
| அடுமாற்றம் | - | கொல்லும் தன்மை |
| தடுமாற்றம் | - | மனக்கலக்கம் |

### பொழிப்பு

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியை ஒத்த தோழியானவள் பிடித்த அந்த ஒப்பற்ற அன்னமானது கொலைசெய்யும் கருத்தில் இல்லாத அரசனின் (நளனின்) சொற்களைக் கேட்டு மனக்கலக்கம் தீர்ந்தது.

### சிறப்பு

அன்னத்தை பிடித்த தோழியின் சிறப்பு காட்டப்படுகிறது. செந்தாமரையில் இருக்கும் இலக்குமியைப்போன்றவள் என உவமை மூலம் சிறப்பிக்கப்படுகிறது. நளனின் வார்த்தைகளினால் அன்னத்தின் கலக்கம் நீங்கியமை வலியுறுத்தப்படுகிறது.

**தமயந்தி பற்றி அன்னம் கூறல்.**

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள் - வசையில்
தமயந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு.

## அரும்பதங்கள்

திசைமுகந்த - எட்டுத்திசையிலுள்ளோர்களையும் தன்னுள் அடக்கிய
வெண்கவிகை - வெண்கொற்றக்குடை
இசைமுகந்த - புகழ் நிரம்பிய
வசை இல் - குற்றமில்லாத
அமை - மூங்கில்
அணங்கு - தெய்வப்பெண்

### பொழிப்பு

எட்டுத்திசையில் உள்ளவர்கள் எல்லோரையும் தன்னுள் அடக்கிய வெண்கொற்றக் குடையையும் தேர்ப்படையையும் உடைய அரசே, புகழ் நிரம்பிய உன்னுடைய தோள்களுக்கு பொருத்தமானவள், மென்மையான தோள்கள், மூங்கில் போன்ற அழகு, தெய்வப்பெண் ஆகிய தமயந்தி ஆனவள் என்று நளனிடம் அன்னம் கூறியது.

### சிறப்பு

திசைமுகந்த வெண்கவிகை மூலம் நளனின் ஆட்சிச் சிறப்பு எடுத்துக் காட்டப்படுகிறது. வசையில் தமயந்தி, மென்றோள் அமையந்தி என்றோர் அணங்கு என்பதன் மூலம் தமயந்தியின் சிறப்புகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நளன் அன்னத்தை எதற்காகப் பிடிக்கச் சொன்னான்?
2. அன்னம் தோன்றிய காட்சி எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?
3. மங்கையர்கள் அன்னத்தைப் பிடிக்கும் விதத்தைக் கூறுக?
4. நளனின் ஆட்சிச் சிறப்பு பற்றி புலவர் எவ்வாறு காட்டுகிறார்?
5. தரப்பட்டுள்ள செய்யுள்களில் இடம்பெறும் உவமை அணிகள் இரண்டினை எடுத்துக் காட்டுக.

## செயற்பாடு

இப்பாடற்பகுதியை 100 சொற்கள் அமையுமாறு ஒரு கதை வடிவத்தில் எழுதுக.

## அணிகள்

செய்யுளையோ, உரைநடையையோ அழகுபடுத்துவதற்காகக் கையாளப்பட்ட உவமை, உருவக அணிகள் பற்றி தரம் எட்டில் கற்றுள்ளோமல்லவா? அவ்வணிகளை நினைவுபடுத்திக்கொள்வோம். இங்கு தன்மைநவிற்சி அணி, தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிற்சியணி முதலானவற்றை அறிந்து கொள்வோம்.

### தன்மை நவிற்சி அணி

*உள்ளம் குளிர்ப்ப உணர்வுகள் தடுமாற*
*விழிநீர் அரும்ப தனை மறந்தாள்; நின்றாள்.*

மேலே தரப்பட்ட தொடரில் எந்த உவமானமோ, உவமேயமோ அல்லது மிகைப்படுத்தலோ அன்றி செயல்கள் உள்ளது உள்ளபடி உரைக்கப்படுகின்றன. இதனையே தன்மை நவிற்சி அணி என்பர். அதாவது கவிஞர் தாம் கூறக்கருதிய ஒரு பொருளின் உண்மையான தன்மைகளை உள்ளது உள்ளபடியே அதன் இயல்பு கெடாதவாறு அழகுற எடுத்துரைப்பதே தன்மை நவிற்சி அணி ஆகும். தன்மை நவிற்சி அணியை இயல்பு நவிற்சி அணி என்றும் தன்மையணி என்றும் அழைப்பர்.

தாம் கூறக்கருதிய ஒரு பொருளின் உண்மையான தன்மைகளை உள்ளது உள்ளபடியே அதன் இயல்பு கெடாதவாறு அழகுற எடுத்துரைப்பதே தன்மை நவிற்சி அணி ஆகும்.

### தன்மை நவிற்சி அணியின் இயல்புகள்

★ உள்ளதை உள்ளபடி இயல்பாகக் கூறும்.
★ மிகைப்படுத்தல் இருக்காது.
★ உவமையோ, உருவகப்படுத்தலோ இருக்காது.
★ சொல்வதில் அணிக்கேயுரிய அழகு காணப்படும்.

*நீலமணி மிடற்றன் நீண்ட சடைமுடியன்*
*நூலணிந்த மார்பன் நுதல் விழியன்- தோலுடையன்*
*கைமான் மறியன் கனல் மழுவன் கச்சாலை*
*எம்மான் இமையோர்க் கிறை.*

இங்கே கச்சாலை எம்மானின் இயல்புகள் உள்ளது உள்ளபடியே அதன் இயல்பு கெடாதவாறு அழகுற உரைக்கப்படுகின்றன.




**பின்வரும் பாடல்களில் தன்மை நவிற்சி கையாளப்பட்டுள்ளவாற்றை விளக்குக.**

1. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
   வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - (காளமேகப்புலவர்)

2. போய்க் கடப்பைத்
தள்ளி விட்டுச் சென்று
தலைச்சுமையைக் கீழ்இறக்கி
வைத்தாள் முருங்கை மரத்தடியில்
வீதியெல்லாம்
அல்லாடி வந்த அவளின் தளர்ந்த உடல்
காலை வெயிலில்
கசிந்து நனைந்துளது
சீலைத் தலைப்பால்
சிறிது துடைத்துவிட்டாள்

(இலைக்கறிக்காரி - எம்.ஏ.நுஃமான்)

### உயர்வு நவிற்சியணி

குதிரை வேகமாகப் பாய்ந்து ஓடியது.
குதிரை காற்றிலும் வேகமாகப் பாய்ந்து ஓடியது.

மேற்குறிப்பிட்ட இரு தொடர்களையும் அவதானியுங்கள். முதல் தொடர் குதிரையின் உண்மையான வேகத்தன்மையை உள்ளது உள்ளபடி சொல்கிறது.

இரண்டாவது தொடர் குதிரையின் வேகத்தை உள்ளது உள்ளபடி கூறாது அதனை மிகைப்படுத்தி உயர்த்திக் கூறுகிறது. அதாவது காற்று வேகமானது என்பது யாவரும் அறிந்த உண்மை. குதிரையின் ஓட்டத்தை அதையும் விட வேகமானது எனக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகும். இதனையே உயர்வு நவிற்சியணி என்பர். அதாவது ஒன்றைப் பற்றி மிகவும் உயர்த்தி, அளவுக்கு மேல் மிகுத்துக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும்.

### உயர்வு நவிற்சி அணியின் இயல்புகள்

- தன்மை நவிற்சி அணிக்கு நேர்மாறானது.
- ஒன்றை ரசனையுடன் மிகவும் உயர்த்திக் கூறுவது.



### பயிற்சி

**உயர்வு நவிற்சி அணி அமைந்த செய்யுள் அடிகள் மூன்று தருக.**

### தற்குறிப்பேற்ற அணி

*தையல் துயர்க்குத் தரியா தம் சிறகால்*
*கையால் வயிறலைத்து காரிருள் வெய்யோனை*
*வாவு பரித் தேரேறி வாவென்றழைப்பது போல்*
*கூவினவே கோழிக் குலம்.*

மேலே குறிப்பிட்ட செய்யுள் நளவெண்பாவில் இடம்பெறுகிறது. காட்டில் அவள் தன்னோடு தொடர்ந்து வந்து துன்பப்படக்கூடாது எனக் கருதி நளன் தமயந்தியைத் தனித்தே விட்டு நீங்கிச் செல்கிறான். காட்டில் நள்ளிரவில் தனித்து விடப்பட்ட தமயந்தி தாங்கொண்ணா துன்பத்தை அனுபவிக்கிறாள். இந்நிகழ்வைக் கூறக்கருதிய புகழேந்திப்புலவர் அதிகாலையில் சேவல் கூவும் இயல்பான நிகழ்வினில் தன் குறிப்பை ஏற்றிக் கூறுகிறார். அதாவது தமயந்தியின் தாங்கொணாத் துயர் கண்டே, கோழிகள் சூரியனை விரைவாக வரக் கதறுவதாகக் கூறுகிறார். இதனையே தற்குறிப்பேற்றவணி எனக் கூறுவர். அதாவது இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை ஏற்றி சுவைப்படக் கூறுவதே தற்குறிப்பேற்ற அணியாகும்.

*போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி*
*வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட*

(சிலப்பதிகாரம்)

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழைய முற்படும்போது தோரண வாயிற் கொடிகள் இயல்பாகக் காற்றிலாடுகின்றன. இதனைக் கண்ணுற்ற கவிஞர் கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்பதை முன்னரே அறிவிப்பன போல் வர வேண்டாம் என அக்கொடிகள் எச்சரிப்பதாகத் தம் கற்பனையினால் குறிப்பேற்றிக் கூறுகிறார்.

### பயிற்சி

**1.பின்வரும் பாடல்களிலுள்ள தற்குறிப்பேற்ற அணிகளை இனங்கண்டு கூறுக.**

1. *காரிருளில் கானகத்தே காதலியை கைவிட்ட*
*பாதகனை பார்க்கப் படாதென்றோ - நாதம்*
*அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவன் ஓடி*
*ஒழிக்கின்ற தென்னோ உரை.*

( நளவெண்பா)

2. முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ
முகவரிகள் தவறியதால் அழுதிடுமோ அது மழையோ

**2. பின்வரும் பாடல்களிலுள்ள அணிகளை இனங்கண்டு கூறுக.**

1. தேனலர்சண் பகவாசம்
வானுலகில் வெடிக்கும் (குற்றாலக் குறவஞ்சி)

2. கரையேறி மீன் விளையாடும் காவிரி நாடு - எங்கள்
உறையூரின் காவலரே வாழிய நீடு

3. தூசியின்றித் தெளிந்தோடும்
துறையினிலே நான்
மூழ்கித் தொட்டதேதோ
பாசி என்றெண்ணிக்
கையாலே பறித்தெறியப்
பற்றினேனா?
கூசி எதிர்த் துறையில்
குளித்த இளங்குமரி
எந்தன் கூந்தலென்றாள்

(கவிஞர் நீலாவணன்)

## அடுக்கிடுக்குத்தொடர்

| பகுதி - அ | பகுதி - ஆ |
|---|---|
| பெரிய பெரிய | பென்னம் பெரிய |
| சிறிய சிறிய | சின்னஞ்சிறிய |

பகுதி-'அ'வில் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களைக் கவனியுங்கள். அவை அடுக்குத்தொடர்கள். பெரியபெரிய என்னும் அடுக்குத் தொடரின் முதற்கண்ணுள்ள பெரிய என்னும் சொல்லும் சிறிய சிறிய என்னும் அடுக்குத்தொடரின் முதற்கண்ணுள்ள சிறிய என்னும் சொல்லும் முறையே 'பென்னம்' என்றும் 'சின்னஞ்' எனவும் விகாரமடைந்துள்ளன. இவ்வாறு அடுக்குத்தொடரில் முன்மொழி விகாரம் அடைந்துவருவதை அடுக்கு இடுக்குத் தொடர் எனக் கூறுவர். பொருள் மிகுதிப்பாட்டை

உணர்த்துவதற்காகவே முன்மொழி விகாரம் அடைந்து வருகின்றது. எல்லா அடுக்குத் தொடர்களும் அடுக்கு இடுக்குத் தொடர்கள் ஆகமாட்டா.

பின்வரும் அடுக்குத் தொடர்களை அடுக்கு இடுக்குத் தொடர்களாக மாற்றுவோம்.

| பகுதி - அ | பகுதி - ஆ |
|---|---|
| அணித்து அணித்து | அண்ணணித்து |
| பணைத்த பணைத்த | பண்ணப்பணைத்த |
| பதைத்த பதைத்த | பதைபதைத்த |
| சிவந்த சிவந்த | செக்கச்சிவந்த |
| வெளி வெளி | வெட்டவெளி |



## பயிற்சி

**பின்வரும் தொடர்களில் ஒன்று மட்டும் அடுக்கிடுக்குத் தொடர். அதனைத் தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. சுற்றும்முற்றும், தடதடத்தல், தன்னந்தனி, திண்டாட்டம் - (……………..)
2. நீட்டிநிமிர்ந்து. நடுநடுங்கி, நெருநெருத்து, நடைநடந்து - (……………..)
3. நாணிக்கோணி, நெட்டைநெடிய, நேரநிமிர, நீட்டி நிமிர்ந்து - (……………..)
4. தன்னந்தனிய, தாறுமாறாக, தளதளத்து, தட்டுமுட்டு - (……………..)
5. தெள்ளத் தெளிந்து, தத்தித்தாவி, துள்ளிக்குதித்து, தாவிப்பறந்து - (……………..)

# 16 சகுந்தலை நாடகம் I

துஷ்யந்த மகாராஜா வேட்டையாடுவதற்குக் காட்டுக்குச் சென்றவேளை அங்கு கண்ணுவ முனிவர் ஆச்சிரமத்தில் மேனகைக்கும், விசுவாமித்திரருக்கும் புதல்வியாகப் பிறந்த சகுந்தலையைக் கண்டான். அவளின் அழகில் மயங்கிக் காதல்கொண்டு காந்தருவமணம் புரிந்தான். சகுந்தலையின் வளர்ப்புத் தந்தையான கண்ணுவர் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டிருந்தார். துஷ்யந்தன் தன் பெயர் பொறிக்கப்பெற்ற கணையாழியை சகுந்தலையின் கையில் அணிவித்துத் தனது நகராகிய அத்தினாபுரிக்குச் சென்றான்.

சகுந்தலை கருவுற்றிருந்தாள். ஒருநாள் தனது கணவனைப் பற்றியே சிந்தித்தபடி அவள் ஆச்சிரமத்தில் அமர்ந்திருந்தவேளை சகுந்தலையின் தோழியரான பிரியம்வதை, அநசூயை ஆகிய இரு முனிபுத்திரியரும் பூஞ்சோலையில் மலர் கொய்து கொண்டிருந்தனர்.

## காட்சி - 1

இடம் :- பூஞ்சோலை

காலம் :- மாலைநேரம்

பாத்திரங்கள்:-பிரியம்வதை, அநசூயை, துருவாச முனிவர் (ஆசிரமத்தில் சகுந்தலை சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றாள். தோழியர் அநசூயையும் பிரியம்வதையும் பூஞ்சோலையில் மலர்கள் கொய்து கூடைக்குள் போட்டுக் கொண்டிருக் கின்றனர். அப்போது துருவாச முனிவர் கண்ணுவர் ஆச்சிரமத்தை நோக்கி விரைந்து வந்து வாயிலில் நின்றபடி...)


துருவாசர் :- உள்ளே யார் இருக்கிறார்கள்? ......ம் உள்ளே யாரும் இல்லையா?

அநசூயை :- விருந்தினர் யாரோ வந்திருப்பது போலத் தெரிகிறது.

பிரியம்வதை :- சகுந்தலை ஆச்சிரமத்திற்தானே இருக்கிறாள்! அவள் பார்த்துக் கொள்வாள்.

அநசூயை :- ஆமாம், அவளின் உடல் மட்டுந்தான் அங்கிருக்கின்றது. உள்ளமோ வேறிடத்தில் அலைகின்றது. விருந்தினரின் குரல் அவளுக்கு எங்கே கேட்கப்போகின்றது?

(திரைக்குள்ளிருந்து ஒலிக்கின்றது) வந்த விருந்தினரை அவமதித்துவிட்டாய். நானோ தவசி ரேட்டன். என்னை அவமதித்து, நீ யாரோ ஒருவனை நினைத்துக் கொண்டிருக்கிறாய். நீ எவனை நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அவன் உன்னை மறப்பானாக. அதுவே உனக்குத் தகுந்த தண்டனை.



பிரியம்வதை:- ஆம்... ஆம்.... விரைந்து செல்வோம். (இருவரும் செல்கின்றனர். பிரியம்வதை கால் தடுக்கி விழுந்து) ஆ... நான் விழுந்து விட்டேன், பூக்கள் சிதறுண்டு விட்டனவே (பூக்களைப் பொறுக்குகிறாள் அவ்வேளை அநசூயை திரும்பி வருகிறாள்) அநசூயை, முனிவர் போய்விட்டாரா? அங்கு என்ன நிகழ்ந்தது? சொல்.

அநசூயை:-நான் முனிவரை ஆச்சிரமத்திற்குத் திரும்பவும் வரும் படி பணிவாகக் கேட்டேன். அவரின் கோபம் எல்லையைத் தாண்டிவிட்டது. அவர் வரமறுத்து விட்டார். எனினும் சகுந்தலை உங்கள் மகளுக்கு ஒப்பானவள்; சிறியவள்; அவள் தெரியாது செய்த இக்குற்றத்தை மன்னித்து அருள வேண்டும் என்று மன்றாடினேன். அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினேன்.

பிரியம்வதை :- அநசூயை, உன் பிரார்த்தனைக்குப் பயன்கிட்டியதா?

அநசூயை :- பயன் முழுமையாகக் கிட்டவில்லை. முனிவர் சிறிது இரங்கி அருள் செய்தார். நான் இட்ட சாபத்திற்கு விமோசனம் கிடையாது. என்றாலும் இந்த விடயத்தில் சகுந்தலையின் கணவன் அவளுக்குக் கொடுத்த அணிகலன் ஒன்றை அவன் காணநேரிட்டால் நானிட்ட சாபமும் நீங்கும் என்று சொல்லி, அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

பிரியம்வதை :- இது சிறிது ஆறுதலைத் தருகிறது. கணையாழி சகுந்தலையிடந்தானே இருக்கின்றது. பயப்படத் தேவையில்லை. வா, சகுந்தலையிடம் போவோம்.

(இருவரும் ஆச்சிரமத்துட் சென்று சிந்தனையில் மூழ்கியிருக்கும் சகுந்தலையின் நிலையைக் கண்டு) அதோ ... பார் சித்திரப் பாவை போல் ஆடாது அசையாது இருக்கிறாள். நாங்கள் நிற்பது கூட அவளுக்குத் தெரியவில்லையே. இந்நிலையில் முனிவர் வந்ததை சகுந்தலை எப்படிக் காணமுடியும்?

அநசூயை:- உஸ்... துருவாச முனிவர் வந்தது, சாபமிட்டது, அதன்பின் நடந்தது இவையாவும் யாருக்கும் தெரிதல் ஆகாது. இதனை சகுந்தலை அறிந்தால் மிகவும் வேதனைப்படுவாள்.

பிரியம்வதை:- இதைத்தான் உன்னிடமும் சொல்ல இருந்தேன். இந்த விடயம் வேறெவருக்குமே தெரிய வேண்டாம்.

## காட்சி - 2

இடம் :- கண்ணுவர் ஆச்சிரமம்.

பாத்திரங்கள் :- சகுந்தலை, தோழியர் பிரியம்வதை, அநசூயை, கௌதமி, கண்ணுவர், சார்ங்கரவன் முதலிய சீடர்கள்

பிரியம்வதை :- அநசூயா! வா, என்றும் இல்லாதபடி நீ மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறாயே?

அநசூயை :- சகுந்தலை தன் கணவனிடஞ் செல்லப்போகிறாள். வா, அவளிடஞ் செல்வோம்.

பிரியம்வதை :- என்ன! நல்லசெய்தி! உனக்கு எப்படித் தெரியும்? எல்லாவற்றையும் விபரமாகச் சொல்.

அநசூயை :- இன்று அதிகாலையில் நான் சகுந்தலையைப் பார்க்கச் சென்றேன். தந்தையாகிய கண்ணுவரும் இருந்தார்.

பிரியம்வதை :- என்ன! முனிவருக்கும் செய்தி தெரிந்துவிட்டதா?

அநசூயை :- ஆம், துஷ்யந்த மகாராஜா சகுந்தலையைச் சந்தித்ததும், காந்தருவ மணம் புரிந்து கொண்டதும் சகுந்தலை கருவுற்றிருப்பதும் தந்தையாகிய கண்ணுவ முனிவர் தமது ஞானதிருட்டியினால் அறிந்துகொண்டார்.

பிரியம்வதை :- அதனால் ..... முனிவர் கோபம் கொண்டாரா?

அநசூயை :- இல்லை... இல்லை ''தக்க காரியம் நிகழ்ந்தது'' என்று மனமகிழ்ந்தார். இன்று காலையில் சகுந்தலையை ஆசீர்வதித்து அவளை அவளின் கணவனிடம் அனுப்புவதற்குத்தான் முடிவு செய்தமை பற்றி அவளுக்குத் தெரிவித்தார்.

பிரியம்வதை :- நாம் அதற்குரிய மங்கல காரியங்களைச் செய்ய வேண்டாமா? வா, சகுந்தலையிடம் போவோம்.

அநசூயை :- நாம் இனியும் தாமதிக்கக் கூடாது. உடனே சகுந்தலையிடம் செல்ல வேண்டும். கோரோசனை, திருமணி, அறுகம்புல், மகிழம்பூ மாலை, தளிர் முதலிய மங்கலப் பொருள்களையும் எடுத்துச் செல்வோம்.

( சகுந்தலை நீராடி வேள்வித் தீயின் பக்கத்தில் நிற்கின்றாள்).

பிரியம்வதை :- அதோ சகுந்தலை நீராடி புத்தம் புது மலர் போல, பொலிவுடன் நிற்கின்றாள். ஆச்சிரமத்து அன்னையர்கள் ஆசிர்வதிக்கின்றனர். உள்ளே செல்வோம்.

ஓர் அன்னை :- மகளே, சகுந்தலை, நீ மகாதேவி என்னும் பட்டம் பெற்று நீடூழி வாழ்வாயாக.... ( தோழியர் உட்புகுகின்றனர்).

சகுந்தலை :- அநசூயை, பிரியம்வதை நீவீர் நல்ல சமயத்தில் வந்தீர்கள்.

தோழியரிருவரும் :- இன்று உனக்கு நல்ல நாள் அல்லவா? மங்கல அலங்காரஞ் செய்யவந்தோம். (இரண்டு சீடர்கள் வெண்பட்டாடை முதலிய மங்கலப் பொருள்களுடன் அங்கே தோன்றுகின்றனர்).

கௌதமி :- மக்காள் இப்பொருள்களை எங்கிருந்து பெற்றீர்கள்?

சீடர்கள் :- தாயே, இவற்றைப் பூஞ்சோலையில் கண்டெடுத்தோம். தந்தை கண்ணுவரின் கட்டளைப்படி வனதேவதைகள் இவற்றை உதவின. (சீடர்கள் அங்கிருந்து அகல, தோழியர் சகுந்தலைக்கு அலங்காரஞ் செய்கிறார்கள்).

கண்ணுவர் :- (தனக்குள்) இன்று சகுந்தலை என்னை விட்டுப் பிரிகின்றாள், என்ற துயரம் என் உள்ளத்தை வாட்டுகின்றது. கண்களில் நீர் மல்குகின்றது. நாத் தளுதளுக்கின்றது. துயர் தாங்கமுடியாது தவிக்கின்றேன். முனிவனாகிய எனக்கே இவளின் பிரிவு இத்துணை துன்பத்தைத் தருமானால் தமது மகளிரைப் பிரியுங் காலத்தில் இல்லறத்தார் எத்துணை துன்பம் அடைவார்களோ...?

(அலங்காரம் முடிந்தது. கண்ணுவர் உள்ளே வருகிறார்.)

கௌதமி :- மகளே, சகுந்தலா, இதோ உன் தந்தை நிற்கிறார். அவரை வணங்குவாயாக,

(சகுந்தலை தந்தையின் பாதத்தைத் தொட்டு வணங்கி எழுகிறாள்)

கண்ணுவர் :- சகுந்தலா! சர்மிஷ்டை முன்னர் யயாதியால் எவ்வாறு மதிக்கப் பட்டாளோ அவ்வாறு நீயும் நின் கணவனின் மதிப்பைப் பெற வாழ்த்துகின்றேன். பூருவைப் போன்ற சகல சிறப்புக்களையும் பெற்ற மன்னர் மன்னான மகனை நீ அடைவாயாக.

கௌதமி :- இவை ஆசிகள் மட்டுமல்ல. வரங்கள் ஆகட்டும்.

கண்ணுவர் :- சார்ங்கரவ, உன் சகோதரியை அழைத்துச் சென்று துஷ்யந்தனிடம் சேர்ப்பாயாக.

சார்ங்கரவன் :- சகோதரி, வாருங்கள் செல்லலாம்.

கண்ணுவர் :- இவள் செல்லும் வழியெல்லாம் நல்ல வழியாகவே இருக்கட்டும். பார்க்கும் இடமெல்லாம் மலர்களும் பசுஞ் செடிகளும் அழகு காட்டட்டும். நன்னீர் தடாகங்கள் தண்ணளியை வழங்கட்டும். நறுந்தருக்கள் வழி நெடுகிலும் நிழல் தரட்டும். மந்தமாருதம் வீசட்டும். வனவிலங்குகள் வழிவிட்டு நிற்கட்டும். எங்கும் மங்கலம் தங்கட்டும். மகளே, வனதேவதையை வணங்கி விடை பெற்றுக்கொள்.

சகுந்தலை :- (கைகூப்பியபடி வலம் வந்து) இதுவரை காலமும் வாழ்ந்த இந்த ஆச்சிரமத்தை விட்டுப்பிரிவது எனக்கு ஆற்றொணாத் துயரைத் தருகின்றது. நான் எப்படிப் பிரிந்து செல்வேன். (மான்கள், மயில்கள், செடிகொடிகள், யாவற்றையும் தழுவி சகுந்தலை விடைபெறுகின்றாள். எல்லோரிடமுஞ் சென்று ஈற்றில் சகுந்தலை ஓர் ஏரிக்கரையை அடைகின்றாள்.)

சார்ங்கரவன் :- உற்றார், உறவினர் அவர்களைப் பிரிந்து செல்பவர்களை நீர்நிலை வரையுமே பின்தொடர அனுமதியுண்டு. இதோ ஏரிக்கரை வந்து விட்டது. இனி எங்களுக்கு உத்தரவு தாருங்கள்.

கண்ணுவர் :- சார்ங்கரவ, சகுந்தலையைப் பற்றி நான் சொல்வதை என் சார்பில் மன்னனிடம் கூறுவாயாக.

சார்ங்கரவன் :- தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கின்றேன்.

கண்ணுவர் :-நாம் தவத்தால் செல்வந்தர்கள். நீரோ இந்த நாட்டை ஆள்வதால் செல்வந்தர். இவள் சகுந்தலை நும்பால் மிகுந்த அன்புடையவள். நன்கு சிந்தித்து சகுந்தலையை மனைவியாக ஏற்பீர். அதற்குமேல் அவளின் நல்வினை எப்படியோ அப்படி நடக்கட்டும். இவ்வாறு என் சார்பில் அரசனிடம் சொல்வாயாக. (சகுந்தலையை நோக்கி) குழந்தாய், சகுந்தலை, நீ எப்பொழுதும் மூத்தோர் பெரியோருக்குப் பணிவிடை செய். கணவன் கோபித்தாலும் சாந்தமாக நடந்துகொள். ஒருபோதும் கர்வம், செருக்குக் கொள்ளாதே. புகுந்த இடத்தின் பெருமையையும், பிறந்த இடத்துச் சிறப்பையும் எஞ்ஞான்றுங் காத்துக்கொள்..... கௌதமி, சகுந்தலைக்கு என்ன சொல்ல விரும்புகிறாய்?

கௌதமி :- கணவன் வீடு செல்லும் பெண்ணுக்குத் தேவையான புத்திமதிகளைத் தாங்கள் சொல்லிவிட்டீர்கள். இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கின்றது? மகளே, இப் புத்திமதிகளை உன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பாயாக. மகிழ்ச்சியாக இருப்பாய்.

கண்ணுவர் :- மகளே, அநசூயையும், பிரியம்வதையும் கன்னியர்கள். அவர்கள் உன்னுடன் வரமுடியாது. உனக்குத் துணையாக கௌதமித் தாய் உடன் வருவாள் புறப்படு. (மனம் வெதும்பி விட்டுப் பிரிய முடியாமல் சகுந்தலை தந்தையிடம் விடைபெறுகின்றாள்.) மகளே, உன் எண்ணப்படி எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறுவாயாக. (சகுந்தலை தோழிகளிடம் பிரியாவிடை பெறுகின்றாள்)

பிரியம்வதை :- சகுந்தலை, உன்னை அடையாளங் காண்பதற்கு மன்னன் சிறிது சிரமப்பட்டால் உடனே அவன் உனக்களித்த கணையாழியைக் காட்டு வாயாக, மறந்துவிடாதே.

சகுந்தலை :- ஏன் அப்படிக் கூறுகின்றாய்?

அநசூயை :- பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் அரசர் அல்லவா? வேலைகள் அதிகம். அதனால் மறதி இருக்கலாம்தானே? எதற்கும் கணையாழியை மறந்துவிடாதே.

சார்ங்கரவன் :- சகோதரி, இனியும் தாமதிக்க முடியாது. புறப்படுவோம்.

சகுந்தலை :- (கண்ணுவரை நோக்கி) தந்தையே, நான் மீண்டும் இந்தத் தபோவனத்தைக் காண்பது எக்காலமோ?

கண்ணுவர் :- நீ உன் கணவனுடன் நெடுங்காலம் இனிது வாழ்ந்து உன் மகனுக்குப் பட்டஞ் சூட்டி, மன்னனாக்கிவிட்டு உன் பதியுடன் இத்தபோவனத்திற்கு மீண்டும் வருவாயாக.

கௌதமி :- இனியும் நாங்கள் காலதாமதம் செய்யாமற் புறப்படுவோம் மகளே, ( சகுந்தலை தந்தையையும், தோழியரையும் தழுவி விடை பெறுகின்றாள்.)

கண்ணுவர் :- சென்று வா மகளே, நடப்பவை நல்லவையாகட்டும். சர்வமங்களம் உண்டாவதாக.

(சகுந்தலை முதலியோர் தொடர்ந்து செல்கின்றனர். கண்ணுவரும் ஏனையோரும் ஆச்சிரமத்திற்குத் திரும்புகின்றனர்.)

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| காந்தருவ மணம் | - | தெய்வத்தை மட்டுமே சாட்சியாக கொண்டு செய்யப்படும் திருமணம் |
| ஞானதிருட்டி | - | கண்ணால் அன்றி ஞானத்தால் உணர்தல் |
| நின் | - | உன் |
| நும்பால் | - | உம்மிடத்தில் |
| எஞ்ஞான்றும் | - | எப்போதும் |
| கணையாழி | - | மோதிரம் |
| மந்தமாருதம் | - | தென்றல் காற்று |
| அணிகலன் | - | ஆபரணம் |
| தடாகம் | - | பொய்கை |
| தபோவனம் | - | ஆச்சிரமம் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சகுந்தலையின் பெற்றோர் யாவர்? அவள் வளர்ந்த இடம் எது?
2. துருவாச முனிவர் சகுந்தலைக்கு இட்ட சாபம் யாது? சாபவிமோசனமாக எதனைக் கூறினார்?
3. சகுந்தலை துஷ்யந்த மகாராஜாவைக் காந்தருவ மணம் புரிந்தமை குறித்து வளர்ப்புத் தந்தையரான கண்ணுவ முனிவர் கருத்து என்ன?
4. கணவனிடம் செல்வதற்கு சகுந்தலை புறப்பட்டபோது கூடவே துணையாகச் சென்றவர்கள் யாவர்?
5. தனக்கான சாபம் குறித்து சகுந்தலை அறிந்திருந்தாளா? அதனை அறிந்த தோழியர் அவளிடம் என்ன கூறினர்?

## செயற்பாடு

கண்ணுவர் ஆச்சிரமச் சூழல் பற்றிக் குழுநிலையில் கலந்துரையாடி, அதனைச் சித்திரிக்கும் ஓவியம் ஒன்றை வரைக.

# இணைமொழி

தரம் 8 இல் இணைமொழி குறித்து விரிவாகக் கற்றுள்ளோமல்லவா? அதனை நினைவுபடுத்திக் கொள்வோம். பொருட்செறிவை மிகுவிப்பதற்காகவும் கருத்தைத் தெளிவுறுத்துவதற்காகவும் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தப்படும் இணைமொழி குறித்தான அறிவை மேம்படுத்தும் வகையில் கீழே தரப்பட்ட பயிற்சிகளைக் கிரமமாகச் செய்து சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப அவற்றைப் பயன்படுத்தும் தேர்ச்சியை வளர்த்துக் கொள்வோம்.

### எதிர்ப்பொருள் தரும் இணைமொழிகள்

★ அடி முடி

★ அல்லும் பகலும்

★ இன்ப துன்பம்

### ஒரு பொருள் தரும் இணைமொழிகள்

★ உற்றார் உறவினர்

★ போற்றிப் புகழ்ந்து

★ ஏழை எளியவர்

### ஒன்று மட்டும் பொருளுடையதாக அமைந்து ஒத்த ஓசை தரும் இணைமொழிகள்

★ அமளி துமளி

★ கோணல் மாணல்

★ சாடைமாடை



## பயிற்சி

1. ஒரு பொருள் இணைமொழிகளை வேறாகவும் எதிர்ப்பொருள் இணை மொழிகளை வேறாகவும் பிரித்து எழுதுக.

பாவபுண்ணியம், வற்றிவரண்டு, இங்குமங்கும், கல்விகேள்வி, மலையும்மடுவும், குணங்குறை, வாடிவதங்கி, ஓட்டமும்நடையும், பல்கிப்பெருகி, கட்டைநெட்டை

2. பொருத்தமான இணைமொழித்தொடரைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.

1. பொதுச்சொத்துக்களை மக்கள் ......................... பாதுகாத்தல்வேண்டும்.
( போற்றிப்புகழ்ந்து, ஒப்புயர்வற்று, கண்ணும் கருத்துமாய், ஆய்ந்தோய்ந்து)

2. தன் ஒரேயொரு சின்னக்குழந்தையை அவர்கள்.................... வளர்த்தனர்.
(சீராட்டிப்பாராட்டி, அமுதூட்டி, போற்றிப்புகழ்ந்து, ஒன்றாய்மன்றாய்)

3. திருடன் ..................... அகப்பட்டுக்கொண்டான்.
(வெட்கிவிறைத்து, விதிவிலக்கு, கையும் மெய்யுமாக, சப்புச்சவர்)

4. வித்துவ சிரோன்மணி கதிரவேற்பிள்ளை கலைமகளின் திருவருளை ................. பெற்றவர்.
(அரைகுறை, தழைத்து கிழைத்து, அணை துணை, முற்றுமுழுதாக)

5. செம்மனச்செல்வியின் வீட்டில் செல்வம்................பெருகியது.
(கங்குகரை, கணக்குவழக்கற்று, ஈவிரக்கம், ஓட்டமும் நடையுமாக)

6. விடாமழை காரணமாக வெள்ளம் .................... பெருகியது
(ஓய்வு ஒழிவற்று, கங்குகரையின்றி, வகைதொகையற்று, விதிவிலக்கின்றி)

7. வறுமையில் போசாக்கற்று பிறக்கும் குழந்தைகள் பலர் .................காணப் பட்டனர்.
(வாட்டசாட்டமாக, எலும்பும்தோலுமாக, ஈடுஇணையற்று, சுகதுக்கம்)

8. திருமணத் தம்பதியினரை .................. வாழவேண்டும் என வாழ்த்தினர்.
(விருப்புவெறுப்புடன், சீருஞ் சிறப்புமாக, போற்றிபுகழ்ந்து, ஈடுஎடுப்பு)

9. வாழ்க்கை என்பது .................... இரண்டும் சேர்ந்தது தான் என்பார்கள்.
(சேறுசுரி, அற்பசொற்பம், வாட்டசாட்டம், சுகதுக்கம்)

10. இராவணனை இழந்த மண்டோதரி ................ காட்சியளித்தாள்.
(விருப்பு வெறுப்புற்று, கண்ணீரும் கம்பலையுமாக, மூச்சுப்பேச்சற்று, கன்னங்கரேல்)

## வாக்கிய வகைகள்

1. எழிலன் பரீட்சையில் சித்தியடைந்தான்.
2. எப்போது பாடசாலைக்கு வருவாய்?
3. தம்பி நாளைக்கு நீ பாடசாலைக்கு வருவாயா?
4. ஐயோ! காற்று பலமாக வீசுதே.
5. தம்பி அங்கே செல்லாதே.
6. எல்லோரும் வாழ்க.

மேற்குறிப்பிட்ட தொடர்களை மீண்டும் ஒரு முறை வாசிப்போம். தரப்பட்டுள்ள ஒவ்வொரு தொடரிலும் சொற்கள் முற்றுப் பொருளைத் தரக்கூடிய வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து இருப்பதையும் காணலாம். இதனையே வாக்கியம் என்போம். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வாக்கியமும் பொருளிலும் அமைப்பிலும் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டுள்ளமையைக் காணலாம்.

முதலாவது வாக்கியம் ஒரு செய்தியைத் தெரிவிப்பதுடன் உண்மைக் கருத்தொன்றினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இது போன்று ஒரு செய்தியை அல்லது உண்மையைக் கூறும் நோக்குடன் அமையும் வாக்கியம் செப்பு வாக்கியம் என்பர். இதனைக் கூற்று வாக்கியம் என்றும் அழைப்பர்.

இரண்டாவது, மூன்றாவது வாக்கியங்கள் ஒன்றை அறியும் நோக்குடன் வினாவப்படும் வாக்கியங்களாகக் காணப்படுகின்றன. இரண்டாவது வாக்கியம் எப்போது என்னும் வினாச்சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட

வாக்கியமாகக் காணப்பட மூன்றாவது வாக்கியம் ஆகார வினா இடைச்சொல்லைக் கொண்டு ஆக்கப்பட்ட வாக்கியமாகக் காணப்படுகிறது. இவ்வகையில் ஏதேனும் ஒன்றை அறியும் நோக்குடன் வினாவப்படும் வாக்கியங்களை வினாவாக்கியம் என்பர். இவை போன்று வினா வாக்கியங்களை எங்கே, என்ன, எப்படி, எவ்வாறு, எது, எவை, யார், யாது, யாவை முதலான வினாச்சொற்களைக் கொண்டும் ஓகார வினா இடைச்சொல்லைக் கொண்டும் உருவாக்கலாம்.

உதாரணம்:-

★ தம்பி எங்கே போகிறாய்?

★ தம்பி என்ன செய்கிறாய்?

★ தம்பி எப்படி வந்தாய்?

★ தம்பி இதனை எவ்வாறு பார்க்கிறாய்?

★ பறந்து கொண்டு தூங்கும் பறவை எது?

★ சக்தியைப் பெறும் வழிகள் எவை?

★ இலங்கையின் முதல் பிரதமர் யார்?

★ ''பந்தயக்குதிரை'' எனும் சிறுகதையின் மையக்கருத்து யாது?

★ 'பொன்னியின் செல்வன்' நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவை?

★ நாளை நீ பாடசாலைக்கு வருவாயோ?


காற்று பலமாக வீசுவதால் அஞ்சும் ஒருவரின் மனோநிலையை நான்காவது வாக்கியம் வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வாறு அச்சம், வியப்பு, அவலம், இழிவு முதலான ஒன்பான் சுவைகளை உணர்த்தி வரும் வாக்கியத்தை உணர்ச்சி வாக்கியம் அல்லது மெய்ப்பாட்டு வாக்கியம் என்பர்.

மேலே கூறப்பட்ட ஐந்தாவது, ஆறாவது வாக்கியங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அமையும் வாக்கியங்கள் ஆகும். ஆகையால் இதனை விருப்பு வாக்கியங்கள் என்பர். இவ்விருப்பு வாக்கியங்களை ஏவல் வாக்கியம், வியங்கோள் வாக்கியம் என இரண்டாகப் பிரிக்கலாம். ஒருவரை அல்லது ஒன்றை விளித்து இதைச் செய் அல்லது செய்யாதே எனப் பணிப்பது ஏவல் வாக்கியம் என்றும் வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் பொருளில் வருபவை வியங்கோள் வாக்கியம் என்றும் தரம் எட்டில் கற்றவற்றை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்கள் எவ்வகை வாக்கியங்களென எழுதுக:**

1. *அழ.வள்ளியப்பா குழந்தைக் கவிஞராக அறியப்பட்டவர்.*
2. *தம்பி பாடத்தைப் படி.*
3. *பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.*
4. *தெய்வமே! ஏழை எனக்கு அருள் செய்வாயாக.*
5. *ஆகா! எவ்வளவு அழகான பூக்கள்!.*
6. *கபிலர் சிறந்த சங்கப் புலவர்களில் ஒருவர்.*
7. *நீரின்மையால் நாட்டில் பல பாகங்களில் பயிர்கள் வாடின.*
8. *அந்தோ! பரிதாபம்.*
9. *பொய்ம்மை மாந்தர் ஒழியட்டும்.*
10. *'தாய்' என்ற நாவலை எழுதியவர் யார்?*



# 17 தோற்றுப்பார்

வெற்றி எனும் முகவரியை அடையப் பயன்படும் பாதையின் பெயர் தோல்வி. தோல்வி நம் வாழ்க்கையின் ஒரு அங்கம். இந்த உலகத்தில் தோல்வியை சந்திக்காதவர் எவரும் இல்லை. தோல்வி ஒவ்வொரு முறையும் ஒரு பாடத்தை நமக்கு கற்றுத் தருகிறது. நாம் செய்யும் எந்த ஒரு விஷயத்திலும் முழு வெற்றி பெறவேண்டுமானால் தோல்வியை நாம் சந்தித்தே தீரவேண்டும். தோல்வி ஒரு வாழ்க்கை நியதி. தோல்வியையே சந்திக்காமல் நான் சாதித்தேன் என்று எவராவது சொன்னால் அது உலகின் எட்டாவது அதிசயமாகும்.

வாழ்க்கையில் சாதித்த எந்த ஒரு மனிதனையும் கேட்டுப்பாருங்கள்; ஒரு வெற்றியைப் பெற அவர் சந்தித்த தோல்விகள் ஏராளமாக இருக்கும். பட்ட அவமானங்களோ அதைவிட அதிகமாக இருக்கும். வெற்றி என்றால் என்ன என்பதை உங்களுக்குப் புரிய வைக்க உதவும் ஒரு கருவியே தோல்வி.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான பத்து சாதனையாளர்களின் பெயர்களை ஒரு வெள்ளைத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாறு புத்தகங்களை எடுத்து ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் கூர்ந்து படித்துப் பாருங்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை முறை தோற்றிருக்கிறார்கள் என்பதை பட்டியலிடுங்கள். வாழ்க்கையில் தோற்காமல் சாதனை படைத்தவர் இந்த உலகத்தில் எவரும் இல்லை என்பது இப்போது உங்களுக்குப் புரியும்.

தோல்விகளைக் கண்டு பயந்து ஓடுபவர்களை தோல்வியானது தொடர்ந்து துரத்திச் சென்று அழித்துவிடும். தோல்விகளை துச்சமென நினைத்து அதை எதிர்த்துப் போராடுபவன் எவனோ அவன் நிச்சயம் வாழ்க்கையில் ஜெயிக்கிறான்.

தோற்றுவிட்டோமே என்று கவலைப்பட்டு மனதைத் தளர விடாதீர்கள். வருத்தப்பட்டு சோர்ந்துபோய் உட்கார்ந்து விடாதீர்கள். விடுதலைப் போரில் காந்திஜி சந்திக்காத தோல்விகளா? அவமானங்களா? அவர் மனஉறுதியோடு அனைத்தையும் எதிர்கொண்டதால் இன்று நாம் அவரை 'தேசபிதா' என்று அழைக்கிறோம்.

தற்காலத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கையின் ஒரு அங்கமாக தோல்வியைப் பற்றி அவர்களுக்கு எடுத்துச்

சொல்வதே இல்லை. இதன் காரணமாக எதிர்காலத்தில் அவர்கள் தோல்வியை சந்திக்கும்போது மனமுடைந்து போகிறார்கள். தோல்விகளை எவ்வாறு எதிர்கொள்ளுவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. உடனே ஒரு விபரீதமான முடிவினை எடுக்கிறார்கள். அது தற்கொலை. தோல்விக்கு முடிவு தற்கொலைதான் என்று ஒவ்வொருவரும் தீர்மானித்திருந்தால் இந்த உலகம் இவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்குமா? இந்த உலகத்தில் ஒரு மனிதன் கூட மிஞ்சி இருக்க மாட்டான்.


தாமஸ் ஆல்வா எடிசன்

ஒவ்வொரு கண்டுபிடிப்பிற்குப் பின்னாலும் பல தோல்விகள் ஒளிந்துள்ளன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மின் குமிழினைக் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன் என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அதற்காக அவர் எவ்வளவு உழைத்தார் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.

குமிழ் எரிய முக்கியமான ஒரு பொருள் டங்ஸ்டன். குமிழில் டங்ஸ்டனை பயன்படுத்தினால் வெற்றி பெறமுடியும் என்பதை அவர் சுமார் ஆயிரம் முயற்சி களுக்குப் பின்னரே கண்டுபிடித்தார். அதற்கு முன்னால் மூங்கில் இழை, சிறு கம்பி முதலிய பல பொருள்களை இணைத்துப் பார்த்தார். ஆனால் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. இவ்வாறு ஆயிரம் தோல்விகளுக்குப் பின்னரே டங்ஸ்டன் இழையினை குமிழிற்குள் வைத்து சோதித்து வெற்றி கண்டார்.

அப்போது ஒரு நண்பர் அவரிடத்தில் கேட்டார்,

''ஆயிரம் முறை தோல்வியைச் சந்தித்தீர்களே. உங்களுக்கு கஷ்டமாக இல்லையா?''

''நிச்சயமாக இல்லை. ஒவ்வொரு முறையும் ஒரு சோதனையை எவ்வாறு செய்யக்கூடாது என்பதைத் தெரிந்துகொண்டேன். இறுதியில் வெற்றியும் பெற்றேன்''.

சாதனையாளர்கள் தங்களுடைய தோல்விகளை எப்படி எடுத்துக் கொள்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. தோல்விகளை தோல்விகளாகக் கருதாத காரணத்தினால்தான் சிலர் மட்டும் வாழ்க்கையில் வெற்றியைச் சந்திக்கிறார்கள்.

ஒவ்வொரு முறை தோற்கும்போதும் பெரியதொரு வெற்றியை நோக்கி நீங்கள் பயணிக்கிறீர்கள் என்பதை உணருங்கள். பதினைந்தாவது மாடிக்குச் செல்ல வேண்டுமென்றால் பதினான்கு மாடிகளை நீங்கள் நிச்சயம் கடந்துதான் ஆகவேண்டும். தோல்விப்படிகளை மெல்ல மெல்ல கடந்துதான் வெற்றியின் முகவரியை நீங்கள் அடைய முடியும். வெற்றியின் முகவரியை அடைய விரும்பினால் நிச்சயம் நீங்கள் தோல்விகளை சந்தித்துத்தான் ஆக வேண்டும். தோற்றுப் பாருங்கள், அப்போதுதான் வெற்றியின் முகவரி என்ன என்பது உங்களுக்குப் புரியும். வெற்றிகளும் உங்களைத் தேடி வரும்.



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**


1. கட்டுரையாசிரியர் உலகின் எட்டாவது அதிசயமாக எதனைக் குறிப்பிடுகின்றார்?
2. நீங்கள் அடையும் தோல்விகள் எதனை அடைய உங்களை வழிப்படுத்தும்?
3. எடிசன் தான் அடைந்த தோல்விகள் ஒவ்வொன்றிலிருந்தும் எதனைக் கற்றுக்கொண்டார்?
4. பிள்ளைகள் தோல்விகளைச் சந்திக்கும்போது மனமுடைந்து போவதற்கு பெற்றோர்கள் எவ்வாறு காரணமாகின்றார்கள்?
5. வாழ்க்கையில் தோற்காமல் சாதனை படைத்தவர் எவரும் இல்லை என்பதனை உணர்த்த கட்டுரையாசிரியர் எவ்வாறு முயல்கிறார்?

**செயற்பாடு**

தோல்வியே வெற்றியின் முதற்படி என்ற கருப்பொருளில் கட்டுரை ஒன்று எழுதுக.

## சொற்புணர்ச்சி I

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் இடம்பெறும் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சொற்புணர்ச்சியைப் பின்வருமாறு பாகுபடுத்தி, தரம் 8 இல் கற்றது நினைவிலுள்ளதா?




### உயிர்முன் உயிர் புணர்தல்

உயிர்முன் உயிர் புணரும் சந்தர்ப்பங்களில் உடம்படுமெய் தோன்றி புணர்ச்சி இடம்பெறும் என்பது பற்றியும்

உடம்படு மெய்யாக (ய்) யகரமெய் அல்லது (வ்) வகரமெய் தோன்றும் என்பது பற்றியும் அவை தோன்றும் சந்தர்ப்பங்கள் பற்றியும் தரம் 8 இல் கற்றுள்ளோம் அல்லவா?

அவற்றை நினைவுபடுத்திக் கொள்வோம்.

## உயிர்முன் மெய் புணர்தல்

(அ) உயிர்முன் வல்லினமெய் புணர்தல்

வாழை + பழம் → வாழைப்பழம்
பசு + கன்று → பசுக்கன்று

மேலேயுள்ள இரண்டு புணர்ச்சிகளிலும் நிலைமொழியீற்றில் உயிர் எழுத்துக்களும் வருமொழி முதலில் வல்லின மெய்யெழுத்துக்களும் இடம்பெற்றுள்ளன. புணர்ச்சியின்போது யாது நிகழ்ந்துள்ளது என்பதனை அவதானிப்போம். இரண்டிலும் வருமொழிமுதல் வல்லினங்கள் மிகுந்துள்ளன (அதே வல்லினமொன்று தோன்றியுள்ளது).

பெரிய + பறவை → பெரிய பறவை
மா + கனி → மாங்கனி

மேலேயுள்ள இரண்டு புணர்ச்சிகளையும் அவதானிப்போம். இரண்டிலுமே நிலைமொழியீற்றில் உயிர் எழுத்துக்களும் வருமொழி முதலில் வல்லின மெய்யெழுத்துக்களுமே இடம்பெற்றுள்ளன. ஆனால் இவற்றில் வல்லினங்கள் மிகவில்லை.

முதலாவது புணர்ச்சி இயல்பாகவே நடந்துள்ளது. இரண்டாவதில் வருமொழி முதல் வல்லின மெய்யின் இன எழுத்தான மெல்லினம் மிகுந்துள்ளது (தோன்றியுள்ளது)

எனவே உயிர்முன் வல்லின மெய்புணரும் சில சந்தர்ப்பங்களில் வல்லினம் மிகும். வேறு சில சந்தர்ப்பங்களில் மிகா. அவ்வாறான சந்தர்ப்பங்கள் எவை என்பதனை விளங்கிக்கொள்வோம்.

### வல்லினம் மிகும் சந்தர்ப்பங்கள்

- அ + புத்தகம் → அப்புத்தகம்
  எ + குழந்தை → எக்குழந்தை
  இந்த + பாதை → இந்தப்பாதை
  எந்த + தோட்டம் → எந்தத்தோட்டம்

அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துக்கள் எ என்ற வினாவெழுத்து அந்த, இந்த, உந்த ஆகிய சுட்டுச்சொற்கள் எந்த என்ற வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

♦ கோயிலை + கட்டினான் → கோயிலைக் கட்டினான்
இராமனுக்கு + தம்பி → இராமனுக்குத் தம்பி

இரண்டாம், நான்காம் வேற்றுமையுருபேற்ற பெயர்ச்சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

♦ பாட + போகிறான் → பாடப்போகிறான்
ஓடி + திரிந்தான் → ஓடித்திரிந்தான்

செய்ய என்னும் வாய்ப்பாட்டு அகர ஈற்று வினையெச்சம், இகர ஈற்று வினையெச்சம் என்பனவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

♦ ஆறா + துயரம் → ஆறாத்துயரம்

ஆகார ஈற்று எதிர்மறைப் பெயரெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

♦ அப்படி + கதையாதே → அப்படிக்கதையாதே
இனி + பழகலாம் → இனிப்பழகலாம்

அப்படி, இப்படி, எப்படி, இனி ஆகிய வினையடைகளை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

♦ பாட்டு + பாடு → பாட்டுப்பாடு

வன்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

யானை + பாகன் → யானைப்பாகன்
குருவி + கூடு → குருவிக்கூடு

வேற்றுமைத் தொகைச் சொற்களில் உயிரீற்றை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

♦ தீ + பெட்டி → தீப்பெட்டி
உழவு + தொழில் → உழவுத்தொழில்

வினைத்தொகை தவிர்ந்த ஏனைய தொகைச் சொற்களில் வல்லினம் மிகும்.

**வல்லினம் மிகா இடங்கள்**

♦ ஆசிரியரோடு + போனான் → ஆசிரியரோடு போனான்
அவனது + புத்தகம் → அவனது புத்தகம்
கோயிலிலிருந்து + சென்றேன் → கோயிலிலிருந்து சென்றேன்

மூன்றாம் வேற்றுமை ஒடு, ஓடு உருபுகளுடன், ஆறாம் வேற்றுமைக்குரிய அது உருபுடன், ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபுகளான நின்று, இருந்து என்பவற்றுடன் புணரும் வல்லினம் மிகா.

♦ சிறிய + புத்தகம் → சிறிய புத்தகம்

அகரவீற்றுப் பெயரெச்சங்களுக்குப் பின் வல்லினம் மிகா.

♦ ஏவு + கணை → ஏவுகணை

வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகா.

♦ வந்து + போனான் → வந்துபோனான்

வன்றொடர்க் குற்றியலுகரமல்லாத உகரவீற்று வினையெச்சங்களின் பின் வல்லினம் மிகா.

♦ மா + காய் → மாங்காய்

புளி + காய் → புளியங்காய்

இங்கு வேறுபட்ட வகையில் புணர்ச்சி நடைபெற்றுள்ளது. முதலாவதில் வருமொழி முதலின் இன எழுத்தான மெல்லினம் மிகுந்துள்ளது.

இரண்டாவது ''அம்'' சாரியை தோன்றிப் புணர்ந்துள்ளது. இவை சில விதிவிலக்குகள் ஆகும்.

ஆ) உயிர்முன் மெல்லின/இடையின மெய் புணர்தல்

♦ அ + ஞானம் → அஞ்ஞானம்

இ + நாள் → இந்நாள்

இ + மரம் → இம்மரம்

உ + வீடு → உவ்வீடு

எ + யானை → எவ்யானை

அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துக்களின் முன்னும் ''எ'' என்ற வினாவெழுத்தின் முன்னும் ஞ, ந, ம ஆகிய மெல்லின மெய்யும் வகர இடையின மெய்யும் மிகும். யகர இடையினம் வந்தால் வகரம் மிகும்.

♦ இந்த + ஞாயிறு → இந்த ஞாயிறு

பெரிய + யானை → பெரிய யானை

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இயல்பாகப் புணரும்.

## பயிற்சி

**பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக; புணர்ச்சியில் நடைபெற்ற மாற்றங்களை இனங்கண்டு குறிப்பிடுக.**

1. திரு + அடி
2. கன்று + குட்டி
3. தீ + பிடித்தது
4. பூ + அரும்பு
5. மெல்ல + பேசினான்
6. ஓடி + சென்றான்
7. விளா + காய்
8. கலை + அழகு
9. கிளி + பொந்து
10. அந்த + நாள்

## மரபுத்தொடர்கள்

கண்ணாயிருத்தல் - கவனமாக இருத்தல்

கண்மலர்தல் - விழித்தல்

மேற்குறிப்பிட்ட உதாரணங்களில் சொற்கள் சேர்ந்து நின்று நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பால் பிறிதொரு பொருளை உணர்த்தி நின்றன. இத்தகைய குறிப்புப்பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருதலால் இதனை மரபுத்தொடர் என அழைப்பர்.

அடியிடுதல் - ஆரம்பித்தல்

அள்ளியிறைத்தல் - வாரிவழங்குதல்

அறைகூவுதல் - போட்டிக்கழைத்தல்

ஆழம்பார்த்தல் - மனதை அளவிடுதல்

ஆறப்போடுதல் - பிற்போடுதல்

| | | |
|---|---|---|
| உலைவைத்தல் | - | அழிவு வருவித்தல் |
| ஓடெடுத்தல் | - | பிச்சையெடுத்தல் |
| கழுத்துக்கொடுத்தல் | - | பொறுப்பெடுத்தல் |
| கருவறுத்தல் | - | அடியோடழித்தல் |
| கரையேறுதல் | - | ஈடேறுதல் |
| காற்றாய்ப்பறத்தல் | - | வெகுவிரைவு |
| கையெடுத்தல் | - | வணங்குதல் |
| சந்திக்கிழுத்தல் | - | பகிரங்க அவமானம் |
| சிட்டாய்ப்பறத்தல் | - | துரிதகதி |
| சுருக்குப்போடுதல் | - | கெடுதி செய்தல் |
| தட்டிக்கொடுத்தல் | - | உற்சாகப்படுத்தல் |
| நட்டாற்றில்விடல் | - | ஆபத்தில் கைவிடல் |
| நாக்குப்புரளுதல் | - | சொன்னசொல் தவறுதல் |
| முகம்முறித்தல் | - | வெறுப்படைதல் |
| பல்லுக்காட்டல் | - | கெஞ்சுதல்/இரந்து கேட்டல் |
| வெள்ளிடைமலை | - | தெளிவாகத் தெரிதல் |
| விழலுக்கிறைத்தல் | - | வீண்செலவு செய்தல் |

## பயிற்சி

**1) பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. எல்லா உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத்தொடர்

   1. பூண்டோடு அழித்தல்  2. மொட்டையடித்தல்
   3. கருவறுத்தல்  4. காலைவாருதல்

2. கையைக்கடித்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்

   1. நிர்மூலம்  2. செல்வாக்கிழத்தல்  3. அழிவடைதல்  4. நட்டமடைதல்

3. நாவலர் தமிழ்புலமை மிக்கவர் என்பது கண்கூடு. இங்கு கண்கூடு என்பது

   1. வெளிப்படை  2. மிக்கசரியானது  3. உண்மையானது  4. அறிவுபூர்வமானது

4. உச்சிகுளிர்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்

   1. மிகமகிழ்தல்  2. தலை ஈரமாதல்  3. துயரடைதல்  4. மனம்குளிர்தல்

5. செருக்கு என்பதை புலப்படுத்தாத மரபுத்தொடர்

   1. தலைவீக்கம்  2. தலைப்பாரம்  3. தலைக்கனம்  4. தலைகாட்டல்

**2) பின்வரும் மரபுத்தொடர் ஒவ்வொன்றும் குறிக்கும் குறிப்புப்பொருளை எழுதுக.**

1. கசக்கிப்பிழிதல்
2. கடன்கழித்தல்
3. காதுகுத்தல்
4. கயிறுதிரித்தல்
5. கைகொடுத்தல்
6. தலைமுழுகுதல்
7. தலைகவிழ்தல்
8. துண்டுவிழுதல்
9. நெருப்பெடுத்தல்
10. குரங்குப்பிடி


# 18 நகரத்தின் நிழல்

இப்பொழுதெல்லாம், யாழ்ப்பாண ரெயில்வே ஸ்டேசனில் திருவிழாக் கூட்டந்தான்.

தினசரி இவ்வளவு சனக்கூட்டம் எங்கே போகின்றதோ? எங்கிருந்து வருகின்றதோ?

அந்த நெருக்குவாரக் கூட்டத்துடன் அள்ளுண்டு, எற்றுண்டு, வெளியேறிய பொழுதுதான் சாவகாசமாக மூச்சுவிட முடிகின்றது.

தென்னோலைகளினால் அடைக்கப்பட்ட வேலிகளைக் கொண்ட யாழ்ப்பாண மாநகர வீடுகள் அமைதியை இழந்து, இயந்திர வேகத்திற்குத் தன்னை ஈடுகொடுக்கும் கோலத்தை இங்குதான் பார்க்கலாம்.



எத்தனை எத்தனை விதமான டாக்ஸிக்காரர்கள்! அவற்றில் கூட முண்டியடித்துக்கொண்டு ஏறுவதிலேதான் எவ்வளவு வேகம்? பேரமாவது, மண்ணாவது! சிறு சக்கரப் பற்களின் சுழற்சியில் காசு காட்டும் அந்தச் சின்னஞ் சிறு வலதுகை இரும்புப்பெட்டியில் உள்ள நம்பிக்கைதான் என்ன?

முன்னரெல்லாம் ரிக்ஷாக்களும், குதிரை வண்டிகளும் தான் பிரயாணிகளுக்கு வாகனம். இவைகளை விட்டால், நடராஜா சர்வீஸ்தான்.

என்ன இருந்தாலும் இந்த ரிக்ஷாக்காரர்களுடன் பேரம் பேசுவதில் இருக்கின்ற குஷி ஒன்று இருக்கின்றதே அடடா, அதை அனுபவித்துப் பார்த்தால் தான் ரசனை விளங்கும்.

''ரெண்டுரூவா தா, தம்பி!''

''என்ன உதிலை கிடக்கிற நல்லூருக்கே?''

''என்ன ராசா, நீ இப்பிடிச் சொல்லுறாய்? ஒருநாளும் ரிக்சோவில் போகவில்லையே...?''

''உதுதான் கூலி?''

''ஏறு துரை; ஒண்டரை ரூவா தா! ம்... ஏறு.''

''ஒரு ரூவா தான் தருவன்.''

''அதுக்கு வேறை ஆளைப் பார்.''

இப்படியான பேரப் பேச்சுகள் இப்பொழுது கிடையாது. ''பீம் பீம்'' ''பூம் பூம்'' என்ற கார்களின் ஹார்ன் இரைச்சல் தான். மனிதக் குரல்களுக்குப் பதிலாக இயந்திரங்களின் உறுமல்.

டாக்ஸிகளைத் தாண்டியதும் ஒதுக்குப்புறமாக இரண்டு ரிக்ஷா வண்டிகள். நான் அங்கு நடையைக் கட்டுகின்றேன். என்னைக்கண்டதும் சின்னட்டி, ''தம்பியே! போன கிழமையும் வந்தியளே! இங்கை ஆருக்காகிலும் சுகமில்லைக் கிகமில்லையே?'' என்று வாய்நிறையச் சிரித்து வரவேற்று, வாடிக்கைகாரர் குந்தியிருக்கிற தும்பு மெத்தையைக்கையால் தட்டிச் சுத்தம் செய்கிறான். ''ம்... சரி: ஏறுங்கோவன், தம்பி.''

நான் ரிக்ஷாவில் ஏறிக்குந்துகிறேன். ''இல்லைச் சின்னட்டி, இங்கை ஒரு காணியிலை கரைச்சல். அதுதான் அடிக்கடி கொழும்பிலை இருந்து வரவேண்டி இருக்கு'' என்று அக்கறையுடன் சொல்லுகிறேன்.

சற்றுத்தூரத்தில் புத்தம் புது மோரீஸ் மைனர் வாகனத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு ஏறுகிறார், அமிர்தலிங்கம். அவரொரு பிரபலஸ்தர். என்னைத் தெரிந்திருந்தாலும் தெரியாதவரைப்போலக் காட்டிக் கொள்ளும் முகத்திருப்பம். ஏனென்றால் இந்த இயந்திர யுகத்தில், மனிதனை மனிதன் இழுக்கும் ரிக்ஷாவில் நான் பிரயாணம் செய்வதைப் பார்த்து மனதிற்குள் என்னை வெறுத்து ஒதுக்கிக்கொண்டாரோ, என்னமோ! ஒருவேளை காட்டுமிராண்டி என்று என்னை எண்ணிக்கொண்டிருக்கலாம்.

அமிர்தலிங்கம் காருக்குள் ஏறி அமர்வதற்கு முன்னரே, சின்னட்டி, ஏர்க்காலைச் சற்றே தூக்கி ரிக்ஷா வண்டியைச் சமநிலையில் நிமிர்த்திப் பிடித்து, இழுக்க ஆரம்பித்தான்.

கார்கள் குறுக்கும்மறுக்குமாக ஓடி, சின்னட்டியின் பொறுமையைச் சோதித்தன.

கிடைத்த இடைவெளியைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அவன், வண்டிச் சில்லை வெட்டித் திருப்பி, தார் ரோட்டில் ரிக்ஷாவை ஏற்ற முயற்சித்தான்.

''டேய், மடையா! கார் வாறது பின்னாலை; தெரியவில்லையா?''

சாரதி ஆசனத்தில் வீற்றிருந்த அமிர்தலிங்கம் ஐயா அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அதனால்தான் சின்னட்டியின் மீது சீறி விழுகிறார்.

ரிக்ஷாவை ஒரு ஓரமாக ஒதுக்கிய சின்னட்டி, ''ப்பூ! இந்தக் கார்க்காறன்களுக்குப் புதுசாக் கொம்பு முளைச்சுக் கிடக்காக்கும்!'' என்று வாய்க்குள் முணுமுணுத்தபடியே வண்டியை வேகமாக இழுக்கிறான்.

நடந்து செல்லும் பிரயாணிகளைத் தாண்டிக் கொண்டு ரிக்ஷா வேகமாக உருளுகின்றது.

முன்னர் நிலையத்துக்கு முன்பக்கம் வரிசையாக இருந்த கடைகளெல்லாம் புகையிரத நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தினால் தரைமட்டமாகக் காட்சியளிக்கின்றன.

அன்று,

இந்த இடத்திலேதான் இருந்தது எவரெஸ்ட் ஹோட்டல். ரெயில் வருகிற, போகிற நேரங்களில் நடக்கும் வியாபாரத்தில் ஒரு கம்பீரம் இருக்கும். எதிரே மலையாளத்தான் கடைச் சுவரிலேதான் ரீகல் தியேட்டருக்கு வரவிருந்த பயங்கர இங்கிலீஸ் சீரியல் சண்டைப் படத்திற்கு விளம்பரம் ஒட்டியிருந்தது. அதைப் பார்த்ததும் எவரெஸ்ட் கடையில் ஒரு சினிமாப் பத்திரிகை வாங்கலாம் என்ற எண்ணம் என் மனதில் நிழலாடியது. அதை வாங்கிக்கொண்டு, வீதியில் எறியப்பட்ட வாழைப்பழத் தோலை உண்ண விரைந்த தெருப்பொறுக்கி மாடொன்றுடன் மோதித் திரும்பக் கைப்பெட்டியை இடது கைக்கு மாற்றியபொழுது...

'''தம்பி...!'' என்ற குரல் பின்னாலிருந்து கேட்டது.

திரும்பிப் பார்த்தேன்.

ஒரு கையால் ரிக்ஷாவின் ஏர்க்காலைத் தாங்கிய வண்ணம் மறு கையால் தன் முகத்தில் ஒட்டியிருக்கும் அழுக்கைப் பார்க்கிலும் அழுக்கு மிகுந்த சீலைத் துண்டினால், பசிக்களை இழையோடியிருக்கும் முகத்தில் சற்றே வேர் விடும் வியர்வைத்துளிகளை உரஞ்சித் துடைத்தவாறு, ரிக்சோவிலை ஏறுமன் தம்பி நான் கொண்டுபோறன் என்று கேட்டான் சின்னட்டி.

நடுவயதைத் தாண்டி, குடும்ப பாரத்தால் நசியுண்டு, பசியினால் உடல் உலர்த்தப்பட்டு, ரிக்ஷா இழுப்புத் தொழிலால் கூனிய முதுகுடன் அவன் காட்சி தந்தான்.

''வேண்டாம்; நான் நடந்து போயிடுவன்.''

''அதுக்கில்லை ராசா. எனக்கொண்டும் புழைப்பில்லை... விடியக்காத்தாலை குடுக்கிறதைக் குடுங்க... ஏறுங்க தம்பி'' என்று கொஞ்சுதலுடன் கெஞ்சினான்.

நான் அப்பொழுது இளமைத் துடிப்பின் இலட்சியவாதி, மனிதன் மனிதனாக வாழ வேண்டும். ஒரு மனிதன் ஏறிக் குந்தியிருக்க, இன்னொரு மனிதன் மாட்டைப்போல இழுப்பது அநாகரிகமானது. இழுப்பது மனிதப்பண்பையே வேரறுக்கும் தொழில். சம தர்மக் கொள்கையில் ஒன்று ரிக்ஷாவில் ஏறாமலிருப்பதும் என்ற நியதியைக் கெட்டியாக நம்பியிருந்தேன். அந்த மனிதா பிமான ஜீவகாருண்யப் பிரச்சினையை எத்தனை வார்த்தைகளினாலும் எந்த விதமான தன்மைகளில் சொன்னாலும் அவன் விளங்கிக் கொள்ளமாட்டான் என்றே பட்டது. நிலைமை சங்கடமானதுதான்.



பதிலொன்றும் சொல்லாமல், நான் சிங்கள பேக்கரியையும் தாண்டி, நடந்து கொண்டிருந்தேன்.

ஒட்டமான, விரைவைப் பெறாத வேகமான நடையில் சின்னட்டி பின்னால் தொடர்ந்து வந்தான்.

''தம்பி, இஞ்சை பாரும்; ரெண்டு மூன்று நாளாய்க் காய்ச்சலாலை நான் ரிக்சோவைக் கையால் தொடக்கூட இல்லை. இண்டைக்குத்தான் வந்தனான். துலைதூரத்துக்கு ஓட ஏலாது. இப்பிடிக் கிட்டடி இடத்துக்கெண்டாலும் போனாத்தான் வீட்டிலை சோத்துலை கைவைக்கலாம். உங்கட உழைப்பிலை இது பெரிய காசே? நானொன்றும் பேசயில்லை. கொண்டுபோய் விடுறன். ஏதோ பாத்துக் குடுக்கிறதை மனசு போலக் குடுத்தாச் சரி'' என்று சொல்லி, ரோட்டில் சாக்கடை யோரமாக ரிக்ஷாவை நம்பிக்கையுடன் நிறுத்தினான்.

இரக்கத்தை யாசிக்கும் விழிகள்! பரிதாப உணர்வு நெஞ்சை குடைந்தது. இரக்கம் என்பது கண்ணீர். ஒரு கணத்தின் வெடிப்பில் தோன்றி உதிர்ந்துவிடுகின்றது. இரக்கத்திற்குப் பதிலாக வர்க்க ரீதியான இரத்த தான யாகம்தான் தொழிலாளிகளின் முழுவாழ்க்கையையுமே மாற்றியமைக்கும் என்று நான் நம்பும் தத்துவ விளக்கத்தில் நம்பிக்கை இழக்கவில்லை.

கைப்பெட்டியைத் தெருவில் வைத்துவிட்டு, பைக்குள் கைவிட்டுத் துளாவினேன். நான் இன்னமும் யோசிப்பதாகவே அவன் நினைத்திருக்க வேண்டும். என் கருமித் தனம் தான் எனது தயக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாமென்று அவன் கற்பித்திருக்கவும் கூடும்.

''தம்பி, உங்களிட்டை நான் கூட எடுக்கல்லை, ஐம்பேசேத்துக் காசுக்கு யோசிக்கிறியளே?'' தன் மன வெதும்பலின் உஷ்ணத்தை மூச்சாக வெளிவிட்டான்.

''உண்மையைச் சொன்னால் என்ன! உன்ரை ரிக்ஷாவிலை ஏறி உன்னிலை நான் சவாரி செய்யவிரும்பவில்லை. நீயும் மனுசன். நானும் மனுசன். அதுதான்... உனக்குச் சொன்னாலும் புரியாது போலை'' என்று சொல்லி அவன் கையில் ஐம்பது சதக் குத்திக் காசொன்றை எடுத்து வைத்துவிட்டு நடக்கத் தொடங்கினேன்.

என் சமதர்மக் கோட்பாட்டினைக் கெட்டியாகக் காப்பாற்றிவிட்ட வெற்றி முறுவல்!

சற்றுத் தூரம், வீதிக்குக் குடைபிடித்து நிழல் பரப்பும் வாகை மரத்தையும் தாண்டி, பிள்ளையார்கோவில் ஒழுங்கையையும் கடந்து நடந்திருப்பேன்.

ரிக்ஷா வேகமாக என்னைத் தாண்டி நின்றது. வெறு வயிற்றில் இழுத்த களைப்பு. மேலும் கீழும் வெட்டிக் கிளர்ந்தெழும் மூச்சினை விட்டுச் சின்னட்டி நின்றான்.

'இதென்னடா, காலங்காத்தாலை வம்பை விலைக்கு வாங்கியிருக்கிறேன்! இதுகளுக்கு எப்படிக் குடுத்தாலும் அண்டாது'. என்று என் பரம்பரையான மத்தியதரவர்க்க உணர்வு ஒரு கணம் தலைநீட்டி எட்டிப் பார்த்தது.

ஒரு இமைப்பொழுதுநேரத்தில் கல்லாகிய மனதுடன், ''என்ன சும்மா போகவிட மாட்டியே?'' என்றேன்.

சின்னட்டியின் கண்கள் கலங்கின. பசி வேக்காட்டில் உலர்ந்திருந்த உதடுகளை நாக்கால் நக்கிக் கொண்டான்.

''தம்பி! குறை நினைக்காதையும். நான் ரிக்சோக்காரன்: உழைச்சுப் பிழைக்கிறவன்: பிச்சைக்காரனில்லை!'' என்று சொல்லி நான் கொடுத்த நாணயத்தைத் திருப்பித் தந்து விட்டு ரிக்ஷாவை நிமிர்த்தினான்.

ஒரே ஒரு கணம்...

''அவன் மனிதன்!''

''மனிதன், உழைக்கும் சக்தியையே நம்பி வாழுபவன்.''

''இந்தா...''

''என்ன, தம்பி?''

''ரிக்ஷாவைக் கொண்டா.''

நான் ரிக்ஷாவில் ஏறிக்கொள்ளுகின்றேன்.

இந்தச் சம்பவங்களில் நீந்திய நான், அதற்குப் பின்னர் சின்னட்டியின் நிரந்தர வாடிக்கைக்காரர்களில் ஒருவனாகிவிட்டேன்! ஏறும் பொழுதெல்லாம் அவனும் நானும் கலகலப்பாகப் பேசிக்கொள்வோம்.

இன்று வழக்கத்திற்கு விரோதமான மௌனம்...

ரிக்ஷா ஸ்டேஷன் சந்தியால் திரும்பி, ஆஸ்பத்திரி வீதியில் ஓடிக் கொண்டிருக்கிறது.

''என்ன தம்பி, பேச்சுமூச்சைக் காணேன்? காணியிலை வழக்குச் சித்தா யங்களோ?''

''இல்லை சின்னட்டி. அவ்வளவு கரைச்சலில்லை. இண்டைக்கு எப்பிடியும் முடிஞ்சிடும். அது சரி... உன்ரை பாடு எப்பிடி?''

''தெரிஞ்சதுதானே! தம்பியைப் போலை ரெண்டொருத்தர் வந்தா உண்டு; இல்லாட்டிப் போனா, வெறும் ரிக்சோவை இழுத்துக் கொண்டு வீட்டை போகவேண்டியது தான்.''

''அப்ப வீட்டுப்பாடுகளை ஆர் கவனிக்கிறது.''

*‘‘ஏன் தம்பி, பொய்சொல்ல வேணும்? என்ரை மூத்தவன் இப்ப ராக்சியிலே வேலை செய்யுறான். சோத்துக்குப் புழையில்லை. பாடுபட்ட உடம்பு வீட்டிலை சும்மா குந்தி இருக்க முடியுதே? நான் இதை இழுக்கிறதும், என்ரை மோனுக்கும் புடிக்குதில்லை. என்னையும் கார் ஓட்டப் பழக்கிவிடுறானாம்... பேய்ப் பொடியன்! இந்த வயசுக்குப் புறகு எப்படிக் காரோட்டுறது எண்ட விசயம் எனக்கென்னவோ விளங்கேல்லை.’’*

*பழக்கப்பட்ட கால்களும், அந்தக் கால்களின் உதை சக்தியால் ரிக்ஷாவும் அடைக்கல மாதாகோவிலைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கின்றன...*



**- டொமினிக் ஜீவா -**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தினசரி | - | நாள்தோறும் |
| எற்றுண்டு | - | உதைபட்டு |
| கோலத்தை | - | அழகை |
| சின்னட்டி | - | ரிக்ஷாகாரரின் பெயர் |
| பிரபலஸ்தர் | - | பிரபல்யமானவர் |
| சோத்துக்கு புழையில்லை | - | சாப்பாட்டுக்கு குறைவில்லை |
| மோனுக்கு | - | மகனுக்கு |
| சமதர்மக்கோட்பாடு | - | பொதுவுடைமைக் கொள்கை |
| இலட்சியவாதி | - | குறிக்கோள் வழி நடப்பவர் |
| யாகம் | - | வேள்வி |
| சித்தாயங்கள் | - | சிக்கல்கள்/பிரச்சினைகள் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ரிக்ஷாக்களும் குதிரை வண்டிகளும் பயன்பட்ட காலம் போய் டாக்ஸிகள் வழக்கத்துக்கு வந்தபோது பயணிகள் பேரம் பேசாமலே டாக்ஸிகளில் ஏறியதற்கான காரணம் யாது?
2. இச்சிறுகதையில் கதை சொல்லியாக வரும் பாத்திரம் ரிக்ஷாவில் ஏறுவதற்காக முன்வைக்கும் காரணம் யாது?
3. இதே நபர் முன்னர் ரிக்ஷாவில் ஏற மறுப்புத் தெரிவித்ததற்கு முன்வைத்த காரணம் யாது?
4. ‘‘நான் ரிக்ஷாக்காரன்; உழைச்சுப் பிழைக்கிறவன்; பிச்சைக்காரனில்லை’’ என்ற கூற்று வலியுறுத்துகிற அம்சம் யாது?
5. ரிக்ஷாக்காரர் தொடர்ந்தும் அதே தொழிலை மேற்கொள்வதற்காகக் கூறும் காரணம் யாது?

## செயற்பாடு

‘இச்சிறுகதை உழைப்பின் மகிமையை எடுத்துக் காட்டுகிறது’ - விளக்குக.

# சொற்புணர்ச்சி II

## மெய் முன் உயிர்புணர்தல்

★ கல் + ஐ → கல்லை

பொன் + ஆபரணம் → பொன்னாபரணம்

மேலே உள்ள இரண்டு புணர்ச்சிகளிலும் நிலைமொழியீற்றில் மெய்யெழுத்துக்களும் வருமொழி முதலில் உயிரெழுத்துக்களுமே இடம்பெற்றுள்ளன. புணர்ச்சியின் போது இரண்டிலுமே நிலைமொழியீற்று மெய் இரட்டித்துப் புணர்ச்சி நடைபெற்றிருப்பதனை அவதானிக்கலாம். தனிக் குற்றெழுத்தை அடுத்து சொல்லிறுதியில் வரும் மெய்கள் வருமொழி முதலில் உயிர்வரின் இரட்டித்துப் புணரும்.

★ பால் + ஐ → பாலை

அவன் + ஆல் → அவனால்

கடல் + அலை → கடலலை

மேலே உள்ளவை இயல்பாகப் புணர்ந்துள்ளன.

தனிக்குற்றெழுத்தை அடுத்த சொல்லிறுதியில் வரும் மெய்கள் தவிர்ந்த ஏனைய சொல்லிறுதி மெய்கள் வருமொழி முதலில் உயிர்வரின் இயல்பாகப் புணரும்.

## மெய்முன் மெய் புணர்தல்

### அ) மகர ஈற்றுப் புணர்ச்சி

★ மரம் + கிளை → மரக்கிளை

வட்டம் + பெட்டி → வட்டப்பெட்டி

நிலம் + சரிவு → நிலச்சரிவு

மேலேயுள்ள புணர்ச்சிகளில் நிலைமொழியீற்றில் மகரமெய்யும் வருமொழி முதலில் வல்லின மெய்களும் வந்துள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் புணர்ச்சி எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதனை நோக்குவோம்.

நிலைமொழியீற்று மகரமெய்கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் இரட்டித்துப் புணர்ச்சி இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடியும்.

தொகைச் சொல்லாக்கத்தில் மகரஈற்றின்முன் வல்லினம் வந்தால் மகரஈறு கெட்டு வல்லினம் மிகும்.

★ மரம் + கொத்தி → மரங்கொத்தி
பழம் + சோறு → பழஞ்சோறு

சில சந்தர்ப்பங்களில் மகரஈற்றின் முன் வல்லினம் வந்தால் மகரஈறு கெட்டு வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிகும்.

★ பனை + தோப்பு → (பனை + அம் + தோப்பு ) → பனந்தோப்பு
தென்னை + குருத்து → (தென்னை + அம் + குருத்து) → தென்னங்குருத்து

சில தொகைச் சொல்லாக்கத்தில் தோன்றும் அம் சாரியையின் மகரஈறு வல்லினம் வந்தால் மகரஈறு கெட்டு வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிகும்.

★ மரம் + ஐ → (மரம் + அத்து + ஐ) → மரத்தை
பணம் + ஆல் → (பணம் + அத்து + ஆல்) → பணத்தால்

சில மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அத்துச்சாரியை பெற்றுப் புணரும்.

**ஆ) ணகர, னகர ஈற்றுப்புணர்ச்சி**

மண் + குடம் → மட்குடம்
காண் + சி → காட்சி

பொன் + காப்பு → பொற்காப்பு
பொன் + பதக்கம் → பொற்பதக்கம்

மேலேயுள்ள புணர்ச்சிகளை நன்கு அவதானிப்போம். நிலைமொழியீற்று ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவும் திரிபடைந்து புணர்ந்துள்ளன. எனினும் தற்கால வழக்கில் இவ்வாறு புணர்ச்சி எழுதுவது குறைவடைந்தே வருகின்றது.

**இ) லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி**

★ கல் + கள் → கற்கள்
கடல் + கரை → கடற்கரை

நாள் + கள் → நாட்கள்
முள் + செடி → முட்செடி

மேலேயுள்ள புணர்ச்சிகளை அவதானித்தால் நிலைமொழியீற்று லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரிபடைந்து புணர்ந்துள்ளமையை அறியமுடியும்.

★ கால் + கள் → கால்கள்
நூல் + கள் → நூல்கள்

மேலேயுள்ள புணர்ச்சிகள் இயல்பாகவே இடம்பெற்றுள்ளன. நெட்டுயிர்களை அடுத்துவரும் லகர ஈறு மாற்றமடைவதில்லை.

★ நல் + நூல் → நன்னூல்
எள் + நெய் → எண்ணெய்

மேலேயுள்ள புணர்ச்சிகளில் லகர, ளகர ஈற்றின் முன் மெல்லினம் வந்த சந்தர்ப்பங்களில் அவை முறையே னகர, ணகரங்களாக திரிபடைந்துள்ளன. தற்கால வழக்கில் லகர, ளகர ஈற்றின் முன் மெல்லினம் வரும் சந்தர்ப்பங்களில் அவை முறையே னகர, ணகரங்களாகத் திரிபடைதல் மிகக்குறைவு.

**ஈ) யகர ஈற்றுப் புணர்ச்சி**

★ தாய் + பாசம் → தாய்ப்பாசம்
நாய் + குட்டி → நாய்க்குட்டி

மேலேயுள்ள புணர்ச்சிகளில் வல்லினம் மிகுந்துள்ளதனை அவதானியுங்கள்.

தொகைச் சொற்களில் யகர ஈற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

★ மெய் + ஞானம் → மெய்ஞ்ஞானம்
செய் + நன்றி → செய்ந்நன்றி

தனிக்குறிலை அடுத்து நிலைமொழியீற்றில் யகரமெய் வந்து வருமொழி முதலில் மெல்லினத்தோடு புணரும் புணர்ச்சியே மேலுள்ளது.

இங்கு மெல்லினம் மிகுந்துள்ளமையை அவதானிக்கலாம். ஆனால் தற்கால வழக்கில் இவ்வாறான புணர்சிகள் குறைவாகும்.

**உ) ரகர ஈற்றுப் புணர்ச்சி**

தேர் + திருவிழா → தேர்த்திருவிழா
வேர் + கிழங்கு → வேர்க்கிழங்கு

மேலே நிலைமொழியீற்றில் ரகர மெய்யும் வருமொழித் தொடக்கத்தில் வல்லின மெய்யும் வந்து புணர்ந்துள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொகைச் சொல்லாக்கத்தின்போது வல்லினம் மிகும். ஏனைய சூழல்களில் இயல்புப் புணர்ச்சி இடம்பெறும்.

**ஊ) ழகர ஈற்றுப் புணர்ச்சி**

தமிழ் + தென்றல் → தமிழ்த் தென்றல்

தமிழ் + சங்கம் → தமிழ்ச் சங்கம்

மேலுள்ள புணர்ச்சிகளில் நிலைமொழியீற்றில் ழகர மெய் வந்து வருமொழித் தொடக்க வல்லின மெய்யுடன் புணர்ந்துள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொகைச் சொல்லாக்கத்தின்போது வல்லினம் மிகும். ஏனைய சந்தர்ப்பங்களில் இயல்புப் புணர்ச்சியாக அமையும்.



**பயிற்சி**

**பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக; அவற்றில் புணர்ச்சியின்போது இடம் பெற்ற மாற்றங்களை இனங்கண்டு எழுதுக.**

1. ஆணழகன்
2. பாற்பண்ணை
3. கட்பொறி
4. தென்னோலை
5. நாட்குறிப்பு
6. இரும்புப்பெட்டி
7. சதுரப்பலகை
8. பாற்குடம்
9. முட்செடி
10. தமிழ்க் கவிதை

# விமர்சனம்

உலக இலக்கிய மரபில் இலக்கியம் உருவான சமகாலத்திலேயே இலக்கிய விமர்சனம் என்ற முறையும் தோன்றிவிட்டது. இலக்கிய விமர்சனத்துக்கு உள்ளாகாத இலக்கியம் தன்னைக் கூர்மைப் படுத்திக்கொள்ள முடியாது என்பது அறிஞர்களின் கருத்தாகும். தமிழில் தொல்காப்பியர் காலத்திலிருந்தே இலக்கிய விமர்சனம் ஆரம்பித்துவிட்டதை எம்மால் அறியமுடிகிறது. இலக்கிய விமர்சனமானது சமகால இலக்கிய நிகழ்வுகளுக்கும் எதிர்கால இலக்கிய தேவைகளுக்கும் இடையே இணைப்பினையும் இயைபினையும் ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது. எனவே இன்றைய மாணவ சந்ததியினர் சிறந்த வாசகராகத் திகழவும் உயர்தரமான ஆக்க சிந்தனையாளராக மிளிரவும் வேண்டுமெனில் விமர்சனத்தின் முக்கியத்துவம் பற்றி அறிந்தவர்களாகத் திகழ்வது அவசியமானதாகும். இதன் வாயிலாகத் தாமே பரிணமிக்க விமர்சகர்களாகவும் வேண்டியது அவசியமாகும்.

## விமர்சனம் என்றால் என்ன?

1. ஓர் இலக்கியப் படைப்பின் பயனாக வாசகர் அடையும் பயன், அனுபவக் குறிப்புகள் தான் விமர்சனம்.

2. இலக்கிய விமர்சனம் என்பது குறை நிறைகள் கண்டு, தரம் அறிந்து வகைப்படுத்தும் ஓர் செயற்பாடு எனவும் கூறலாம்.

ஓர் இலக்கியத்தைப் படித்து அதன் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி தரமான இலக்கியப் படைப்பிற்கு வழி காட்டுபவரை **விமர்சகர்** என்போம்.

## விமர்சனத்தின் பயன்கள்.

1. ஓர் இலக்கியம் சமூகத்தில் உயர் மதிப்பீட்டைப் பெற வழிவகுக்கும்.
2. படைப்பாளிகள் தரமான படைப்பை உருவாக்க உதவும்.
3. சிறந்த வாசகர்களை உருவாக்கத் துணை செய்கிறது.
4. இலக்கியப் படைப்பின் உண்மையான நோக்கை அறிய உதவும்.
5. சமூகத்தின் அழகியல் உணர்வையும் இரசனை மட்டத்தையும் விருத்திசெய்யும்.

**விமர்சகரின் பண்புகள்**

தொடர்வாசிப்பை மேற்கொள்பவர்.

இலக்கியத்தின் தரத்தை அறிய உதவுபவர்.

சமூக அக்கறை மிக்கவராக இருப்பவர்.

நடுநிலைமை கொண்டவர்.

பன்னூற் புலமை கொண்டவர்.

நுண்ணிய அறிவுடையவர்.

துணிவுடையவர்.

**பயிற்சி**

1. விமர்சனம் என்றால் என்ன என்பதற்குரிய மேலதிக விளக்கங்களை தொகுக்குக.
2. விமர்சனம் செய்யப்படுவதன் நோக்கம் குறித்து கருத்துரைக்குக.
3. விமர்சனத்தினால் ஏற்படும் நன்மைகளை அட்டவணைப்படுத்துக.

**செயற்பாடு**

ஏதேனும் ஒரு இலக்கியத்தின் சிறுபகுதியை விமர்சித்து சிறுகட்டுரை எழுதுக.

# 19 காட்டு வழி



ஒற்றை யடிப்பாதை – அதில்
ஊரிலுள் ளோர்பலர் போயறி யார்; அதன்
சுற்றுப் புறங்களிலே – வளர்
தூறுகள் செல்வதற் கூறு விளைத்தன;
முற்றி முதிர் செடிகள் – கொடு
முட்களை நீட்டி என் பக்கம் முறைத்தன;
பற்றிப் படர்கொடிகள் – பெரும்
பாம்புகள் போற்பயம் மேம்படச் செய்தன.

வண்ணச் சிறுமலர்கள் – வெயில்
வாட்டம் தவிர்த்துநின் றாட்டம் பயின்றன;
எண்ணில் இலைக்கூட்டம் – எனை
எட்டியும், கிட்டியும், தொட்டும் களித்தன;
விண்ணிற் சிறிதுயர்ந்தே – வளர்
வீரை மரங்களும் காரை இனங்களும்
கண்ணில் உறுத்துகின்ற – அந்திக்
கற்றை ஒளியினைச் சற்று மறைத்தன.

பட்டின் மெதுமைதரும் – சிறு
பன்னிறப் பூச்சிகள் மின்னிப் பறந்தன;
கொட்டும் குளவியினம் – பெருங்
கூட்டினில் மொய்த்திசைப் பாட்டு மொழிந்தன;
முட்டை சுமந்தனவாய் – வலை
மூடிக் கிடந்தனவாய் கோடி சிலந்திகள்;
அட்ட திசைகளிலும் – நிறை
அம்புகள் போற்பல தும்பி பறந்தன.

பச்சைக் கிளியினங்கள் – இரை
பற்றிப் படர்ந்தன பற்றைகள் மீதினில்;
இச்சைப் படி அமர்ந்தே – செவிக்
கின்ப மழலை அளித்தன பூவைகள்;
அச்சம் நிறைந்தனபோல் – என
தண்டையி லேகவு தாரிகள் ஓடின;
குச்சு நிறைபுதரிற் – சிறு
கூடுக ளிற்பல காடைகள் தங்கின.

நாவி இனப்பூனை – கொடும்
நஞ்சுமிழ் பார்வையில் அஞ்ச விழித்தது;
தாவி விரைந்தமுயல் – அயல்
சார்ந்திடு பற்றையுட் சேர்ந்து மறைந்தது;
மேவும் எலிக்கூட்டம் – வளை
வீழ்ந்து கரந்தது தாழ்ந்திடு கொம்பரில்
வாவும் அணிற்குலங்கள் – எனை
வாவென் றழைத்தன; வாழ்த்தி ஒலித்தன.

மேலும் நடக்கலுற்றேன் – புவி
மேவும் உயிர்க்குலம் யாவும் இயற்கையின்
கோல எழில்படைத்தே – இனம்
கூடிக் குதூகலித் தாடிப் பயின்றன;
நீலத் திசை இழுத்தான் – இருள்;
நின்று திரிந்தன சென்றே உறங்கின;
காலை திரும்புகிறேன் – அன்னை
காடே, நீ என்னையும் பாடவைத் தாயடி!



– கதிரேசன் – (செ. கதிரேசர்பிள்ளை)
''ஈழத்துக் கவிதைக் கனிகள்''

## அரும்பதங்கள்

இச்சை - விருப்பம்

பூவை - மைனா/நாகணவாய்

தூறுகள் - புதர்கள்

காடைகள் - ஒரு வகைப் பறவைகள்

கரந்தது - மறைந்தது

அட்டம் - எட்டு

கொம்பு - மரக்கொப்பு

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. காட்டின் ஒற்றையடிப் பாதையில் ஊரிலுள்ள பலரும் போக விரும்பாமல் இருப்பதற்கான காரணம் யாது?
2. 'வெயில் வாட்டம் தவிர்த்து' நடைக்கு இன்பமூட்டுவன எவை?
3. செவிக்கு இன்பமளிப்பன எவை?
4. காட்டுப்பாதையில் அச்சம் தரும் அம்சங்கள் யாவை?
5. 'அன்னைக் காடென ' மகிழ்ந்து பாடவைத்த அம்சங்கள் எவை?

## செயற்பாடு

பாடலின் பொருள் துலக்கமுறும் வகையில் உரைநடை ஆக்கம் ஒன்றை எழுதிக் கலந்துரையாடுக.

# வழுநிலை வழாநிலை

ஆலமரம் ஒன்று நிழல் பரப்பி நின்றன

மேற்குறிப்பிட்ட வாக்கியம் பொருத்தமான முறையில் எழுதப்பட்டுள்ளதா? இதுவரை நீங்கள் கற்றவற்றை நினைவுபடுத்தி சிந்தியுங்கள்.

மேலுள்ள வாக்கியத்தில் எழுவாய் ஆலமரம். இது அஃறிணை ஒருமைக்குரிய படர்க்கைச் சொல்லாகும்.

மேற்குறிப்பிட்ட வாக்கியத்தின் பயனிலை நின்றன என்பதாகும். இது அஃறிணை பலவின் பாலுக்குரிய பன்மை வினைச்சொல்லாகும்.

அஃறிணை ஒருமைக்குரிய எழுவாய்க்கு பலவின் பால் பன்மைக்குரிய பயனிலை வந்துள்ளது. இது பொருத்தமானதா?

★ இல்லை.

இதனால் மேற்குறிப்பிட்ட வாக்கியம் தவறானது (வழுவானது). இத்தகைய வாக்கியங்களையே வழுவாக்கியங்கள் என்போம். இதனைச் சரியான முறையில் எழுதிப்பார்ப்போம்.

ஆலமரம் ஒன்று நிழல் பரப்பி நின்றது.

இத்தகைய வாக்கியங்களை வழாநிலை வாக்கியங்கள் என அழைப்போம்.

வழுநிலை வாக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **திணைவழு:** ஒரு திணைச்சொல்லை மற்றொரு திணைப் பொருளிற் சொல்வது.

உதாரணம் - அவன் வந்தது.

2. **பால் வழு:** ஒரு பாற்சொல்லை பிறிதொரு பாற்சொல்லோடு முடித்தலாகிய வழு.

உதாரணம் - அவன் வந்தாள்.

3. **எண் வழு:** ஒருமைச்சொல்லை பன்மைச்சொல்லோடும் பன்மைச்சொல்லை ஒருமைச்சொல்லோடும் முடித்தலாகிய குற்றம்.

உதாரணம் - மாடுகள் பட்டிக்குத் திரும்பி வந்தது.

4. **இடவழு :** தன்மை, முன்னிலை, படர்க்கை போன்ற இடங்களை வழுவாகக் கூறுதல்.

உதாரணம் - நீ வந்தாள்

5. **கால வழு :** ஒரு காலச்சொல் தன்னோடு இயையாக் காலமொடு சேர்ந்துவரும் குற்றம்.

உதாரணம் - நாளை வந்தான்.

6. **வினா வழு :** வினாவைப் பொருளியைபில்லாமல் வழங்கும் குற்றம்.

உதாரணம் - ஒரு விரல் காட்டி, நெடிதோ, குறிதோ என்று கேட்பது.

7. **விடை வழு:** வினாவுடன் இயைபில்லாமற் கூறப்படும் விடை.

உதாரணம் - சீதைக்கு இராமன் என்னமுறை என்று வினாவ இராமன் வில் வித்தையில் சிறந்தவன் என விடையிறுப்பது.

8. **மரபு வழு :** தொன்று தொட்டு வழங்கி வரும் முறைமைக்கு மாறானது.

உதாரணம் - கப்பல் ஓட்டுபவனை மீகாமன் என்பதும் தேர் செலுத்துபவனை பாகன் என்பதும் மரபு. இதற்கு மாறாக கப்பல் ஓட்டுபவனை பாகன் என்பதும் தேர் செலுத்துபவனை மீகாமன் என்பதும் மரபு வழுவாம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.**

1. பசுக்கூட்டம் பயிரை அழித்தன.
   ……………………………………………………..
2. யானைகள் காட்டில் கூட்டம் கூட்டமாய் நின்றது.
   ……………………………………………………..
3. தகுந்த பருவத்தாலன்றிப் பழங்கள் பழுக்கமாட்டாது.
   ……………………………………………………..
4. மாணவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் தரமானதாக இருந்தன.
   ……………………………………………………..

5. மனிதனோ வெருளியோ அங்கு தோன்றுவன.

.........................................................

6. நான் தான் நீர் இறைத்தது.

.........................................................

7. சமூக மூடநம்பிக்கைகள் ஒழியாது.

.........................................................

8. செய்தி, வாசிப்பது கண்ணபிரான்.

.........................................................

9. உண்மையும் உயர்வும் போற்றப்பட்டது.

.........................................................

10. அவன் தன் புத்தகங்கள் தொலைந்ததாகக் கூறினார்.

.........................................................

## பழமொழிகள்

காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொருட் செறிவுமிக்க தொடர்களான பழமொழிகள் சிலவற்றை முன்னைய வகுப்புக்களில் கற்றுள்ளோம். இங்கும் சில பழமொழிகளை அறிந்து கொள்வோம்.

★ அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
(விடா முயற்சி பயன்தரும்)

★ அலைமோதும்போதே தலை முழுகு
(சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது)

★ இரக்கப்போனாலும் சிறக்கப்போ
(வறுமையிலும் செம்மை)

★ உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்
(பொய்ம்மையின் கேடு)

★ எருமை வாங்கும் முன் நெய்க்கு விலை பேசாதே
(அளவு கடந்த கற்பனை கூடாது)

★ ஐந்து பணத்திற்குக் குதிரையும் வேண்டும் ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
(பேராசை)

★ கெடுகுடி சொற்கேளாது
(தீய வழியை விரும்புபவர் நற்புத்தி கேளார்)

★ தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
(இரத்த உறவின் வலிமை)

★ பகையாளி பகையை உறவாடிக் கெடு
(பகைவருடன் உறவு கொண்டு பகை போக்குதல் நன்று)

★ வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு
(போலி நியாயம்)



## பயிற்சி

**1. பின்வரும் பழமொழிகளை உணர்த்தும் பொருளை எழுதுக.**

1. தானே கனியாத பழத்தைத் தடி கொண்டடித்தால் கனியுமா?

2. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையாதே.

3. இட்டுக் கெட்டார் எவரும் இல்லை.

4. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.

5. தன்னுயிர் போல மன்னுயிரையும் நினை.

**2. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்திசெய்க.**

1. உப்பிட்டவரை ..................................................

2. .................................... தெய்வமே துணை

3. அற்பர் சிநேகம் ....................................

4. சித்திரமும் கைப்பழக்கம் ....................................

5. ....................................... பால் அல்ல.

# 20 சகுந்தலை நாடகம் II

**காட்சி - 3**

இடம் :- அத்தினாபுரி அரண்மனை வாயில்

காலம் :- நண்பகல்

பாத்திரங்கள் :- துஷ்யந்தன், வாயிற்காவலன், புரோகிதர், சோமநாதர், சகுந்தலை, கௌதமி, சார்ங்கரவன், சாரத்துவன் முதலியோர் (சகுந்தலை முதலியோர் அத்தினாபுரி அரண்மனை வாயிலில் நிற்கிறார்கள்.)

சார்ங்கரவன்:- (வாயிற்காவலனுடன்) நாங்கள் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்திலிருந்து வருகின்றோம். அரசருக்கு செய்தி யொன்றினை வழங்கவேண்டும்.

வா. காவலன் :- (பெருமூச்சுவிட்டபடி) இவர்கள் கொண்டு வந்திருப்பது கண்ணுவ முனிவரது செய்தி. அதனைத் தாமதப்படுத்தல் தகாது. ஆனால் மன்னன் இப்பொழுதுதான் அரசகாரியங்களைக் கவனித்துவிட்டு இளைப்பாறச் சென்றுள்ளார். இந்த நேரத்தில் முனிவரின் செய்தி வந்துள்ளது. சூரியன் ஒளியையும், வெப்பத்தையும் கொடுப்பது போல், காற்று அல்லும் பகலும் அயராது வீசிக் கொண்டிருப்பது போல், ஆதிசேடன் இப்பூவுலகை எந்நேரமும் தாங்கிக் கொண்டிருப்பது போல், ஒரு நாட்டின் அரசரும் குடிமக்களைக் கண்ணை இமைகாப்பது போல் எந்நேரமும் விழிப்புடன் காத்துக் கொண்டே இருக்க வேண்டும். அரசருக்கு ஏது ஓய்வு? (துஷ்யந்தனிடம் செல்கிறான்.)

துஷ்யந்தன் :- என்ன செய்தி கொண்டு வந்தாய்?

வா. காவலன் :-அரசே, ஆசிரமவாசிகள் அரண்மனை வாயிலில் நிற்கிறார்கள். கண்ணுவ முனிவரிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறார்களாம். அதனைத் தங்களிடம் நேரிற் கையளிக்க வேண்டுமாம்.

துஷ்யந்தன் :- கண்ணுவ முனிவர்களின் தூதுவர்களா? அப்படியானால் அந்த ஆச்சிரமவாசிகளை நம் வேதவழக்கின்படி வரவேற்று, வேள்விச்சாலைக்கு அழைத்து வருமாறு புரோகிதர் சோமநாதரிடம் கூறு. (துஷ்யந்தன் வேள்விச்சாலைக்குச் செல்கின்றான். புரோகிதர் சோமநாதர், சகுந்தலை மற்றும் ஆச்சிரமவாசிகளை வேள்விச்சாலைக்கு அழைத்துச் செல்கிறார்)

(வேள்விச்சாலை)

சோமநாதர் :- அரசே, இவர்களிடம் கண்ணுவதேவர் அனுப்பிய செய்தியொன்று இருக்கிறதாம். அதனைத் தருவதற்கு இங்கு வந்துள்ளார்கள்.

துஷ்யந்தன் :- கண்ணுவ முனிவரின் செய்தியா? விரைந்து கூறுங்கள்.

சார்ங்கரவன் :- அரசே, தங்களுக்கு மங்களம் உண்டாகுக, எதிலும் வெற்றி பெறுவீராக.

துஷ்யந்தன் :- முனிவர்களின் தவத்திற்கு இடையூறு எதுவும் இல்லையே? எல்லோரும் நலந்தானே?

சார்ங்கரவன் :- தங்கள் நல்லாட்சியில் தவச் செயல்களுக்கு ஏது இடையூறு?

துஷ்யந்தன் :- கண்ணுவ முனிவர் உலகின் நன்மைக்காக வாழ்பவர். அவரின் நலமெப்படி?

சார்ங்கரவன் :- நாளும் வேதம் ஓதும் முனிவர்களின் நலத்திற்கு எவ்வித குறையும் ஏற்படுவதில்லை.

துஷ்யந்தன் :- முனிவரிடமிருந்து என்ன செய்தி கொண்டு வந்தீர்கள்?

சார்ங்கரவன்:-அரசே, இதோ அவரின் செய்தியைக் கூறுகிறேன். ''மன்னனாகிய நீர் எனது மகள் சகுந்தலையைக் காந்தருவமணம் புரிந்தமை பற்றி அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். நான் தவச்செல்வம் உடையேன். நீர் அரசசெல்வம் உடையீர். இவளோ உம்மிடத்திற் பேரன்புடையவள். இவளை நும் மனைக்கிழத் தியாக ஏற்பீராக. இவள் நல்வினைப் பயன் எதுவோ அது நடக்கட்டும்'' இதைத் தான் கண்ணுவமுனிவர் உம்மிடம் கூறும் படி என்னைப் பணித்தார்.

துஷ்யந்தன் :- நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? முனிவரின் செய்தி எனக்கு வியப்பூட்டுகிறது. நீங்கள் கூறுவது என்ன கட்டுக்கதையா? புனை கதையா?

சகுந்தலை :- கொடுமை! இச் சொற்கள் என்னைச் சுடுகின்றன.

துஷ்யந்தன் :- என்ன! என்ன! இவளை நான் முன்பு மணந்துகொண்டேனா? இப் பெண்ணை முன்னர் கண்டதாகக் கூட எனக்கு நினைவில்லை.

சகுந்தலை :- ஐயகோ! இக்கடுஞ்சொற்கள் என் உள்ளத்தை வருத்துகின்றனவே.

சார்ங்கர்வன் :- அரசே, நீங்கள் இப்படிக் கூறுவது தர்மமாகுமா? பெண்பழி பொல்லாதது அரசே.

துஷ்யந்தன் :- நீங்கள் ஆச்சிரமவாசிகள். என் முன் பொய்யுரை பகர்வது தகுமா?

சார்ங்கரவன் :- அதிகாரம், புகழ், செல்வம் என்பன வந்துவிட்டால் மனிதருக்கு மதம் பிடித்துவிடுவதாகக் கூறப்படுகின்றது. தாங்களும் அதற்கு விதிவிலக்கல்ல போலும். உங்கள் மனமும் கணத்திற்கு கணம் மாறுகிறதே.

துஷ்யந்தன் :- முனிவர்களே இப்படியேன் என் மீது பழிசுமத்துகிறீர்கள்?

கௌதமி :- (சகுந்தலையின் முக்காட்டை நீக்குகிறாள்) மகளே, இனியாதல் உன் பதி உன்னைத் தெரிந்து கொள்ளட்டும். (அரசன் திகைத்து சிறிது நேரம் மௌனமாக இருக்கிறான்)

சார்ங்கரவன் :- அரசே, ஏன் மௌனம்? இப்போதாவது ஒப்புக்கொள்கிறீர்களா?

துஷ்யந்தன் :- இல்லை, இல்லை, இப்பெண்ணைக்கண்டதுமில்லை. மணந்த ஞாபகமும் இல்லை. இவளை நான் எப்படி ஏற்பேன்?

சார்ங்கரவன் :- கண்ணுவ முனிவரின் கூற்றையா நீர் அவமதிக்கிறீர்?



சாரத்துவன் :- சார்ங்கரவ, உன் வாதத்தை நிறுத்து. இனி சகுந்தலை பேசட்டும். சகுந்தலா, நீயே உன் நிலைமையை எடுத்துக்கூறு.

சகுந்தலை : - அரசே, முன்னாளிலே சூது வாது அறியாத என்னை மணந்து இப்பொழுது மறந்தவர்போல நடந்து கொள்வது தகாது.

துஷ்யந்தன்:- என்னை ஏனிப்படிக் குழப்புகிறாய்? நீதிவழி நின்று செங்கோலோச்சும் என் குலத்தின் கீர்த்தியையும், பெருமையையும் கெடுக்கப் பார்க்கிறாய். என்னை இழிந்தவனாக்கச் சூழ்ச்சி செய்கிறாயா?

சகுந்தலை :- உங்கள் ஐயத்தைப் போக்க உங்களால் தரப்பட்ட அடையாளச் சின்னத்தைக் காட்டவா?

துஷ்யந்தன் :- ஆம் அதுவும் நல்ல வழிதான். எங்கே காட்டு பார்க்கலாம்.?

சகுந்தலை :- (கணையாழியைத் தேடிப் பார்த்துக் காணாத நிலையில்) ஐயகோ! இது என்ன அபத்தம். என்கையிற் கிடந்த கணையாழியைக் காணவில்லையே.

கௌதமி :- சசி தீர்த்தத்தில் நீராடியபொழுது கணையாழி கழன்று வீழ்ந்து விட்டதோ என்னவோ!

துஷ்யந்தன் :- (புன்சிரிப்புடன்) நன்று! நன்று! இரு மடந்தையரும் என்னை ஏமாற்றவா பார்க்கிறீர்கள்?

கௌதமி :- நாங்கள் ஏமாற்றுபவர்கள் அல்லர்.

சகுந்தலை :- இது விதியா? இல்லை சதியா? நான் என்ன செய்வேன்!

துஷ்யந்தன் :- சாதுரியம் நிறைந்தவர்கள் பெண்கள். நீங்கள் அதனை நிரூபித்து விட்டீர்களே. குயில் அதன் குஞ்சுகளை எவ்வாறு வளர்க்கிறது என்பது இந்தக் குவலயம் அறிந்ததே.

கௌதமி :- அரசே, சகுந்தலை தபோவனத்தில் வளர்ந்தவள். வஞ்சனையோ, பொய்யோ அறியாதவள்.

துஷ்யந்தன் :- உங்கள் சாகசப் பேச்சை நம்புவதற்கு நான் முட்டாளல்ல.

சகுந்தலை :- (ஆத்திரத்துடன்) நாங்கள் எவரையும் முட்டாளாக்க வரவில்லை. உம்மைப்போல் உள்ளத்தில் நஞ்சும் உதட்டில் தேனும் உள்ளவர்களல்ல நாங்கள். ஐயகோ! நயவஞ்சகனின் கையிற் சிக்கி மானமிழந்த மங்கையாகிவிட்டேன். என் செய்வேன்!

சார்ங்கரவன் :- அரசே, எங்கள் குருவின் கட்டளையை நிறைவேற்றிவிட்டோம். இவளைக் கொண்டுவந்து இங்கு சேர்த்துவிட்டோம். இவள் உம்

மனைவி. அவளை நீங்கள் ஏற்கலாம். ஏற்காமல் விடலாம். அது உம் சித்தம் நாங்கள் செல்கிறோம். (புறப்படுகிறார்கள்)

சகுந்தலை :- ஆ! நீங்களும் என்னை விட்டு விட்டா செல்கிறீர்கள்? (அவர்களின் பின்னே செல்கிறாள்)

சார்ங்கரவன் :- நில். அங்கே, நீ விதைத்ததைத் தானே அறுவடை செய்கிறாய். (சற்று மனமிரங்கி) சகுந்தலா, நீ பதிவிரதை என்பது உண் மையானால் நீ பதிவீட்டில் இருப்பதே மேல்.

துஷ்யந்தன் :- முனிவர்களே, இவளை ஏனிங்கு விட்டுச் செல்கிறீர்கள்? ஆ! ஆ!! ஆ!!! நான் சொல்வதையும் கேளாமல் விரைந்து செல்கிறார்களே ... புரோகிதரே, இதற்கு என்ன செய்யலாம்? இப்பெண்ணை இங்கு விட்டுச் செல்கிறார்களே. எனக்கொரு வழிகூறும்.

புரோகிதர் :- இவள் இங்குள்ள மாதர் பள்ளியிற் சிலகாலம் தங்கியிருக்கட்டும்.

துஷ்யந்தன் :- அப்படியே ஆகட்டும்.

புரோகிதர் :- குழந்தாய், என் பின்னே வா. (சகுந்தலை அழுதுகொண்டு பின்னே செல்கிறாள்)

துஷ்யந்தன் :- இது என்ன ஒலி கேட்கிறது? (புரோகிதர் சிறிது நேரத்திற் திரும்பி வருகிறார்) புரோகிதரே, ஏன் திரும்பிவிட்டீர்?

புரோகிதர் :- அரசே, ஓர் அதிசய சம்பவம் நடந்தது. அதைச் சொல்லவே வந்தேன்.

துஷ்யந்தன் :- என்ன அது?

புரோகிதர் :- அந்த ஆச்சிரமவாசிகள் திரும்பிச் சென்ற பின்னர் அந்தப் பெண் பயந்து நடுங்கி அழத்தொடங்கினாள். சோதி போன்ற ஒன்று அங்கு தோன்றியது. அது அவளைத் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்று தேவமாதர் தடாகத்தில் மறைந்துவிட்டது.

துஷ்யந்தன் :- (துஷ்யந்தன் தனக்குள்) என்ன ஆச்சரியம்! என் மனம் கலங்குகிறது. அதிலேதும் உண்மை இருக்குமோ?

புரோகிதர் :- அரசே, சென்று ஓய்வெடுங்கள். அதுவே இப்போது உங்கட்குத் தேவை.

## காட்சி - 4

இடம் :- அத்தினாபுரி கடைத்தெரு

காலம் :- முற்பகல்

பாத்திரங்கள் :- மீனவர், காவலாளி

காவலன் 1 :- (மீனவனைப் பார்த்து) இது வைர மோதிரம் அரசரது நாமமும் இதிற் பொறிக்கப்பட்டுள்ளது. இதை எங்கே திருடினாய்?

மீனவன் :- ஐயா, நான் திருடனல்லன்; அப்படிப்பட்ட ஈனச்செயலை நான் செய்வதில்லை.

காவலன் 1 :- அப்படியானால் அரசர் இதை உனக்குத் தானஞ் செய்தாரா?

மீனவன் :- மன்னிக்க வேண்டும். நான் சக்கிராவதார நதிக்கரையில் மீன் பிடித்துச் சீவனம் செய்பவன்.

காவலன் 1 :- உன் வரலாறு எனக்கு அவசியமில்லை. இம்மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?

மீனவன் :- அதைத்தான் ஐயா, சொல்ல வருகின்றேன். நான் நேர்மையாகத் தொழில் செய்து என் குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறேன்.

காவலன் 1 :- நாங்கள் கேட்பது ஒன்று. நீ சொல்வது வேறு. உன் கன்னத்தில் இரண்டு போட்டாற்றான் உள்ளதைச் சொல்வாய். இம் மோதிரத்தை எங்கே களவாடினாய்?

மீனவன் :- ஆம் சுவாமி, அதனைத்தான் சொல்வேன். பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலைத்தான் செய்கிறேன். தூண்டில் வலை கொண்டு மீன்பிடித்து வருகிறேன்.

காவலன் 1 :- சரி, சரி விரைவாகச் சொல்.

மீனவன் :- வழக்கம்போல் அன்றொருநாள் மீன் பிடிக்கும்போது ஒரு செம்மீன் வலைக்குட்பட்டது. அம் மீனை நான் அரிந்து பார்த்தபோது இந்த மோதிரம் கிடைத்தது. அதை விற்கவே கொண்டுவந்தேன். அப்பொழுது நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டுவந்து விட்டீர்கள். நான் சொல்வது உண்மை. இதற்குமேல் எனக்கு வேறொன்றுந் தெரியாது.

(மீனவனை அழைத்துக்கொண்டு காவலாளிகள் அரண்மனை வாயிலுக்குச் செல்கிறார்கள். வாயிலில் மீனவனை ஒரு காவலாளியுடன் நிறுத்திவிட்டு மற்றவன் அரசனிடம் செல்கிறான்.

காவலன் :- இன்று கடற்கரையில் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு மீனவன் இந்தக்கணையாழியைக் கொண்டு விற்பதற்காக அங்கு வந்திருந்தான். இந்தக் கணையாழியில் தங்கள் நாமம் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அவனைப் பிடித்துக் கொண்டு இங்கு வந்தோம்.

துஷ்யந்தன் :- இதுதானா அந்தக் கணையாழி? ( துஷ்யந்தனின் மனத்தில் பழைய நினைவுகள் மீண்டும் தோன்றுகின்றன. சகுந்தலையின் நினைவு ஞாபகத்திற்கு வந்தது. அவள் அரசவையில் கூறிய வார்த்தைகள் காதிற்குள் கணீரென ஒலித்தன. மனம் வெதும்பினான். சற்றுநேரம் திகைத்தான். பின் நிதானமடைந்து) இந்தக் கணையாழி இங்கு இருக்கட்டும். நீ இந்தப் பொற்காசுகளை அந்த மீனவனிடம் கொடுத்து அவனை வீட்டிற்கு அனுப்பிவை. (மீனவனிடம் பொற்காசு களைக் கொடுக்கிறான் காவலாளி. மீனவன் பொற்காசு களைப் பெற்றுக் கொண்டு அரண்மனை வாயிலுக்குச் செல்கிறான்.)

துஷ்யந்தன் :- இந்தக் கணையாழி அன்று சகுந்தலையயிடங் கொடுத்த அதே கணையாழிதான். அவளை நான் காந்தருவமணம் புரிந்ததும் உண்மைதான். அது ஏன் என் ஞாபகத்திற்கு வரவில்லை? எது என்னை மறக்கச் செய்தது? சகுந்தலையைக் கண்டபோதுஞ் சரி, அவள் வார்த்தைகள் மூலம் அதனை நினைவுபடுத்த முயன்றபோதுஞ் சரி அந்த நினைவுகள் என் நினைவிற்கு வரவில்லையே! என்ன கொடுமை செய்துவிட்டேன் ! அவளை பலர் முன்னிலையில் அவமதித்துவிட்டேன். சகுந்தலையைக்கண்டு என்நிலைமையைக் கூறுவேன். மன்னிப்புக் கோரும் வரை எனக்கு நிம்மதியேது? சகுந்தலை. நீ எங்கிருக்கிறாய்? இதோ புறப்படுகின்றேன்.

(துஷ்யந்தன் சகுந்தலையைத் தேடிச்சென்று, துன்பங்கள் பலவற்றைச் சந்தித்து, இறுதியில் ஏமகூடமலையிலுள்ள தவப்பள்ளியில் சகுந்தலையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.)

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வேள்விச்சாலை | - | யாகசாலை |
| மனைக்கிழத்தி | - | மனைவி |
| பகர்வது | - | கூறுவது |
| கணம் | - | நொடிப்பொழுது |
| செங்கோல் | - | சிறந்த ஆட்சி |
| கீர்த்தி | - | புகழ் |
| குவலயம் | - | உலகம் |
| அல் | - | இரவு |
| பதிவிரதை | - | கற்புக்கரசி |
| பதி | - | கணவன் |
| புரோகிதர் | - | மதச்சடங்கு செய்யும் குரு |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அரசன் ஒருவனின் பணியென வாயிற்காவலன் எதனைக் கருதுகிறான்?
2. ஆசிரமவாசிகள் அரசரிடம் எதனைக்கோருவர் எனும் எதிர்பார்ப்பு துஷ்யந்த மகாராஜாவிடம் இருந்தது?
3. கண்ணுவ முனிவரின் செய்தி யாது? அதனை அறிந்து அரசன் கூறிய பதில் யாது?
4. துஷ்யந்தன் கருத்துக்கான மறுப்பு ஆசிரமவாசிகளிடம் எவ்வாறு வெளிப்பட்டது?
5. கணையாழி எவ்வகையில் அரசனின் பார்வைக்கு வந்தது? அதனைக் கண்டபோது அவனது உணர்வு வெளிப்பாடு எவ்வாறு அமைந்தது?

## செயற்பாடு

அத்தினாபுரி கடைத்தெருவில் மீனவனுக்கும் காவலாளிக்கும் இடையே இடம்பெற்ற உரையாடலை நடித்துக்காட்டுக.

# முன்னொட்டுக்களும் பின்னொட்டுக்களும்

விஞ்ஞானம்
அவமானம்
காப்பீடு
பொறுமை

மேலுள்ள சொற்களை அவதானிப்போம்.
அவை எவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன?

வி + ஞானம்
அவ + மானம்

மேலுள்ள சொற்கள், ஞானம், மானம் ஆகிய சொற்களுக்கு முன்னால் முறையே வி, அவ என்னும் ஒட்டுக்களை ஒட்டுவதன் மூலம் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சொற்கள் அல்லது உருபன்களுக்கு முன்னால் ஒட்டுக்கள் இணைக்கப்படுவதை முன்னொட்டுக்கள் என அழைப்போம்.

காப்பு + ஈடு
பொறு + மை

மேலுள்ள சொற்கள், காப்பு, பொறு ஆகிய சொற்களுக்கு பின்னால் முறையே ஈடு, மை என்னும் ஒட்டுக்களை ஒட்டுவதன் மூலம் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சொற்கள் அல்லது உருபன்களுக்குப் பின்னால் ஒட்டுக்கள் இணைக்கப்படுவதை பின்னொட்டுக்கள் என அழைப்போம்.

முன்னொட்டு, பின்னொட்டுக்களுக்கு மேலும் சில உதாரணங்களை அவதானிப்போம்.

## முன்னொட்டுக்கள்

| | |
|---|---|
| அஃறிணை, | கண்ணோட்டம் |
| மறுதலை, | மீயொலி |
| அநியாயம், | சகபாடி |
| பிற்காலம், | கையளித்தல் |
| முன்னேற்பாடு, | தலையெடுத்தல் |

**பின்னொட்டுக்கள்**

நோயாளி,
நியாயவாதி,
கருதுகோள்,
தனிமை,
உடன்பாடு,

வெளிப்படை
உள்ளுறை
மறுமை
கல்விமான்
வேலைக்காரன்

## பயிற்சி

**பின்வருவனவற்றுள் முன்னொட்டு, பின்னொட்டு என்பவற்றை வேறுபடுத்தி எழுதுக.**

அண்ணன்மார், உழைப்பாளி, மறுமலர்ச்சி, அகலம், கோழைத்தனம், அகாலம், வருகை, அவமானம், இடர்பாடு, பிற்போக்கு

## விவாதம்

விவாத நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்ததுண்டா? உங்கள் பாடசாலையில், பொது நிகழ்வுகளில், தொலைக்காட்சி முதலியவற்றில் நீங்கள் விவாத நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பீர்கள்.

அந்த நிகழ்ச்சியின் இயல்புகளை நீங்கள் அவதானித்து இருக்கின்றீர்களா?

விவாதம் என்பது பார்வையாளர்கள் முன்னிலையில் ஒரு விடயம் தொடர்பில் காரணகாரியத் தொடர்புகளுடன் தர்க்கரீதியாக இடம்பெறும் உரையாடல் ஆகும்.

ஒரு விடயம் அல்லது தலைப்பினை ஒட்டியும் வெட்டியும் தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன்வைக்கும் கலையே இதுவாகும்.

## விவாதத்தில் கருத்துக்களை முன்வைக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை

★ விவாதிக்கப்போகும் தலைப்பைப் பூரணமாக விளங்கிக்கொள்ளல்.

★ பொருத்தமான தகவல்களைத் திரட்டிக்கொள்ளல்.

★ தெளிவான உச்சரிப்புடனும் தொனி வேறுபாட்டுடனும் பேசுதல்.

★தலைப்பிற்குப் பொருத்தமானதும் சாதகமானதுமான கருத்துக்களை ஒவ்வொன்றாக முன்வைத்தல்.

★ சாதாரண கருத்திலிருந்து பிரதான கருத்துவரை வளர்த்துச் செல்லல்.

★ தேவையான கருத்துக்களை அழுத்தியும் மீள வலியுறுத்தியும் கூறல்.

★ எதிர்த்தரப்பினரது கருத்துக்களுக்கு சரியானதும் ஆதார பூர்வமானதுமான பதிற்கருத்துக்களை முன்வைத்தல்.

★ குழு ஒருமைப்பாட்டுடன் செயற்படல்.

★ சுற்றிவளைத்துப் பேசுதல், உபகதை சொல்லல், நேரிடையாகத் தாக்குதல், தலைப்பினின்றும் விலகுதல், சொற்பொழிவு போன்று நிகழ்த்துதல், கூறியது கூறல் போன்றவற்றைத் தவிர்த்தல்.

**செயற்பாடு**

**குழுக்களாகச் செயற்பட்டு பின்வரும் தலைப்புக்களில் விவாதியுங்கள்.**

★விஞ்ஞான வளர்ச்சியானது பாதக விளைவுகளையே அதிகளவில் ஏற்படுத்து கின்றது/இல்லை.

★இன்றைய மாணவர்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கம் நலிவடைந்து செல்கின்றது/இல்லை.

★ தொலைக்காட்சி பயனுள்ள ஒரு தொடர்புச்சாதனமாகும்/ இல்லை.

★ கற்பனையாற்றல் விருத்திக்கு இலக்கியக்கல்வியே சிறந்தது/ இல்லை.

★மாணவர்கள் மத்தியில் ஆரோக்கியமின்மை அதிகரிப்பதற்கு தவறான உணவுப்பழக்கமே காரணமாகும்/இல்லை.

# 21 பிசிராந்தையார் கண்ட சமுதாயக் காட்சி

அன்று ஒரு பெரியார் வந்தார். அவர் கபிலர். பரணர் வரிசையைச் சார்ந்த, சங்க காலச் சான்றோர்களில் சான்றோர்.

கசடறக் கற்றவர்; கற்றபடி நின்றவர். ஒளி படைத்த கண்ணும் தெளிவு பெற்ற மதியும் விநயம் நின்ற நாவும் முழுமைசேர் முகமும் படைத்தவர்.

நீண்ட நெடுங்காலம் உலக வாழ்வை நுகர்ந்தவர். ஆயினும் நரை, திரை, மூப்பு அவரிடம் நெருங்க அஞ்சிக் கிடந்தன.

அவர் ஒரு மாநாட்டில் நுழைந்தார். அங்கு பல சான்றோர்கள் குழுமியிருந்தார்கள்.

நடமாடும் சான்றாண்மையின் ஆற்றலைக் கண்டதும் பணிவன்புடன் யாவரும் ஒரு சேர எழுந்து நின்று, கைகூப்பி வரவேற்று அமரச் செய்தார்கள். எதிர்பாராது கிட்டிய வாய்ப்பில் மகிழ்ச்சி பூத்தார்கள். நமது சான்றோருடன் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

## புதுமைக்குக் காரணம்

அஞ்ஞான்று சிலர் ''சான்றீர்'' யாங்கள் உங்களை நெடுங்காலமாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். யாங்கள் சின்னஞ் சிறுவராயிருந்த காலத்தே உங்கள் புகழ் எம் செவிகளில் விழுந்ததுண்டு. அவ்வாறாயின் உங்களுக்கு ஆண்டு பலவாகி இருக்க வேண்டுமே? அப்படியாயின் உங்கட்கு நரைதிரை ஏற்பட்டிருக்க வேண்டுமே? அவை சிறிதும் உங்களிடம் காணப்படவில்லையே? இந்தப் புதுமைக்குக் காரணம் யாது என்று ஆவல் துடிக்க வினவினார்கள்.

நமது பெரியாரிற் பெரியாரான சான்றோர் தமது நீடித்த வாழ்நாளில் நுண்ணிய பல அனுபவங்களை தெள்ளிதில் கண்டார். தமிழ் இலக்கியங்களை எழுத்தெண்ணிக் கற்றவர். தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர். தமிழர் கண்ட உண்மைகளையும், இதரர் கண்ட உண்மைகளையும், சுருங்கச் சொன்னால் அக்காலம் கண்ட உண்மைகளைத் துணிந்து அறிந்து அமைந்தவர்.

வாழ்வின் இளமைக்கும் முதுமைக்கும் ஆணிவேர் எது என்பதை தெள்ளத்தெளிய அறிந்தவர்.

பொதுவாக மக்களுக்கு ஆண்டுகள் பல ஆக ஆக நரையும் திரையும் வந்து தழுவுகின்றன. என்றும் இளமையாயிருக்க எல்லோரும் விரும்புகிறார்கள். முதிய வயதில் நரை திரை இல்லாது காட்சியளிப்பவரைக் காண்பதுதான் அரிது.

### இயல்பான வழி

அழகும் இளமையும் அடைய அவா மிக்கு, சிலர் தப்பும் தவறுமான வழிகளில் வீண் முயற்சி செய்து ''உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா'' என்றாகி விடுகிறார்கள். காயகற்பம் தேடுகிறார்கள். சிங்கக் குட்டியை வென்ற சிட்டுக்குருவி இலேகியத்தை விழுங்குகிறார்கள். ''குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல'' இளமைக்கு முயன்று முதுமையை வரவழைத்துக் கொள்கிறார்கள். அகால நரை திரைகளை இன்று நாம் பரக்கக் காண முடியும். நமது நல்லிசைச் சான்றோர் நரை திரையை வென்றவர் அல்லவா? ஆகவே, நரை திரைகளை விலக்க அவர் காட்டும் வழி இயல்பானது - நிலையானது; என்றும் எங்கும் வெற்றி சூடுவது. நெடுநாள் திரையின்றி வாழவேண்டுமென்று கனவிலும் விரும்பியறியாதவர்களைக் கூட அந்நிலையில் இருத்துவது. எனவே அவர் கண்டதும், காட்டப்போவதுமான வழிதான் சாலச்சிறந்த விஞ்ஞான வழி.

### பெரியார் பதில்

நரை திரைக்கு ஆதாரம் கவலை. கவலைக்கு அடிவாரம் சமுதாயச் சூழ்நிலை. குறிப்பிட்ட சமுதாயச் சூழ்நிலை உருவாகி விட்டால், மனிதன் நரை திரை நீங்கி இளமையோடு வாழ முடியும். புராணம், 'சுவர்க்கத்தில்' நரை, திரை, பிணி, மூப்புக் கிடையாதென்று கற்பனைக் கதை சொல்லுகிறது. 'கவலை துறந்திங்கு வாழ்வதே வீடு' என்று 'மோட்சத்திற்கு' விளக்கம் தருகிறான் பாரதி.

நரை திரையிலாமைக்குக் காரணம் கேட்ட சான்றோர்களுக்கு நமது பெரியார் பதிலிறுத்தார்.

''என் வாழ்வைக் கவலை துளிகூடத் தொட்டதில்லை''

''எதனால்?''

''என் வாழ்வோடு, எனது மனைவி, மக்கள், இளையர், அரசன் என் போன்ற சான்றோர் வாழ்வும் குறிப்பிட்ட வண்ணம் இணைந்து, ஒரு சமூகச் சூழ்நிலை எனது சமுதாயச் சூழ்நிலையாக ஒளிவீசிக் கிடக்கிறது. அதனால்''

''அதனால் கவலை ஒழிவதெப்படி''?

''நான் அருள் பழுத்த, இனிமையும் பெருமையும் வாய்ந்த புனித வாழ்வு வாழ்கிறேன். என் வாழ்க்கைத் துணைவி 'செறிவும் நிறைவும்', 'செம்மையும்

*வெப்பமும்', 'அறிவும் அருமையும்' மிக்கவள். எனது மக்கள் பெற்றோர்க்கு இன்பம் பயக்கவல்ல அறிவு மிக்கவர்கள். என்னினும் இளையவர்களும் ஏவலர்களும் என் போலும் கண்ணோட்டம் படைத்தவர்கள். என் குறிப்பறிந்து நடப்பவர்கள். என் நாட்டு அரசன் முறையில்லாதன செய்யான். மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழ, ஒருக்காலும் இடம் கொடான். குடிகளை, 'வறிஞன் ஓம்பும், ஓர்செய் எனக் காத்து' இனிது அரசு செய்கிறான். மேலும் எனது ஊரில் சான்றோராய் விளங்குபவர் பலர். அவர்கள் அறிவு பழுத்து 'அமரருள் உய்க்கும்' அடக்கத்துடன் அருள்படிந்த வாழ்வில் திளைப்பவர்கள்.*

*இப்படி, எவ்விடத்தும், யாரிடத்தும் இணக்கமான வாழ்வு கொழிக்குமானால் கவலை திவலையும் கசிய வழியில்லை. மக்கள் நீண்ட நெடுங்காலம் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் எய்தி இளமை இன்பத்தை உளமார உயிரார நுகர முடியும். பல்லாண்டு நரை திரை அணுகாது வாழ முடியும்.''*

*இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் எழுந்த தமிழறிவின் முதிர்ந்த சிறந்த கருத்து இது.*

*புதிய உலகில் முன்னேறும் தமிழக மக்களுக்கு, ஒளி காட்டி வழிகாட்டும் அந்தப் பெருஞ்சான்றோர் யார்? அவர் பாடிய பாடல் எது?*

*அவர்தான் சங்ககாலப் பெருஞ்சான்றோரான பிசிராந்தையார். அவர் பாடிய பாடல் பின்வருமாறு;*

**''யாண்டு பலவாக**
**நரையில ராகுதல்**
**யாங்காகியிர்? என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியொடு**
**மக்களும் நிரம்பினர்;**
**யான் கண்டனையர் என்**
**இளையரும்; வேந்தனும்**
**அல்லவை செய்யான்**
**காக்கும்; அதன் தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான்**
**வாழும் ஊரே.''**



**- ப. ஜீவானந்தம் -**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| எஞ்ஞான்று | - | எப்பொழுதும் |
| இதரர் | - | ஏனையோர் |
| அல்லல் | - | துன்பம் |
| வறிஞன் | - | வறியவன் |
| அகால | - | காலமற்ற/காலம் கடந்த |
| ஆணிவேர் | - | தாய் வேர்/முக்கியமானது |
| காயகற்பம் | - | நீண்ட காலம் வாழ உடலுக்கு வலிமை தரும் மருந்து |
| அடிவாரம் | - | அடிப்படை |



## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்ககாலச் சான்றோர்களில் சான்றோரான பிசிராந்தையார் இக்கட்டுரையில் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளார்?
2. முதுமையின் அடையாளங்கள் எவை? இளமையை நீடிக்கப் பலரும் கையாளும் வழிமுறைகள் யாவை?
3. தமது இளமையின் நீடிப்புக்கு பிசிராந்தையார் கூறிய காரணங்கள் யாவை?
4. இன்றைய வாழ்க்கை நெருக்கடிகளின் பின்னணியில் பிசிராந்தையார் பாடலிலிருந்து எத்தகைய படிப்பினையைப் பெற இயலும் எனக் கட்டுரை ஆசிரியர் எதிர்பார்க்கிறார்?
5. கட்டுரை விவரணத்தை அடிப்படையாகக் கொண்டு பாடலடிகளைத் தற்கால உரைநடையில் எழுதுக.

## செயற்பாடு

ஏலவே கற்ற செய்யுள் ஒன்றின் பொருளை, இவ்வாக்கம் போன்று கதைப்பாங்கில் உரைநடையாக்கமாகத் தருக.

# வழுவமைதி

இரண்டு கண்ணும் சிவந்துவிட்டது
நாம் இளைஞராய் இருந்த காலத்தில் இந்த மைதானத்தில் தான் விளையாடுவோம்.

மேலுள்ள இரண்டு வாக்கியங்களையும் நன்கு அவதானியுங்கள். இவை இரண்டும் எம்மைச் சூழ உள்ளவர்களால் வழமையாக உபயோகிக்கப்படுகின்றனவேயாகும். ஆனால் இவை இலக்கணப்படி சரியானவையா? இல்லையே.

முதலாவது வாக்கியத்தில் இரண்டு என்னும் பன்மை எண் அடைக்கு கண் எனும் ஒருமைப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமையையும் அப்பெயரை எழுவாயாகக் கொண்டு சிவந்துவிட்டது எனும் ஒருமைப் பயனிலை பயன்படுத்தப்பட்டுள்ளமையையும் அவதானிப்போம். இதன் சரியான வடிவம். இரண்டு கண்களும் சிவந்து விட்டன என்பதேயாகும். எனினும் இவ்வாறில்லாமல் மேலுள்ளவாறே பொதுவாகப் பயன்படுத்துகின்றோம்.

இரண்டாவது வாக்கியத்தில் இளைஞராய் இருந்த காலத்தில் என்ற இறந்தகாலத் தொடருக்கு விளையாடுவோம் என்ற எதிர்காலப் பயனிலை பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிப்போம். இதன் சரியான வடிவம். நாம் இளைஞராய் இருந்த காலத்தில் இந்த மைதானத்தில்தான் விளையாடினோம் என்பதேயாகும். எனினும் இவ்வாறில்லாமல் மேலுள்ளவாறே பொதுவாகப் பயன்படுத்துகிறோம். இவ்வாறாக இலக்கண விதிப்படி பிழையாயினும் தொன்று தொட்டு உலக வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருவன சில உள்ளன. இவ்வாறு விதிவிலக்காக ஏற்று அமைதி கண்டவற்றை வழுவமைதி என அழைப்போம்.

வழுவமைதி பல வகைப்படும்.

**1. திணை வழுவமைதி**

எங்கள் செல்வம் எங்கள் பிள்ளைகள் தாம்.

**2. பால் வழுவமைதி**

இவன் ஆண்மையிலாப் பெண்.

**3. எண் வழுவமைதி**

தலையெல்லாம் வலிக்கிறது.

**4. இட வழுவமைதி**

*தங்கள் வரவு நல்வராகுக.*

**5. கால வழுவமைதி**

*சற்றுப் பொறு, இதோ வந்துவிட்டேன்.*

**6. மரபு வழுவமைதி**

*உனையொருத்தி போட்டாளே வேலையற்றுப்போய்.*

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்கள் எவ்வகை வழுவமைதி என எழுதுக.**

1. *கிளிப்பிள்ளை பேசுகிறார்.*
2. *நீயோ அவனோ யார் இதைச் செய்தார்.*
3. *தண்ணீரெல்லாம் தீர்ந்து விட்டது.*
4. *கடவுள் இருக்கின்றார்.*
5. *அம்மையே அப்பா ஒப்பிலா மணியே*

## நேர்காணல்

*பேட்டி, செவ்வி என்ற பெயர்களால் அழைக்கப்படும் நேர்காணல் என்பது இன்றைய உலகில் தனித்துவமான துறையாக வளர்ந்துள்ளது. நேர்காணல் என்பது ஒருவரோடு தொடர்பு கொண்டு கேள்விகள் கேட்டு விவரங்களைப் பெறும் ஓர் உரையாடல் ஆகும். அதாவது கேள்விகள் கேட்கும் செவ்வி காண்பவருக்கும் பதில்கள் தரும் செவ்வி கொடுப்பவருக்கும் இடையில் நிகழும் உரையாடலாகவே நேர்காணல் அமைந்திருக்கும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி, வானொலி முதலான மக்கள் தொடர்புச் சாதனங்களில் இடம்பெறும் நேர்காணலானது வாசகனுக்குப் பல்வேறு புதிய தரவுகளைத் தருவதுடன் புதிய அனுபவங்களையும் வழங்குகின்றது. ஒருவர் நேரிலோ தொலைபேசி வழியாகவோ, கடித வழியாகவோ, புதிய தகவல் தொடர்பு சாதன வழியாகவோ நேர்காணலை மேற்கொள்ளலாம். நேர்காணலின் நோக்கங்களைப் பொதுவாக மூன்று வகைக்குள் உட்படுத்தலாம்.*

1. நடப்பு அறிதல் - நடப்பு நிகழ்வுகள் குறித்த சுவையான தரவுகள், விபரங்கள், கருத்துக்களை அறியும் வண்ணம் அவற்றுடன் தொடர்புடையவரிடம் நிகழ்த்தப்படும் நேர்காணல்.

2. நிகழ்வு விவரம் அறிதல் - நடைபெற இருக்கும் முக்கிய நிகழ்வுகள், குறித்த விபரங்கள் முதலிய கருத்துக்களை அறியும் முகமாக அவற்றுடன் தொடர்புடையவரிடம் மேற்கொள்ளப்படும் நேர்காணல்.

3. கருத்து வெளிப்படுத்தல் - இலக்கியவாதிகள், தலைவர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் போன்றவர்களின் ஆளுமைத் திறன், தனித்துவங்கள், சிந்தனைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் நிகழும் நேர்காணல்.

**செவ்வி காண்பவருக்கு இருக்க வேண்டிய பண்புகள்**



1. துறை சார்ந்த அறிவு.
2. சிறந்த மொழியாளுமை.
3. சந்தர்ப்பத்துக்கேற்ப வினாவும் திறன்.
4. புதிய தொழில் நுட்பச் சாதனங்களைக் கையாளும் திறன்.
5. செவ்விக்கு முகம் கொடுப்பவரின் ஆற்றல், திறன்களை வெளிக்கொணரும் மனப்பாங்கு.
6. நியமமொழியில் உரையாடும் ஆற்றல்.
7. நேர்காணலுக்கு முகம் கொடுப்பவரின் உணர்வுகளை மதித்து நடாத்துதல்.
8. நேரத்தைக் கருத்திற் கொண்டு ஆக்கபூர்வமான வினாக்களை வினாவும் திறன்.
9. நேர்காணலுக்கு முகம் கொடுப்பவர் பற்றிய தகவல்களை முற்கூட்டியே அறிந்து வைத்திருத்தல்.
10. நேர்காணலுக்கு முகம் கொடுப்பவருக்கு நேர்காணலின் நோக்கத்தைத் தெளிவு படுத்தல்.

**நேர்காணல் ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டியவை**

- நேர்காணலுக்கு முகம் கொடுப்பவரை விடத் தன்னை விடய ஞான மிக்கவராக நேர்காண்பவர் கருதக் கூடாது.
- தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- நேர்காணலுக்கு முகங்கொடுப்பவர் கருத்துக்களை அலட்சியம் செய்யக் கூடாது.
- விவாதத்தைத் தவிர்க்க வேண்டும்.
- கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வினாக்களைத் தவிர்த்தல் வேண்டும்.
- திட்டமிடாத நோக்கமற்ற நேர்காணலைத் தவிர்த்தல் வேண்டும்.

**செயற்பாடு**

குழுக்களாக இணைந்து, உங்களது சூழலில் உள்ள பிரமுகர்களை நேர்கண்டு தொகுத்து எழுதுக.